இலண்டன்

# சுடரொளி

CHUDEROLI Nov - Dec / 2005



## 2 ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி 'புதுயுகத் தமிழர்' பரிசளிப்பு விழா சிறப்பு மலர்

£ 1.00

# A-Lanka Travel Ltd

171 Tooting High Street, Tooting, London SW17 0SZ
020 8672 5551, 020 8672 2010

Worldwide Travel Agent

**wimal@a-lankatravel.co.uk**
**www.a-lankatravel.co.uk**

**Special Rates for**
**Colombo £330 + tax,**
**Madras £410 + tax,**
**Canada £199 + tax,**
**Singapore and Europe**




**உலகின் எப்பாகத்திற்கும் மலிவான விலையில் விமானச்**
**சீட்டுக்கள் வாங்கிட நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம்**

**Main Agent in UK for Aero Lanka & Lion Air**

**Wimal@a-lankatravel.co.uk** **www.a-lankatravel.co.uk**

இலண்டன் வாழ் நம்பிள்ளைகள் எம் உறவுகளைக் கண்டு மகிழ்வதற்கும்
நல்லுர்க்குமரனைத் தரிசிப்பதற்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்




**அவசர உடன் டிக்கட்களுக்கு**
**அழையுங்கள் : 07956 206 709**
**விமல் / விஜி / நிரஞ்சன் /**
**ரஜீவன் / கலா**
Nik / Peter / Ruth ;

# சுடரொளி
# CHUDEROLI

கலை இலக்கிய அரசியல் சமூக இதழ்

சுடர் 4 ஒளி 8 நவம். - டிசம். 2005

**கௌரவ ஆசிரியர்:**
திரு. சி. சரவணபவன் (சிற்பி) M.A.

**ஆசிரியர்கள்:**
திரு. பொன் பாலசுந்தரம்
திரு. ஐ. தி. சம்பந்தன்

**ஆசிரியர் குழு ஆலோசகர்கள்:**
திரு. மயில் மனோகரன்
திரு. எஸ். கருணானந்தராசா
திருமதி திருச்செல்வஉமா ஜெயக்குமார்

**நிர்வாகம்:**
திருமதி. செல்வதி சம்பந்தன், B.A. (Hons)

**கணினி:**
திருமதி சரோஜா இலட்சுமணன்

**விளம்பரம்:**
க. தங்கராஜ், சிவா

**வெளியீடு:**
**Chuderoli Publication Society,**
15, Rutland Road, London E7 8PQ
United Kingdom
Tel: 0044 208 552 6992)
Mob: 07957 666 598
Email: itsampanthan@hotmail.com

**கொழும்புப் பிரதிநிதி:**
திரு. மன்மதராசா
செல்வி சு. தர்சினி
30/ St. Benedict's Mawathe,
Kotahena, Colombo-13
Sri Lanka
Tel: 0094 112390580

**தமிழகப் பிரதிநிதி:**
**திரு. இரா. மதிவாணன்**, எம்.எஸ்.ஸி.,
Tel : 0091 44 55180155 / 9444 111951
E-mail : eramathi@rediff.com

Annual Subscription (six issues)

| | |
|---|---|
| UK: | £12.00 |
| Europe: | £15.00 |
| India | Rs.150 |
| Sri Lanka | Rs.300 |
| All other countries: | £20.00 |


## இந்த இதழில்


1. முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் வாழ்த்துச் செய்தி 3
2. எமது நோக்கு 5
3. நன்றி நவில்கிறோம் 9
4. கவிதைக் கருப்பொருள் தேடி 10
5. பரிசுபெற்ற கவிஞர்களின் படங்கள் 11
6. வேழவேந்தனின் வெற்றிச் சுவடுகள் 18
7. சீனர்களின் மொழிப்பற்று 20
8. மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் 22
9. செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் - நூல் வெளியீடு 24
10. Sreemath Illakkanam Swamy 26
11. தமிழ் தந்த தாதாக்கள் 30
12. ஏசுவின் உபதேசங்கள் 32
13. மலையக விழிப்புணர்வின் ஓர் அறுவடை 34
14. ஈழத்து நாடகமேதை வைரமுத்து 36
15. அரசியல் தீர்க்கதரிசனமற்ற சிங்களத் தலைவர்கள் 38
16. பாட்டுக்கொரு புலவன் பாரதி 41
17. சி.டி. வடிவில் நாயன்மார்கள் வரலாறு 44
18. பண்பாட்டுக்கும் பழமைக்கும் இமயமலை 46


## கவியரசு கண்ணதாசன்



தமிழ்நாட்டில் ஆஸ்தானக் கவிஞராக விளங்கிய கவிஞர் கண்ணதாசன் கவி உலகில் சாதனை படைத்த மன்னன். கவிதையில் தமிழ் உலகில் பிரகாசித்த விடிவெள்ளி. கவிதையில் மக்களிடையே தமிழ் உணர்வு ஆறாகப் பாய வைத்தார்.

மனிதன் தவறு செய்வது இயற்கை. அத்தவறுகளை உணர்ந்து திருந்துபவன் மகாமேதை. இதற்கு இலக்கணமாக வாழ்ந்தவர், வாழ்ந்து காட்டியவர் கவிஞர் கண்ணதாசன்.

தவறுகளை உணர்ந்து திருந்தியவன் தெய்வமாகிறான். அவருக்கு ஞானஒளி ஊட்டியது இந்துமதத் தத்துவம். அவருக்கு வழிகாட்டிகளாக விளங்கியவர்கள் ஸ்ரீகாஞ்சி காம கோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராச்சாரியார், கிருபானந்த வாரியார் ஆவர்.

இந்து மதம் என்றால் ஆழமான தத்துவங்களை உள்ளடக்கியது; மிக உயர்ந்த வாழ்க்கைத் தத்துவங்கள் நிறைந்தது; அதை அணுகுவது கடினம்; அதன் அருமை பெருமைகளை, அர்த்தத்தை, வேதம் பயின்ற பண்டிதர்களும் அருள் பழுத்த ஞானிகளும் புரிந்து கொள்ளமுடியும், சாதாரண மக்களுள் அதை அணுகவோ, புரிந்து கொள்ளவோ முடியாது என்ற பயம் மேலிட்டிருந்தது. அந்தப் பயத்தைப் போக்கிச் சாதாரண மக்கள் இந்துத் தத்துவங்களை உணர்ந்து கொள்ள முடியும்; அதன் சாரத்தைப் புரிந்து கொள்ள முடியும் என்று மிக எளிமையாகவும், இனிமையாகவும் காட்டியவர் கவிஞர் கண்ணதாசன்.

எத்தனையோ அறநிலையங்கள் ஒன்று கூடிச் செய்யவேண்டிய காரியங்களை, போதிக்க வேண்டிய நற்கருத்துக்களை, நல்வழிப் படுத்திய பெருமைக்குரியவர் கவிஞர் கண்ணதாசன்.

கவிமேதையாக விளங்கிய கவிஞர் கண்ணதாசன் அவர்களை பல கவிஞர்கள் கலந்துகொள்ளும் 2ஆவது உலகத்தமிழ்க் கவிதை போட்டி பரிசளிப்பு விழா நிகழ்வில் நினைவு கூறுவதையிட்டு பெருமை அடைகின்றோம்.

# Direct Property Services

Residental sales, Lettings & Management

LANDLORD accreditation scheme

DPS Direct Property Services

கிழக்கு இலண்டனில் உங்களுக்கு
சேவை செய்ய காத்திருக்கின்றது
Direct Property Services

Call Us Now For



**Sales**
**Lettings**
**Finance**
**Mortgages**
**Business Loans**

## LANDLORDS

FREE VALUATION - NO OBLIGATION
guaranteed Rent Scheme Available for Short Term & Long Term
Efficient and Quick Landlord Payment
Best Rent Achieved
Friendly professional Advice from Our Experienced Representativies

## TENANTS

Looking to Rent
Make the Right Move
We Always have a large selection of Properties
available to Rent

Please call us with your requirements

**020 8472 4447**


212 A High Street North, East Ham
London E6 2JA
Tel : 020 8472 4447 / Fax: 020 8471 8126

மு. கருணாநிதி
தலைவர், தி.மு.க.

✆ : அலுவலகம்: 24320280
இல்லம் : 28111133

# வாழ்த்துச் செய்தி

17.10.2005



இங்கிலாந்து நாட்டின் தலைநகரான இலண்டன் மாநகரில் இயங்கி வருகின்ற 'சுடரொளி வெளியீட்டுக் கழகம்' உலகம் தழுவிய அளவில் மாபெரும் தமிழ்க் கவிதைப் போட்டி ஒன்றினை நடத்தியிருப்பதையும் அதில் சுமார் 400-க்கு மேற்பட்ட கவிஞர்கள் கலந்து கொண்டதையும் அறிந்து மகிழ்ச்சி யடைகிறேன்.

அந்தக் கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கவிஞர்களுக்குப் பரிசளிப்பு விழாம், அதனையொட்டிச் சிறப்பு மலரையும் பரிசு பெற்ற கவிதைகளின் தொகுப்பாக "புதுயுகத் தமிழர்" எனும் நூலையும் வெளியிடுவதுவும் பாராட்டுக்குரிய செயலாகும்.

நடைபெற்ற கவிதைப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்றவர் நம்முடைய கவிவேந்தர் வேழவேந்தன் என்ற செய்தி மேலும் மகிழ்ச்சியைத் தரத்தக்க செய்தியாகும்.

அந்த அரிய நிகழ்ச்சியை நடத்திய சுடரொளி வெளியீட்டுக் கழகத்துக்கும், பரிசுகளைப் பெற்ற கவிஞர்களுக்கும் என்னு டைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

தங்கள் அன்புள்ள,

(மு. கருணாநிதி)

பெறுநர்:

திரு. பொன். பாலசுந்தரம்,
தலைவர்,
சுடரொளி வெளியீட்டுக் கழகம்,
இலண்டன்.

அலுவலகம்:
அண்ணா அறிவாலயம்,
367-369, அண்ணா சாலை,
சென்னை - 60 018,

இல்லம்:
நெ, 15, 4-வது தெரு,
கோபாலபுரம்,
சென்னை - 600 086.



சுடரொளி

வெளியீட்டுக் கழகத்தின் காப்பாளர்

டாக்டர் **எஸ். நவரத்தினம்**

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

ஓர் இனத்தின் நாகரிக வளர்ச்சி கணிக்கப்படும்போது, அவர்களுக்குரிய கலை, கலாச்சாரப் பொக்கிஷங்களே கருது பொருளாக உள்ளன. அவற்றின் வளர்ச்சிக்குத் தகுந்த கவனம் செலுத்தப்படுகிறதா? என்பதனைக் கவனிப்பது வழக்கம்.

உலகில் மிகப் பெரிய பரிசாகக் கருதப்படும் நோபல் பரிசு பெறும் இலக்கியத்துக்கு ஒரு முக்கியத்துவம் கொடுப்பதை நாம் அறிவோம்.

இதே வகையில் தமிழ்- தமிழர் வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்ட 'சுடரொளி வெளியீட்டுக் கழகம்' 2 ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியைச் செவ்வனே நடத்தி அதற்குரிய பரிசளிப்பு விழாவை ஒழுங்காக நடத்தும் பணியை நாம் வாழ்த்துகிறோம்.

இக்கவிதைப் போட்டியில், தமிழர்கள் எங்கெங்கு வாழ்ந்தாலும், பங்கெடுத்துத் தமிழிலக்கிய வளர்ச்சிக்குப் பங்களிப்பது கடமையாகும்.

வாழ்க தமிழ்!

வளர்க தமிழ்க் கவிஞர்கள்!



சுடரொளி

வெளியீட்டுக் கழகத்தின் காப்பாளர்

**டாக்டர். சி. ஞானச்செல்வன்**

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி


பிரித்தானியாவின் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி பரிசளிப்பு விழாவைச் சிறப்புடன் சென்னை மாநகரத்தில் கொண்டாடுவதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது மொழியாகிய தமிழ் மொழி அழியாவண்ணம் இருப்பதற்கும் கவிஞர்களை ஊக்குவிப்பதற்கும், உலகின் பல பாகங்களில் வாழ்ந்து கொண்டு இருக்கும் தமிழ் மக்களை ஒன்றிணைப்பதற்கும் இக்கவிதைப் போட்டியை வருடா வருடம் நடத்தும் சுடரொளிக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.


தமிழராகிய நாம் எமது நாட்டைக் காப்பாற்றுவதுபோல எமது மொழி, கலாச்சாரம் முதலானவற்றை அழியா வண்ணம் காக்க வேண்டியது எமது கடமை. இந்தப் பணியில் ஒரு நோக்கம் தான் சுடரொளி நடத்தும் இந்தக் கவிதைப் போட்டி.

இந்தச் சேவை தொடர்ந்து நடைபெறுவதற்கும், புலம் பெயர் மக்களின் இளம் தலைமுறையினரும் இதில் பங்கு கொண்டு ஊக்குவிக்க வேண்டும் என்றும் மேலும் மேலும் சுடரொளி தனது சேவையைத் தொடர்ந்து திறம்பட செயலாற்ற இறைவனை வேண்டுகின்றேன்.

# எமது நோக்கு



தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்



## புகழ் பூத்த "புதுயுகத் தமிழர்" கவிதைப் போட்டிக் கவிஞர்களுக்கு நன்றி! வாழ்த்துகள்!

இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் நடத்திய "புதுயுகத் தமிழர்" உலகக் கவிதைப் போட்டியில் வெற்றிபெற்ற கவிஞர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த பாராட்டுக்கள். உங்கள் பணி தொடர வாழ்த்துக்கள்.

உங்கள் கவிதைகள் ஏற்கனவே பல சமுத்திரங்களையும் பல கண்டங்களையும் கடந்து பிரயாணம் செய்திருக்கும் செய்தி உங்களுக்கு ஆச்சரியம் தரலாம். கவிதைக்களைத் தெரிவு செய்த நடுவர்கள் இலண்டனில் இல்லை. கடல்கடந்த நாடுகளில்தான் இருக்கிறார்கள். இவர்களுக்கு அனுப்பி வைப்பதற்காக மட்டும் 2000க்கும் மேற்பட்ட பிரதிகள் சென்றுள்ளன.

அதிகளவு தூரம் உங்கள் கவிதைகள் விமானப் பயணம் செய்துள்ளன. கவிதைகளைப் போட்டிக்குச் சமர்ப்பிப்பதுடன் நீங்கள் ஓய்ந்துவிட்டீர்கள். ஆனால் உங்கள் கவிதைகளோ உறங்கவில்லை. துடிப்புடன் விழித்துக் கொண்டிருந்தன. பரிசு பெறாதவர்களுடைய கவிதைகளும் இதற்கு விதிவிலக்கானவை அல்ல.


சுடரொளி வெளியீட்டுக்கழகம் மிலேனியத்தில் "வருக தமிழர் பொற்காலம்" என்னும் கருவூலத்தில் கவிதைப் போட்டி நடத்தியது உங்களுக்கு ஞாபகம் இருக்கும்.

உலகெலாம் பரந்து வாழும் புலமை பெற்ற பல தமிழ்க் க்விஞர்கள் பங்கு பற்றியது எமது வெற்றியாகும்.

தெரிவை எப்படிச் செய்தீர்கள்? என்று உங்களில் சிலர் கேட்கலாம். அது ஒரு புதிர்தான்! கவிதைகளைச் சமர்ப்பித்தவர்களின் பெயரும் ஊரும் நாம் அறிவிக்கும்வரை நடுவர்களுக்குத் தெரியாமல் வைக்கப்பட்டிருந்தது. எல்லா விபரங்களும் எண்களுக்கள்தான் அடக்கமாக வைக்கப்பட்டிருந்தன. உங்களுக்குக் கிடைத்த எண், எண் ஜோதிட கணிப்பின்படி அதிஷ்ட எண் தானா என்பதை மட்டும் நீங்கள் அறிந்து மகிழ்ச்சி அடைந்தால் போதும். மேற்கொண்டும் விபரங்களை நாம் இப்போது வெளியிட்டால் எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் போட்டிகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடும். அதனால் இவ்வளவு விளக்கமும் போதும் என நினைக்கிறோம். உயர்கல்விப் பரீட்சை ஒன்றுக்குக் கடைப்பிடிக்கப்படும் வழிகாட்டலிலும் பார்க்கக் கடுமையான விதி முறைகளை நடுவர்கள் கடைப்பிடிக்க வேண்டியதாயிற்று.

### ஆச்சரியமும் அதிர்ச்சியும்

இப்போட்டி முடிவுகளினால் ஆச்சரியம் அடைந்தவர்களும் இருக்கிறார்கள். அதிர்ச்சி அடைந்தவர்களும் இருக்கிறார்கள். எப்படி இவ்வளவு திறமையான முடிவைச் செய்ய முடிந்தது என்று கேட்பவர்கள் ஆச்சரிய ரகத்தைச் சேர்ந்தவர்கள். பெரும்பகுதியான பரிசுகளும் தமிழ் நாட்டுக் கவிஞர்களுக்கே கிடைத்துவிட்டது எப்படி என்று கேட்பவர்கள் அதிர்ச்சி ரகத்துக்கு உரியவர்கள்.



ஞாலம்

முழங்கும்

தமிழ

நான்

மறை

நன்றே!



இப்படிக் கேட்பதற்கு அவர்கள் மனங்களில் எழுந்த ஆர்வமும் அக்கறையும் தான் காரணம் என்பதை நாம் அறிவோம். அவர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

நடுவர்கள் தீர்ப்பை மாற்றும் உரிமை சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் கட்டுக் கோப்புக்குள் உள்ள எவருக்கும் இல்லை. இந்தக் கொள்கையின் பலம், திருமலை நாயக்கர் மகால் தூண்களிலும் பார்க்கப் பலமானது. கவிதைப் போட்டி ஆரம்பமான நேரத்திலிருந்து முடிவு வரை எம்மை வழி நடத்தியது "நீதி" என்ற ஒரு சொல் தான். வேறு அளவுகோலை நாம் அணுகவில்லை. நடுவர்களுக்கும் இந்தச் சொல்லை எழுத்தில் கொடுத்துவிட்டோம். நடுவர்கள் மனுநீதிச் சோழர்களாகி விட்டார்கள்.

போட்டியில் வெற்றி பெற்றிருக்கும் கவிஞர்களில் அனேகர் சிறந்த கவிஞர்களென மக்களால் முத்திரை பதிக்கப்பட்டவர்கள். 5000 மைல்களுக்கு அப்பால் இருந்து கவிதைகளைத் தெரிவு செய்த நடுவர்களுக்கு, இவர்களுடைய கவித்திறனை மதிப்பிட முடிந்திருப்பது நடுவர்களின் திறமைக்குச் சான்றிதழாகி விட்டது. இதைவிட வேறு எப்படி அவர்களைப் பாராட்டுவது?

கவிதைப் பொங்கல் பானையிலிருந்து ஒரு சோற்றை எடுத்தோம். அது எமக்குப் பெருமை தருவதாக இருந்தது. எமது முயற்சிக்குக் கிடைத்த பெரும் வெற்றியாக மதித்தோம். ஒரு சமுதாயத்தினால் மதிக்கப்பட்ட ஏற்றுக் கொள்ளப்பட்ட பாராட்டப்பட்ட நாடறிந்த கவிஞர் கவிவேந்தர் கா. வேழவேந்தன் தான் இப்பெருமைக்கு உரியவரானார்.

அரசாங்கத்தில் அமைச்சராகப் பணிபுரிந்த ஒருவர், உலகக் கவிதைப் போட்டிக்கு தமது கவிதையை அனுப்பிக் கவிஞர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது. போட்டி முடிந்த பின்னர்தான் எமக்குத் தெரியவந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இனமானப் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் உட்பட ஏராளமான பேரறிஞர்களினால் பாராட்டப் பெற்றவர் இவர். இப்படியான ஊரறிந்த மக்களறிந்த கவிஞர் ஒருவர் இப்போட்டியில் முதலாவது பரிசுபெறக் கடல்கள் பல கடந்த நாடொன்றிலிருந்து தெரிவு செய்யப் பட்டமையைக் தமிழ்கூறும் நல்லுலகம் பாராட்டி மகிழும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

எமது பார்வையில் கவிஞர்கள் எல்லோரும் கவிஉலகின் மன்னர்கள் தான். இதில் வேறுபட்ட கருத்துக்கே இடமில்லை. ஒரே மேடையில் ஒரே அந்தஸ்தில் தான் கவிஞர்களைப் பார்க்கிறோம். நாம் முன் சொல்லி யிருப்பதுபோல, குறிப்பெண்ணும் நீதி என்ற ஒரு சொல்லும் தான் எம்மை எதிர்காலத்திலும் வழிநடத்தும் என்பதை உறுதியாகக் கூறுகிறோம்.

"உலகக் கவிதைப் போட்டி" என 2000ம் ஆண்டில் இப் போட்டிக்குப் பெயர் வைத்து ஆரம்பித்த போது பலரும் வியப்படைந்தனர். உலகக் கவிதைப் போட்டி என்றால் இன்று உலகில் பரந்து வாழும் தமிழர்கள் பங்கு கொள்வார்களா? எனக்கேட்டு நம்மைத் தடுமாற வைத்துவிட்டார்கள். நாம் எதிர்நீச்சலுக்குத் தயாரானோம். இன்று மன நிறைவு கண்டுள்ளோம்.

## உலக நாடுகள் தந்த உற்சாகம்

2000ஆம் ஆண்டில் 126 கவிதைகள் மட்டும்தான் கிடைத்தன. இந்தியா, இலங்கை, நோர்வே, ஜேர்மனி ஆகிய நாடுகளின் கவிஞர்கள் மட்டும் பங்கேற்றனர். ஆனாலும் மனம் தளரவில்லை. அப்போதும் சென்னையில் பரிசளிப்பு விழா நடத்தி, காத்திரமான பரிசுகள் வழங்கப்பட்டன. அது கவிஞர்களை உற்சாகப்படுத்தியது.

2004இல் எம்மைத் திணறடித்துவிட்டார்கள் உலகக் கவிஞர்கள். இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, கனடா, ஜேர்மனி, நோர்வே, ஆஸ்திரேலியா உள்ளிட்ட இன்னும் பல நாடுகளில் உள்ள கவிஞர்கள் களம் இறங்கிக் கவிதைகள் மூலம் தமிழ் வளர்க்க முன்வந்திருக்கிறார்கள்.

"புதுயுகத் தமிழர்" கவிதைப் போட்டியில் கவி மேடை ஏறியவர்களின் தொகை 426. இத்தொகையை அறிந்த உலகத் தமிழர்கள் "இன்னும் விரிவாகப் போட்டியை நடத்துங்கள். நாங்கள் ஆதரவு தருகிறோம். தமிழர்கள் வாழும் நாடுகளில் பரிசளிப்பை நடத்துங்கள்" என எமக்கு உற்சாகமளித்து ஆதரவுக்கரம் நீட்டி இருக்கிறார்கள். இந்தக் கருப்பொருளைத் தெரிவு செய்த கவிஞர் கந்தவனம், எஸ். திருச்செல்வம், தீவக இராமலிங்கம் தலைமையிலான தெரிவுக்குழு எடுத்த முயற்சிகளுக்கு எமது பாராட்டுக்கள்.

சிங்கப்பூர், மலேசியாவில் சுடரொளி வெளியீட்டுக் கழகத் தலைவர் பொன் பாலசுந்தரமும் இலங்கையில் கழகச் செயலாளர் ஐ. தி சம்பந்தனும் மேற் கொண்ட கவிதைப் போட்டிக்கான பிரச்சாரம் நல்ல பலனைத் தந்திருப்பதை மகிழ்வுடன் தெரிவிக்கிறோம். பிரயாணச் செலவையும் சிரமங்களையும் பார்த்தி ருந்தால், பங்குபற்றிய இவ்வளவு ஆர்வமிக்க உயிர்த்துடிப்பான கவிஞர்களின் கவிதைகளையும் இழந்திருப்போம்.

இவர்களைக் கவிதைக் களத்தில் இறக்கியது ஒரு சாதனையாகும். அடுத்து மொரிசியஸ் கவிஞர்களை இணைப்பதற்கான பணி தொடரும். தென் ஆப்பிரிக்கா விலிருந்தும் குரல் கொடுத்திருக்கிறார்கள். எமது நிதி நிலைமை சீராகிவிட்டால் உலகக் கவிஞர்கள் சபை ஒன்றையே உருவாக்கி விடலாம்.

நாம் பணபலம் படைத்தவர்கள் அல்லர். இலண்டனிலிருந்து வரும் காமதேனு எனப் பலரும் நினைக்கிறார்கள். எம்மைக் கறவைப் பசுக்களாக மட்டும் நினைத்து விடாதீர்கள். நாம் பெரும் மனம் படைத்தவர்கள். கவிஞர்களுக்கு உலகிலும் சரி உள் நாட்டிலும் சரி அந்தஸ்தும் அங்கீகாரமும் இருக்க வேண்டு மென்று ஆசைப்படுபவர்கள். இந்த ஆசையை நிறைவேற்ற ஒவ்வொரு கவிஞனும் முன்வர வேண்டும்; ஒத்துழைக்க வேண்டும். எம் பணிகளுடன் கைகோர்த்து நிற்க வேண்டும்.

போட்டிக்கு அனுப்பப்பட்ட கவிதை ஒன்றுடன் கூடவே ஒரு கடிதமும் வந்தது. அந்தத் தகவலை வெளியிடுவது போட்டி விதிமுறைகளுக்கு முரணாக இருக்குமா என ஆராய்ந்தோம். ஆனால் வெளியிடுவதில் பாதகமில்லை என பெரும்பான்மையினர் கருதினர்.கவிஞர்களுடைய அக்கறையைத் தான் கடிதம் பிரதிபலிப்பதாக அபிப்பிராயப் பட்டனர். அக்கடிதத்தின் விபரம் இதுதான்:

"நான் புனைபெயரில் தான் கவிதையை எழுதி இருக்கிறேன்.சிரமம் பாராமல் எனது பரிசுக்குரிய காசோலையை எனது சொந்தப் பெயருக்கு அனுப்பி வையுங்கள்."

## தமிழகத்தில் ஆதரித்த ஊடகங்களுக்கு நன்றி

கவிஞர்களின் ஒத்துழைப்பும், எமது நிதி நிலைமையும் ஆதரவாக இருந்தால், இப்படியான உள்ளங்களின் ஆசைகளையும் நிறைவேற்ற வாய்ப்பிருக்கும்.

தமிழ் நாட்டிலிருந்து ஏராளமான கவிஞர்கள் போட்டியில் கலந்து கொண்டிருப்பது ஒரு நல்ல எதிர்காலத்தின் அறிகுறியாகும். கவிஞர்களை உற்சாகப்படுத்திப் போட்டியில் கலந்து கொள்ளும் பெரும்பணியைச் செய்த பெருமைக்கு உரியவர் ஹைக்கூ கவிஞர் இரா இரவி அவர்கள் பாராட்டுக்குரியவர். எமது போட்டிக்கு தனது இணையத் தளத்தையே தந்து கவிஞர்களை உற்சாகப்படுத்திய பெருமைக்குரியவர்.

உலகக் கவிதைப் போட்டியை நடத்த ஒரு தனிக் காரியாலயமே செயற்பட வேண்டியுள்ளது. ஒரு கவிதைக்கு 5 பிரதிகள் தேவை. சிலர் மிகப் பெரிய

கவிஞர்

காசிஆனந்தன்

ஆண்ட

இனம்

மீண்டும்

ஆள

நினைப்பது

தவறு

என்ன



தாளில் எழுதி அனுப்பி வைக்கிறார்கள். பெரும் பணச் செலவில்தான் இதையும் பிரதி செய்தாக வேண்டும். ஆயிரக் கணக்கான பிரதிகளையும் விமான அஞ்சலில் அனுப்பி வைக்க வேண்டும். எழுத்து தெளிவில்லாத கவிதைகளைக் கணினிப் பிரதிகளாக்க வேண்டியிருக்கிறது. இனித் தொலை பேசியில் சில கவிதைகளைச் சரி பார்க்க நடுவர்கள் இரவு பகலாகத் தொடர்பு கொள்கிறார்கள். மூலப் பிரதி எம்மிடம் இருப்பதால் சந்தேகம் எழும் போதெல்லாம் எம்மை அவர்கள் நாடவேண்டும். இவையெல்லாம் போட்டிக்கென வரையறை செய்யப்பட்ட விதிமுறைகளில் சில.

பணச் செலவில்லாமல் இப்படியான ஒரு போட்டியைப் பலரும் பாராட்டும் வகையில் நிறைவேற்ற முடியாதென்பதை எல்லோரும் அறிவார்கள். உங்கள் உள்ளங்களுக்குத் தெரியாத ஒரு சக்தி எமக்குப் பக்க பலமாக இருப்பதைச் சொல்லித்தானாக வேண்டும்.

எமது கழகத்தின் போஷகர்களாக இருக்கும் இரு பெரிய மனங்கள் உரிய நேரத்தில் உரிய ஆலோசனைகளைக் கூறி எம்மை வழி நடத்துகின்றனர். வள்ளுவப் பெருந்தகையின் உடுக்கை இழந்தவன் கரங்கள் இவர்களுக்குத் தான் பொருந்தும். இலண்டன் மாநகர் போற்றும் எல்லா இருதயங்களையும் அறிந்த புகழ்பெற்ற வைத்தியக் கலாநிதிகள். ஒரு நாள் நாட்டில் இவர்கள் இல்லை என்றால் பலர் பதறிப்போவார்கள். இந்த இரு பெரியவர்களில் ஒருவர் வைத்தியக் கலாநிதி எஸ். நவரத்தினம். இவர்தான் முதலாவது பரிசளிப்பு விழாவைச் சென்னையில் சிறப்புற நடாத்த உதவியவர். இப்போது மற்றவர்களுடன் சேர்ந்து எமக்கு உற்சாகமளித்து வருபவர்கள் வைத்தியக் கலாநிதி எஸ். ஞானச்செல்வன். மேல் மட்ட வைத்தியக் கலாநிதிகளைத் தயார் செய்யும் பணி இவருடையது. ஒரு நாள் கூட இவர் விடுமுறையை அனுபவிக்கும் நிலையில் இல்லாதவர். அப்படியிருந்தும் இப்பரிசளிப்பு விழாவைச் சிறப்பு செய்வதற்காக இன்று இங்கு வந்துள்ளார். பிரபல வைத்தியக் கலாநிதி எஸ். சோமசேகரன் அவர்கள் இம்முறை விழாவுக்கான பல அரிய யோசனைகளைச் சமர்ப்பித்து எமக்கு ஆதரவுக் கரம் நீட்டியுள்ளார். தமிழ் நாட்டில் விழா வைக்கும் முடிவு எடுக்கப்பட்டதும், இவ்விழாவில் கட்டாயமாகப் பங்குபற்றும் ஆர்வத்தைத் தெரிவித்து அதற்கமைய இன்று உங்களைக் கௌரவிக்கச் சமுகமளித்து இருக்கிறார்கள். இருவருக்கும் சுடரொளி வெளியீட்டுக் கழகம் தனது மன நிறைவான நன்றியைத் தெரிவிக்கிறது.

இலண்டனில் கொடை வள்ளல்களாகத் திகழும் வர்த்தகப் பெருமக்கள் பலரும் தனிப்பட்ட தமிழ்ப் பண்பாளர்களும் எமக்கு உதவிக்கரம் நீட்டி ஒத்துழைப்புத் தந்து வருகிறார்கள். அவர்களுக்கும் எமது நன்றி.

தமிழகத்தில் இப் பரிசளிப்பு விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கென உப குழு ஒன்று அமைக்கப்பட்டது. மதுரா ட்ராவல்ஸ் இயக்குநர் வி.கே.ரி. பாலன் தலைவராகவும் உலகத் தமிழர் மையத்தின் பொதுச்செயலாளர் உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன் ஒருங்கிணைப்பாளராகவும் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற இயக்குநர் வா.மு.சே. திருவள்ளுவர், மதுரைக் கவிஞர் இரா. இரவி ஆகியோர் உறுப்பினர்களாகவும் இதில் இடம் பெற்றனர். இவர்களின் ஒத்துழைப்பால் பரிசளிப்பு விழா சிறப்புடன் நடைபெற்றது. இவர்களுக்கும் எமது நன்றி.

"புதுயுகத் தமிழர்" தொகுப்பு நூலையும் சுடரொளி சிறப்பு மலரையும் அழகுற அச்சிட்டுத் தந்த உலகத் தமிழர் பதிப்பகத்தாருக்கும் எமது நன்றி உரித்தாகும்.

சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் சார்பில்

தலைவர்

பொன் பாலசுந்தரம்

செயலாளர்

ஐ.தி. சம்பந்தர்

பெருங்கவிக்கோ
வா.மு. சேதுராமன்

உலகெல்லாம்
விரைந்து
சென்று
தமிழை
வளர்த்து
வரும்
கவிக்கோ



# நன்றி நவில்கிறோம்

## உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன்

ஒருங்கிணைப்பாளர்

பரிசளிப்பு விழா ஏற்பாட்டுக் குழுவின் தமிழக உபகுழு

நல்வாழ்வு தேடி மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றோருள் இலண்டன் வாழ் புலம் பெயர் தமிழர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய 'சுடரொளி வெளியீட்டுக் கழகம்', தமிழ் – தமிழர் இன மேம்பாட்டுப் பணிகளைச் செவ்வனே செய்து வருகிறது.

அந்த வகையில், 2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியை அண்மையில் நடத்தியது. பல நாடுகளிலிருந்து 426 கவிஞர்கள் இதில் பங்கேற்றனர். வெற்றி பெற்ற கவிஞர்களுக்கான பரிசளிப்பு விழாவை, உலகளாவிய நிலையிலும், பிராந்திய நிலையிலும் பல நாடுகளில் நடத்திட ஏற்பாடுகளைச் செய்து வந்தனர்.

உலகளாவிய நிலையில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவைத் தமிழகத்தில் நடத்துவதற்காக, மதுரா டிராவல்ஸ் தலைவர் கலைமாமணி வி.கே.டி. பாலன் அவர்களைத் தலைவராகவும் உலகத் தமிழர் மையத்தின் பொதுச் செயலாளரான என்னை ஒருங்கிணைப்பாளராகவும் பன்னாட்டுத் தமிழுறவு மன்ற இயக்குநர் வா.மு.சே. திருவள்ளுவர், மதுரைக் கவிஞர் இரா. இரவி ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு தமிழக உபகுழுவை சுடரொளி வெளியீட்டுக் கழகச் செயலவையினர் நியமித்தனர். அதைத் தொடர்ந்து பரிசளிப்பு விழா ஏற்பாடுகள் இங்கு நடைபெறலாயின.

அதே வேளையில், வெற்றி பெற்ற கவிதைகளைத் தொகுத்து 'புதுயுகத் தமிழர்கள்' எனும் நூலை உருவாக்கும் பணியையும், சுடரொளி சிறப்பு மலரை அச்சிடும் பணியையும் மேற்கொள்ளுமாறு உலகத் தமிழர் பதிப்பக உரிமையாளருமான என்னைப் பணித்தார்கள். இப்பணிகளை உடனே மேற்கொண்டு, கவிஞர்களின் கவிதைகளும், ஒளிப் படங்களும் திரட்டப்பெற்று அச்சுப் பணிகள் நிறைவேறின.

சுடரொளி சிறப்பு மலரில், கவிதைப் போட்டியின் பங்கேற்று, வெற்றி பெற்ற கவிஞர்களின் கவிதைகளும் படங்களும், அவர்களைப் பற்றிய தகவல்களும் பிற செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

மேற்கத்திய கலாசாரச் சூழலில் வாழ்ந்து கொண்டு, உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் வெற்றி பெற்ற கவிஞர்களைச் சிறப்பிப்பதற்கும், பரிசுகள் வழங்கி ஊக்குவிப்பதற்கும் அயராது பாடுபட்ட இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகத்தினர் நம் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள்.

இத்தகையதொரு சிறப்பான தமிழ்ப் பணியில் நாங்களும் பங்கேற்கும் வகையில் நல்வாய்ப்பு நல்கிய சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் செயலவையினருக்கு நன்றி. குறிப்பாக அதன் காப்பாளர்கள் மருத்துவர் எஸ். நவரத்தினம், மருத்துவர் எஸ். ஞானச் செல்வன் ஆகியோருக்கும் தலைவர் திரு. பொன். பாலசுந்தரம் அவர்களுக்கும், செயலாளர் திரு. ஐ.தி. சம்பந்தன் அவர்களுக்கும் நெகிழ்ச்சியான நன்றி.

இச் சிறப்பு மலர் உருவாக, உடனிருந்த உதவியோர் பலரும் நம் நன்றிக்குரியவர்கள். ஓய்வறியா தொடர்பணிகளுக்கிடையிலும் நாம் வேண்டிய உடன் வாழ்த்துச் செய்தி வழங்கிய, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு உளமார்ந்த நன்றி. பல்வேறு பணிகளுக்கிடையிலும் வாழ்த்துச் செய்தி வழங்கியுள்ள சுடரொளி வெளியீட்டுக் கழகத்தின் காப்பாளர்கள் மருத்துவர் எஸ். நவரத்தினம், மருத்துவர் எஸ். ஞானசெல்வன் ஆகியோருக்கும் பரிசு பெற்ற கவிஞர்களின் வாழ்க்கைக் குறிப்பைத் தொகுத்துத் தந்த நெல்லை இராமசந்திரன் அவர்களுக்கும் நன்றி.

இப்பரிசளிப்பு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றிடத் தமிழுள்ளமும் கொடை நெஞ்சமும் கொண்ட சான்றோர் பெருமக்கள் துணை நின்றனர். நமது வேண்டுகோளை ஏற்றுப் பரிசளிப்பு விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் சுவைமிகு சிற்றுண்டி வழங்கிய சத்திய பாமா நிகர்நிலைப் பல்கலைக் கழக வேந்தர் டாக்டர் ஜேப்பியார் அவர்களுக்கும், நமது நெஞ்சார்ந்த நன்றி.

இச்சுடரொளி இரு திங்களிதழ் மென்மேலும் வளரவும், உலகின் அனைத்து நாட்டுத் தமிழர்களிடம் சென்றடையவும் உளமார வாழ்த்துகிறேன்.

# கவிதைக் கருப்பொருள் தேடி நீண்ட பயணம்

மிலேனியத்தில் நடத்திய 'வருக தமிழர் பொற்காலம்' முதலாவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியாகும். இக்கருப்பொருள் பலநாடுகளிலுள்ள அறிஞர் பெருமக்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொண்ட தலைப்பாகும். பிறகு 2000ஆம் ஆண்டு உலகெல்லாம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் சூழலில், உலகெல்லாம் பரந்து வாழும் 8 கோடித் தமிழர்களின் எதிர்காலத்தைக் கவிஞர்கள் ஊடாகப் பார்ப்பதாக அத்தலைப்பு அமைந்தது.

முதலாவது தமிழ்க் கவிதைப்போட்டியில் உலகளாவிய ரீதியில் கவிஞர்களை ஒன்றிணைத்து வெற்றி கண்டோம்.

எனவே இரண்டாவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியை 2004இல் நடத்துவதற்குப் பொருத்தமான கருப்பொருளைத் தேடி நீண்ட பயணம் செய்ய வேண்டியதாயிற்று. நாம் தெரிவு செய்யும் கவிதைத் தலைப்பு உலக அறிஞர்களால், கவிஞர்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய தாகவும், கவிதை எழுதுவதற்குப் பொருத்தமானதாகவும் அமைய வேண்டும் என்பது எமது சிந்தனை.

கடிதம் மூலமும், தொலைபேசி மூலமும் பல நாடுகளிலுள்ள அறிஞர்களுடன் தொடர்பு கொண்டோம். ஒவ்வொருவரும் கூறிய தலைப்பில் முடிவெடுக்க முடியவில்லை. நாம் நேராக ஒன்று கூடி ஆராய்ந்து எடுக்கும் முடிவே சரியானதாக அமையும் என்ற முடிவுக்கு வந்தோம்.

அதற்கமைய ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடாவுக்கும் நான் பிரயாணத்தை மேற்கொண்டேன். கனடாவில் இரு வாரம் தங்கியபோது அங்குள்ள பல அறிஞர்களையும், கவிஞர்களையும் சந்தித்து உரையாடினேன்.

இறுதியாக, உலகக் கவிஞர்களாலும், அறிஞர்களாலும், பத்திரிகையாளராலும் மதிக்கப்படும் கவிஞர் கலாநிதி கந்தவனம், நமநாடு ஆசிரியர் திலகம் இராஜலிங்கம், தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு. எஸ். திருச்செல்வம் ஆகியோர் கவிஞர் கந்தவனம் அவர்களின் கனடா இல்லத்தில் ஒன்று கூடி நீண்ட நேரமாக ஆராய்ந்தோம். அங்கும் பல தலைப்புக்கள் கூறப்பட்டன.

ஆழமாகச் சிந்தித்த பின்னர் பிறந்த சிந்தனைக் கருவே – புதுயுகத் தமிழர். இந்தக் கருப் பொருள் கூடியிருந்தவரின் ஏகமனதான அங்கீகாரம் பெற்றது.


ஒரு வாரத்திற்குள் போட்டியை அறிவித்தோம். இரு மாதத்தின் பின்னர் கவிதைகள் வந்து குவிந்தன.

கவிதைகளைத் தெரிவு செய்யும் ஐவர் கொண்ட நடுவர்களுக்குத் தலைவராக இருந்த கவிஞர் கந்தவனம் அவர்களுக்கும் இதர அங்கத்தவர்களுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஐ.தி. சம்பந்தன்**
செயலாளர்


## இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் நடத்திய
## புதுயுகத் தமிழர் - 2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில்

**முதலாவது பரிசு பெற்ற கவிஞர்**



**கவிவேந்தர்**
**கா. வேழவேந்தன்**

**இரண்டாவது பரிசு பெற்ற கவிஞர்**



**சி. பன்னீர்ச்செல்வம்**

திரு. பன்னீர்செல்வம் : சிறந்த எழுத்தாளர். கவிதை, சிறுகதை, கட்டுரை எனப் பல் நோக்கு நிலையில் ஆழமான கருத்துகளைத் திறமையாக வெளிப்படுத்துவதில் வல்லவர். புலம் பெயர்ந்து கூடல் மாநகரில் தமிழ்நலம் காக்கும் அன்பாளர். அறிவியல் பார்வை தோய்ந்த உணர்ச்சிப் பிழம்பான சொல்லோவியச் சிற்பி.


**மூன்றாவது பரிசு பெற்ற கவிஞர்**



**திருமதி. கற்பகம்**

திருமதி. கற்பகம் : வேலூர் மாவட்டம், ஆர்க்காடு நகரின் பகுத்தறிவுக் குடும்ப வழித் தோன்றல் இவர். தமிழ்கூறும் நல்லுலகம் அறிந்த படைக்கலப் பாவலர் துரை மூர்த்தி அவர்களின் துணைவியார். இவருடைய பல கவிதைகள் சிற்றிதழ்களிலும் தொகுப்பு நூல்களிலும் இடம் பெற்றுள. கோவை வள்ளியப்பா இலக்கிய மன்றம் நடத்திய மழலையர் பாடல் போட்டியில் பரிசு பெற்றுள்ளார்.

# இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் நடத்திய புதுயுகத் தமிழர் — 2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்கள்




சே. அப்துல் லத்திப்




ஜி. மஞ்சுளா

சே. அப்துல் லத்தீப் : நாகை மாவட்டம் நீர்முளை என்னும் சிற்றூரில் வாழ்ந்துவரும் இவர் சிறந்த சந்தக் கவிஞர். வரிகள் தோறும் சீரும் தளையும் முரசு கொட்டுவது போற்றத்தக்கது. அறிவியல் நோக்கு கொண்டவர். நல்ல தமிழ் வழிச் சிந்தனையாளர்.

அதலை இராமன் : மதுரைக் கவிஞரான இவர் தமிழக மின்வாரியத்தில் கணக்கு மேலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். சிறந்த மரபுக் கவிஞர். இவர் கவிதைகளின் சொல்லாட்சி சுவை தருகிறது. உவமை வேர் விடுகிறது. நீரோட்டம்போல் வேகம் கொண்ட உணர்வுகள் இவரின் கவிதைகள் முழுவதிலும் வெள்ளமாய்ப் பாய்கிறது. பல கவியரங்குகளில் கலந்து கொண்ட இவர் பல போட்டிகளில் பரிசுகளையும் வென்றுள்ளார்.



அதலை ராமன்




தமிழடியான் ஆறுமுகம்

புதுமைக் கவிஞர் ப. சங்கரலிங்கனார் : மதுரைக்கு அரங்கில் செக்கானூரணி மதுவடி கவிஞரின் பிறந்த ஊர், சிறந்த சிந்தனையாளர். காவியங்கள், குறுங் காவியங்கள், கவிதை ஓவியங்கள் என படைப்புகள் பல படைத்தவர். இலக்கியப் பணியோடு சமுதாயப் பணிகளையும் தொடர்ந்து செய்துவரும் இவர் புதுமைக் கவிஞர். பாவலர் மணி முதலான விருதுகளையும் பெற்றுள்ளார்.


ஜி. மஞ்சுளா : மதுரை மாவட்டச் சின்ன சொக்கி குளம் என்னும் சிற்றூரில் பிறந்த இவர் வண்ணத் தமிழ்க் கவிதை படைப்பதில் வல்லவர். வளர்ந்துவரும் இந்த வளர்பிறையின் கவிதைகளைத் தமிழாக்கத்தில் பல சிற்றிதழ்கள் தாங்கி வந்துள்ளன; வருகின்றன. இலக்கியச் சிந்தனையோடு சமுதாய உணர்வும் கொண்டு எழுதும் இவர் இன்றைய காக்கைப் பாடினியார்.

எல். ஆறுமுகம் : தமிழடியான் என்னும் புனை பெயர் கொண்ட இந்த ஆறுமுகம் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றவர். தமிழகத்தின் தலைவரிசைக் கவிஞர்களின் தலைமையில் கவியரங்கம் ஏறியவர். பல்வேறு போட்டிகளில் பரிசு பெற்ற இந்த ஓய்வு பெற்றத் தலைமையாசிரியர் ஓயாது தமிழ்த் தொண்டாற்றி வருகிறார். இவரின் 'பாட்டுப் பட்டாசு' என்னும் குழந்தைகள் பாடல் நூல் சிறப்புக்குரியது.

டாக்டர் பழனி இளங்கம்பன் : பழனி முருனை அறியாதவர் இருக்கலாம். பழனி இளங்கம்பனைத் தெரியாதார் இருக்க வாய்ப்பில்லை. ஏடெல்லாம் அவர் கவிதை; நாடெல்லாம் இவர் பேச்சு; எண்ண முடியாத விருதுகளைப் பெற்றுள்ள எழுச்சிக் கவிஞர்; 105 நூல்களை எழுதியுள்ளார். மனித உரிமைக் கழக எழுத்தாளரான இவர் இலண்டன் முத்துமாரி அம்மன் மீதும் பாடல்களை எழுதியுள்ளார். அகவை 73 கண்ட இவர் இன்னும் எழுதிக்கொண்டே இருக்கிறார். சாகித்திய அகாதெமி உதவியும் பெற்றவர்.




ப. சங்கரலிங்கம்



டாக்டர் பழனி இளங்கம்பன்

# இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் நடத்திய புதுயுகத் தமிழா — 2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்கள்



சி. வீரபாண்டியத் தென்னவன்


பொறிஞர் இ.அகன் (மி. அமலன்)

கவி மாமணி சி. வீரபாண்டியத் தென்னவன் : மாமதுரைக் கவிஞர் பேரவையின் தேமதுரத் தலைவர். தமிழ்ப் பணியோடு பொதுப்பணியையும் கலந்து தமிழன்பர் மனங்களில் அமிழ்தாய் இனிப்பவர். இவரது பாடல் வரிகளில் வசந்தம் பூ பூக்கும். வார்த்தைகளில் சுகந்தம் மணக்கும். இந்தச் சுந்தரக் கவிஞரின் கவிதைகள் நிரந்தரமாய் நிலைக்கும்.


ஆதிசிவன் : மதுரையைச் சார்ந்த இவர் கணினிக் கல்வி பயிற்றுநர். இனிய கவிதைகளை வடிப்பதிலும் இணையற்றவர். பல கவியரங்குகளில் கலந்து கொண்டு பாராட்டு பெற்றவர். மாமதுரைக் கவிஞர் பேரவையின் பொருளாளர். சமதர்மச் சிந்தனையும், சமூகப் பார்வையும் கொண்ட இவர் பல்வேறு பொது நல அமைப்புகளிலும் பங்காற்றி வருகிறார். ஆறுதல் பரிசு பெற்ற கவிமாமணி வீரபாண்டியத் தென்னவன் அவர்களின் மகன்.



வீ. ஆதிசிவன்


கே.பி. பத்மநாபன்

மருத்துவர் காசி பிச்சை : கால் நடை மருத்துவரான இவர் தமிழ் நூல் நடை மருத்துவத்திலும் நிகரற்று விளங்குகிறார். திருச்சி அரியூரில் பிறந்த இந்த கவிஞர் அரசுத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பழ நெடுமாறன் அவர்களின் அன்புக்குப் பாத்திரமானவர். தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கழகச் செயலாளருமாவார். தன்மானமும் தமிழ் மானமும் காத்து வரும் இவர் 14 நூல்களைப் படைத்துள்ளார். பல்வேறு இதழ்களில் இவரது படைப்புகள் வந்த வண்ணம் உள்ளன.

பொறிஞர் இ. அகன் (மி. அமலன்) பொறியாளர்; தமிழ் நெறியாளர்; திண்டுக்கல் மாவட்ட சித்தையன் கோட்டையில் பிறந்தவர். மொழி ஞாயிறு பாவாணர் அவர்களின் வழி ஞாயிறாக வலம் வரும் இவர் திருக்குறள் நெறிதனைப் பரப்பி வருகின்றார். தமிழர் முழக்கம் என்னும் இதழை நடத்திய பெருமை இவருக்குண்டு. எழுகதிர், தெளிதமிழ், நற்றமிழ், தேமதுரத் தமிழோசை முதலான இலக்கிய ஏடுகளில் இவர்தம் கவிதைகள் தொடர்ந்து முழங்கி வருகின்றன.



மருத்துவர் காசி பிச்சை


எஸ். பத்மநாபன்


கே.பி. பத்மநாபன் : கோவை சிங்க நல்லூரைச் சேர்ந்த இந்தச் சேரநாட்டுச் செந்தமிழரின் தாய் மொழியோ மலையாளம். வங்கியில் பணியாற்றிய இவர் செந்தமிழ் உணர்வை இனிமையை வாங்கி வாங்கியே கவிஞர் ஆகிவிட்டார். பள்ளிப் பருவத்திலேயே தமிழ்க் கவிதைகள் புனைந்த இவர் தமிழ் மொழியில் கொண்ட இடுபாடு போற்றுதலுக்குரியது.

எஸ். பத்மநாபன் : இளம் அறிவியல் கணிதப் பட்டதாரியான இவர் அழகு சாதன அங்காடியின் உரிமையாளர். திருவாரூர் மாவட்டம் குருவப்புலம் இவரது சொந்த ஊர். தமிழ் மீது நீங்காப் பற்றாளர். பட்டிமன்றப் பேச்சாளர்.

# இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் நடத்திய புதுயுகத் தமிழா — 2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்கள்




உதயை மு. வீரையன்




ரிச்சார்ட்ஸ் பிரிட்டோ

**உதயை மு. வீரையன் :** தஞ்சை மாவட்டம் உதயமார்த்தாண்டபுரம் ஊரில் பிறந்தவர், தமிழில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர் தமிழாசிரியர் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். கவிதைகள், கட்டுரைகள், நாவல்கள், சிறுகதைகள், சிறுவர் நூல்கள் என அடுக்கடுக்காக நூல்களை எழுதிக் குவித்த இந்த அருந்தமிழர் பல்வேறு போட்டிகளிலும் அமைப்புகளிலும், பட்டம், பட்டயம், பரிசு, விருதுகள் முதலானவற்றையும் அடுக்கடுக்காக அள்ளிக் கொண்டவர். டாக்டர் மு.வ., தீபம் நா.பா. வல்லிக்கண்ணன், உவமைக் கவிஞர் சுரதா ஆகியோரின் பாராட்டையும் பெற்றவர்.



பாவரிமா இளஞ்சித்திரன்




ந. பாண்டுரங்கன்


**பாவரிமா இளஞ்சித்திரன்:** தமிழக அரசின் அடவித் (வனத்) துறையில் அரும் பணியாற்றி ஒய்வு பெற்ற கணக்காளர்; பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் அன்பிற்குரியவர். அவர் வழி நடப்பவர். யாப்பும் தொகையும் இதயமும் உயிருமாய் தோப்புத் தமிழில் தொகை வடிப்பவர். இல்லம் ஔவையகம்; இவர் இருப்பிடம் தமிழகம். இன உணர்வும் மொழி உணர்வும் இவரின் குருதியும் நாளமும்.

**அ.வை. அமுதன் :** சீர்காழியில் பிறந்தவர். ஆசிரியராகப் பணியாற்றிவரும் இவர் யோகா கலையில் பட்டம் பெற்றவர். நல்ல நாடக நடிகர். தமிழ்நாடு அறிவியல் இயக்கம் நடத்திய மாநில அளவிலான கல்லூரிக் கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர்.

**ரிச்சார்ட்ஸ் பிரிட்டோ :** சங்க மதுரையில் பிறந்த இந்தச் சிங்கத் தமிழன் கவிதை எழுதுவதில் மட்டுமல்ல; மேடைப் பேச்சிலும் வல்லவர். தமிழக அரசின் நிதி உள்ளாட்சித் துறையில் சென்னையில் தணிக்கையாளராகப் பணியாற்றி வருகிறார். 'இளமை தேசம்' என்னும் பெயரில் இளைஞர் விழிப்புணர்வு குறித்து இவர் எழுதிய பாடல்களை ஒலிநாடா ஒலித்தட்டு வடிவில் சென்னை இலயோலா கல்லூரி வெளியிட்டது பெருமைக்குரியதாகும்.



அ.வை. அமுதன்




சீனி. கர்ணராசா


**ந. பாண்டுரங்கன்** திருவில்லிபுத்தூரில் பிறந்த இவர் மதுரை மாவட்ட மைய நூலகராகப் பணியாற்றி வருகிறார். தமிழ், தமிழினம் இவற்றில் நீங்காப் பற்றாளரான இவரின் படைப்புகள் 1967 இல் 'போர்வாள்' 'குறிஞ்சி' போன்ற இதழ்களில் வெளியாகி உள்ளன. 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மாணவராக இவரது பங்களிப்பு மகத்தானது. சிறந்த பேச்சாளர். 300க்கும் மேற்பட்ட கவிதைகள், 30 க்கும் மேற்பட்ட சிறுகதைகள், தாமரை, செம்மலர் போன்ற பல்வேறு இதழகளில் வெளியாகி உள்ளன. நாவரசு, மரபுச் செம்மல், நூலக வித்தகர் போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

**சீனி கர்ணராசா :** மதுரை மாவட்டம் அயோத்திப்பட்டி என்னும் சிற்றூரில் பிறந்தவர். மனித சீர்திருத்த இயக்கம் என்னும் சமுதாய இயக்கத்தை நடத்திச் சாதனை புரிந்து வருகிறார். அறிவொளித் தீப்பந்தம் என்னும் கவிதைநூலை வெளியிட்டுள்ளார். பேதமற்ற அகில உலக ஒரே பொது அரசு அமையவேண்டுமெனக் கடல்போல் ஆசைகொண்ட இவர் வாங்கிய பட்டம் 'ஏழைக் கவிஞர்' என்பதே.


# இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் நடத்திய புதுயுகத் தமிழர் — 2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்கள்




பாவலர் பொன்னரசு




கவியருவி கந்ததாசன்




சு. பாலகிருட்டினன்



கவிக்குயில் இரா. கனேசன்



தமிழருவி கோவை. கோகுலன்



ஹைக்கூ திலகம் இரா. ரவி

பாவலர் பொன்னரசு : ஈரோடு மாவட்டம் தூக்க நாயக்கன் பாளையம் என்னும் சிற்றூரில் பிறந்த இவர் கர்நாடக மாநிலம் பெங்களூரில் வாழ்ந்து வருகிறார். இவரின் நான்கு கவிதை நூல்களைப் பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் வெளியிட்டு மகிழ்ந்துள்ளது. கன்னட மொழியிலிருந்து தமிழ் மாற்றம் செய்த இவரின் 'பசவன்னர் பாட்டமுதம்' என்னும் நூல் பாராட்டுக்குரியது. திருக்குறளுக்குத் தீந்தமிழில் கவிதை உரை எழுதியுள்ளார். பல்வேறு அமைப்புகளிலிருந்து விருதுகள், பட்டயங்கள், பரிசுகள் பெற்றுள்ளார்.

சு.பாலகிருட்டினன் : மதுரையில் வாழ்ந்து வரும் இவர் தமிழ் மீது நீங்காப் பற்றாளர். தன் உணர்வு களைக் கவிதைகளாக, கட்டுரைகளாக வெளிப்படுத்தி வருகிறார். தேநீர்க்கடை நடத்திவரும் இந்த தீந்தமிழரின் கவிதைகளும் தேநீராய்ச் சுவை தருவன. உணர்வுகளை மட்டுமே உரமாக்கி எழுந்த இவரின் கவிதைப் பயிர் காலப்போக்கில் நல்ல விளைச்சலைத் தரும். கடின உழைப்பாளியான இவர், ஃபேண்டா நிறுவனம் நடத்திய விளம்பர வாக்கியப் போட்டியில் பங்கேற்றுத் திரைப்பட நடிகர் விவேக்கிடம் பரிசு பெற்றவர்.

தமிழருவி கோவை கோகுலன் : கோவையைச் சேர்ந்த இவர் சிறந்த சந்தக் கவிஞர். தனியார் ஆலையில் மேற்பார்வையாளராக பணியாற்றிய இவர் தமிழ் மேல்கொண்ட பற்றின் காரணமாகக் கவிஞராகிவிட்டார். 'வசந்தவாசல் கவிமன்ற'ச் செயலாளர். 'முக்கூடல்' அரங்கின் தலைவர். உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை கோவை மண்டலத் தலைவர். இவர் 'தமிழருவி' என்னும் விருதையும் பெற்றுள்ளார்.

கவியருவி கந்ததாசன் : பெரம்பலூர் மாவட்டம் உயுத்தப்பள்ளம் சிற்றூரில் பிறந்த இவர் சிறந்த கவிஞர். கூட்டுறவுத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கந்ததாசன் கவிதைகள், சுதந்திரத் திருநாள், வீரவணக்கம் ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய மணிமேகலைப் பிரசுரமான தெருவெங்கும் தமிழ் முழக்கம் என்னும் கவிதை நூல் சிறப்புக்குரிய நாடகங்களும், சிறுகதைகளும் எழுதியுள்ள இவரின் படைப்புகள் பல ஏடுகளில் வெளிவந்துள்ளன.

கவிக்குயில் இரா. கனேசன் : மதுரையில் பிறந்த இவர் கவிதை, கதை, கட்டுரை, துணுக்குகள் என பல இதழ்களில் தொடர்ந்து எழுதி வருகிறார். எட்டாம் வகுப்பு மட்டுமே படித்த இவர் தன்னைத் தகுதிவாய்ந்த தமிழ்ப் படைப்பாளராக உருவாக்கிக் கொண்டது, தமிழ்த்தாய் இவருக்கு வழங்கிய கொடையாகும். தமக்குள் பொங்கும் தமிழுணர்வால் மதுரையிலுள்ள பல இலக்கிய அமைப்புகளிலும் பொது அமைப்புகளிலும் பொறுப்பாளராக உள்ளார்.

ஹைக்கூ திலகம் இரா. இரவி : மதுரை 'திருமலை நாயக்கர் அரண்மனையில் சுற்றுலாத் துறையில் பணிபுரிந்து வருகிறார். இவரின் அசத்தலான ஹைக்கூ கவிதைகள் பல்கலைக்கழக ஆய்வுப் பொருளாக சென்னை இலயோலா கல்லூரியிலும், பாடமாக திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்திலும் ஆகியுள்ளது. மதுரையில் விரிந்த இலக்கிய அமைப்புகளில் இவர் பல பொறுப்புகளில் பணிபுரிந்த வண்ணமாகவே திகழ்கிறார். இவரது கவிதைகள் இணைய தளத்தில் இணைந்து உலகம் முழுவதும் உலா வருகின்றன.


மனோறா ஐயாதுரை - இலங்கை; மட்டுவில் ஞானக்குமரன் - ஜெர்மனி (படங்கள் கிடைக்கவில்லை)

தொகுப்பு : கவிஞர் நெல்லை இராமச்சந்திரன், துணைச் செயலாளர், உலகத் தமிழர் மையம்

## இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் நடத்திய

## புதுயுகத் தமிழர் – 2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் – இலங்கை பிராந்தியப் பரிசு பெற்றவர்கள்

### முதலாவது பரிசு




**கணேசன் சேந்தன்**
(யாழ்ப்பாணம்)

### இரண்டாவது பரிசு



**ஆர். முரளீஸ்வரன்**
(யாழ்ப்பாணம்)

### மூன்றாவது பரிசு




**சி. மனோகரன்**
ஹற்றன் (மலையகம்)

## ஆறுதல் பரிசு பெற்றவர்கள்



காத்தான்குடி பாத்திமா



ஆ. பொன்ராசா



எஸ்.ஆர். ஐங்கரலிங்கம்

கலைமணி ஏ.ஸி. இஸ்மாலெவ்வை - மு. ஷியாம் குமார் (யாழவன்) - செல்வி சு. தர்சினி - படங்கள் கிடைக்கவில்லை

**2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி - பரிசளிப்பு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றிடத் தமிழுள்ளமும் கொடை நெஞ்சமும் கொண்ட சான்றோர் பெருமக்கள் பலரும் துணை நின்றனர். வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை அன்பளிப்பாக வழங்கிச் சிறப்பிக்கும் அன்பளிப்பாளர்களுக்கு (Sponsors) இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் நன்றியையும் பாராட்டுதல்களையும் மனமுவந்து தெரிவித்துக் கொள்கிறது.**

1. முதற்பரிசு அன்பளிப்பாளர்: டாக்டர் எஸ். சோமசேகரம் (இலண்டன்) தம் தந்தையாரும் லீலா அச்சகம், லீலா சித்திரக் காலண்டர் ஆகியவற்றின் நிறுவனருமான திரு.எஸ். சின்னத்துறை அவர்களின் நூற்றாண்டு நினைவாக வழங்கியுள்ளார்.

2. இரண்டாம் பரிசு அன்பளிப்பாளர்: திரு.மு. நீல கண்டன்; இலண்டன் இலட்சுமிஸ் நகை மாளிகையின் உரிமையாளரும் சைவத் தமிழ்ப் பணிக்குத் தாராளமாக வழங்கிடும் தயாள உள்ளமும் கொண்டவருமான இவர் இரண்டாம் பரிசை வழங்கியுள்ளார்.

3. மூன்றாம் பரிசு அன்பளிப்பாளர்: திரு.மு. விஜயபாலன் (இலண்டன்) பிரபல வர்த்தகரான இவர் தம் அருமைத் தாயர் திருமதி.மு, கனகேஸ்வரி (யாழ்ப்பாணம்) அவர்களின் நினைவாக வாழங்கியுள்ளார்.

## ஆறுதல் பரிசுகளின் அன்பளிப்பாளர்கள்:

1. கயிலை சிவத்திரு நாகநாதசிவம் குருக்கள் இலண்டன் ஸ்ரீமுருகன் கோவில் பிரதம குருக்கள் ஆவார். அவரது அருமைத் துணைவியார் திருமதி கயிலை நாகசிவம் அவர்கள் நினைவாக 4 ஆறுதல் பரிசுகளை வழங்கியுள்ளார்.

2. திரு. கந்தையா சிவஞானம் (இலண்டன்) தமது பெற்றோர் திருமதி- திரு கந்தையா ஆகியோரின் நினைவாக வழங்குகிறார்.

3. திரு. யூ. ஆர். பத்மநாபன் (இலண்டன்) சைவ முன்னேற்றச் சங்கத்தின் துணைத் தலைவரான இவர், தம் பெற்றோர் திருமதி -திரு இரத்தினம் ஆகியோர் நினைவாக வழங்குகிறார்.

4. இலண்டன் தமிழ்ச் சங்கம்- நீண்ட காலமாகத் தமிழ்ப் பணியாற்றி வருகின்ற இச்சங்கம் ஆறுதல் பரிசு ஒன்றினை வழங்குகிறது.

5. திருமதி. மகேஸ்வரி வைகுந்தவாசன் - ஐக்கிய நாடுகள் சபையில் தமிழை ஒலிக்கச் செய்த தம் கணவர் திரு வைகுந்தவாசன் அவர்கள் நினைவாக வழங்குகிறார்.

6. திரு. தி. சிறீஸ்கந்தராசா (இலண்டன்) பிரித்தானியத் தமிழ்த் தகவல் தொகுப்பு (டைரக்ரி) நிறுவனர். கடந்த 12 ஆண்டுகளாகத் 'தமிழ் ஒலைகள்' வெளியிட்டு வருபவர். ஆறுதல் பரிசு ஒன்றினை வழங்குகிறார்.

7. டாக்டர் இராஜயோகேஸ்வரி (இலண்டன்) கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றிய தம் தந்தை திரு. வைரப் பிள்ளை அவர்களின் நினைவாக வழங்குகிறார்.

8. திருமதி இந்திராசிவயோகம் - தம் தந்தையார் நீதிபதி சிறீஸ்கந்தராசா (இலங்கை) நூற்றாண்டு நினைவாக யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகள் ஆசியுடன் வழங்குகிறார்.

9. திரு. சிவானந்தன் (இலண்டன் Jattna House) தம் தந்தையார் பண்ணாகம் சைவப் பெரியார் பண்டிதர் ஆறுமுகம் அவர்களின் நினைவாக வழங்குகிறார்.

10. திரு. திலகராசா (இலண்டன்) டில்கோ நிறுவனங்களின் உரிமையாளர் தம் தந்தையார் யாழ்ப்பாணம் திருநெல்வேலி திரு.தவராஜா (கனடா) அவர்களின் 80 ஆவது பிறந்த நாள் பரிசாக ஓர் ஆறுதல் பரிசை வழங்குகிறார்.

# வேழவேந்தனின் வெற்றிச் சுவடுகள்



**தொ**ண்டை வளநாட்டில், செங்கை மாவட்டம் கும்மிடிப்பூண்டி வட்டம் ஆரணி ஆற்றங் கரையில் அமைந்த காரணியில் வேளாண்குடியில் 5.5.1936இல் பிறந்தவர்.

பெற்றோர்: கா. சின்னசாமி - இராசம்மாள் மனைவி: பானுமதி (சென்னை மாவட்ட தி.மு.க. முன்னாள் செயலாளர் கே.எம். கண்ணபிரான் மகள்) மக்கள்: 1. டாக்டர் வெற்றிவேந்தன் 2. டாக்டர்.எழில்வேந்தன்

உயர்பள்ளியே இல்லாத பிற்பட்ட வட்டாரத்தில் பிறந்ததால் 50 கி.மீ. கடந்து வந்து சென்னை இந்து தியாலஜிகல் உயர்நிலைப் பள்ளியிலும், சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் சட்டக் கல்லூரியிலும் பயின்று பி.ஏ.பி.எல் பட்டம் பெற்றவர்.

மாணவப் பருவத்திலேயே திராவிட இன உணர்வுடன் அறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு', பாவேந்தரின் 'குயில்', கலைஞரின் 'முத்தாரம்', 'முரசொலி', கவிஞர் கண்ணதாசனின் 'தென்றல்', மதியழகனின் 'தென்னகம்', கவிஞர் சுரதாவின் 'காவியம்','இலக்கியம்' ஆகிய ஏடுகளில் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் எழுதிப் புகழ் குவித்தவர். தொடர்ந்து 'அமுத சுரபி', 'வாசுகி', 'கலைமகள்', 'தினத்தந்தி', 'தின கரன்', 'ராணி' 'மாலை முரசு' 'முல்லைச் சரம்', 'கவிதை உறவு', 'கவிக்கொண்டல்' போன்ற இதழ்களில் எழுதி இலக்கியப்பணி புரிபவர்.

'அனைத்துக்கல்லூரிகள் தமிழ்ப் பெருமன்றம்' அமைத்து, தலைவர் பொறுப்பேற்று எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் உணர்வு கமழ்ந்திட இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்திப் பெருமை பெற்றவர்.

**மொழிகாக்கும் போரில் பங்கேற்று, மீஞ்சூரில் 144 தடை மீறியது முதல் ஈழத்தமிழர்க்காகச் சிறைபுகுந்தது வரை பல முறை சிறைவாசம் ஏற்றுத் தமிழ் மொழிக்காகவும் இனத்திற் காகவும் தொண்டு புரிந்தவர்.**

விமானப் போக்குவரத்தும், நல்ல கப்பல் போக்குவரத்தும் இல்லாத காலத்தில், 32 ஆண்டுக்கு முன் அறிஞர் அண்ணாவின் ஆணை ஏற்று, அந்தமான் நிக்கோபார் தீவுகள் சென்று, வேலை நீக்கம் செய்யப்பட்ட தமிழ்த்தொழி லாளர் சமுதாயத்திற்காக வழக்கு மன்றத்தில் வாதாடி, பல்லாயிரம் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு ஈட்டித் தந்தவர். இவர் பெயரில் அத்தீவு களில் நற்பணி மன்றங்கள் இயங்குவதே சான்றாகும்.

படிக்கும் பருவத்திலேயே 'வேழவேந்தன் கவிதைகள்' தொகுதியைப் படைத்து, தலைநகரில் அறிஞர் அண்ணா அவர்கள் அதை வெளியிட்டுப் பாராட்டிய பேற்றைப் பெற்றவர்.

பல்லவன் போக்குவரத்துக் கழகம், ஓல்தாம் தொழிற்சங்கம், கொக்கோ கோலா தொழிற்சங்கம், சக்தி பைப் தொழிற்சங்கம் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்களில் தலைமை ஏற்றுத் தொழிலாளர் சமுதாயத்திற்குச் சலுகைகள் பெற்றுத் தந்தவர்.

அறிஞர் அண்ணா, டாக்டர் மு.வ. ஆகியோரின் அணிந்துரைகளுடன் வெளியான 'நெஞ் சிலே பூத்த நிலா' எனும் சிறுகதைத் தொகுதியால், சிறுகதைத் துறையிலும் திறன் காட்டியவர்.

பத்தாண்டுகள் கும்மிடிப்பூண்டித் தொகுதி யின் சட்டமன்ற உறுப்பினராய் புகழ்ப்பணி புரிந்துப் பதவி ஏற்ற மூன்றாண்டுக்குள் எல்லாக் கிராமங் களுக்கும் மின்சாரம், ஆண்டுக்கொரு உயர்நிலைப் பள்ளி, எல்லா ஊருக்கும் இணைப் புச்சாலை என்ற திட்டமிட்ட பணிகளால் போற்றப் பெற்றவர். 'கும்மிடிப்பூண்டித் தொழில் மயம்', 'கும்முடிப் பூண்டிப் புறநகர் மின் ரயில் திட்டம்' ஆகிய வற்றிற்கு மூலகாரணமானவர். டாக்டர் கலைஞர் அமைச்சரவையில் தொழிலாளர் நல அமைச்சராகப் பொறுப்பேற்று, 'மே தின விடுமுறைச்சட்டம்', 'தொழிலாளர் நல நிதிச்சட்டம்', 'தொழிலாளர் குடும்ப ஊட்ட உணவுத்திட்டம்' ஆகியவற்றை நிறைவேற்றிய துடன், சுவிட்சர்லாந்து நாட்டின் தலைநகர் ஜெனிவாவில் நடந்த உலகத் தொழிலாளர் மாநாட்டில் பங்கேற்றுச் சிறப்பைக் குவித்தவர்.

பாவேந்தர் பாரதிதாசன் தொடங்கிய 'அனைத் துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்ற'ச் செயற்குழுவில் பங்கேற்றதுடன், பாவேந்தருக்குப் பின்னால் தமிழ்க்கவிஞர் இயக்கம் தழைத்திடத் தமது வீட்டில் கவிஞர் அமைப்பை நிறுவி, உவமைக்

கவிஞர் சுரதா போன்றவர்களைத் தலைமை ஏற்று நடத்திட ஆவன செய்தவர். பல்வேறு பொறுப்பில் எழுத்தாளர், கவிஞர் இயக்கங்களுடன் இணைந்து தொடர்ந்து தொண்டாற்றி வருபவர்.

'தமிழ்த்தேன் என்ற தமிழியக்க உணர்வூட்டும் தனித்தமிழ் ஏட்டை நடத்தி, இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தவர். 'வண்ணத் தோகை' எனும் எண்ணம் அள்ளும் கவிதைத் தொகுதிக்காக தமிழக அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசினைப் பெற்றவர்.

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பல்வேறு தமிழ்ப் பாட நூல்களில் இவருடைய பாடல்கள் இடம் பெற்றுப் புகழ்மணம் பெற்றவர்.

கவிஞர் தாகூர் நூற்றாண்டு விழாவை யொட்டித் தமிழகம் முழுதும் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதற்பரிசுத் தங்கப்பதக் கம் பெற்று மாணவர் பருவத்திலேயே புகழ் ஈட்டியவர்.

பாவேந்தர் பாரதிதாசன், முத்தமிழறிஞர் கலைஞர், கவியரசர் கண்ணதாசன், உவமைக் கவிஞர் சுரதா ஆகியோரின் தலைமையில் கவியரங் கேறியதுடன் தாமே நாடு முழுதும் கவியரங் கங்களின் தலைமை ஏற்று நடத்திக் கவிதை இலக்கியம் தழைத்திடச் செய்தவர்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பெரியார், அண்ணா வழியில் பகுத்தறிவு நெறி பிறழாமல் அன்று முதல் இன்றுவரை நடைபோடும் எல் லோர்க்கும் இனிய எளிய பண்பாளர்.

## அருள் தாராய்...

அழகான மயிலேறி அருள்முகம் காட்டி
ஆறுபடையாக இருந்த முருகா - இலண்டனில்
ஏழுடையாகினாய் முருகா! நீயங்கு
ஏழுடையாகினாய் முருகா!

வளமாக எமது தேசம் வாழ
குளமாக ஆனந்தம் பொங்கி மலர
உளமார அருள் பார்வை தாராய்
தளமாக அறிவினைத் தாராய்

முத்துத்தீவை மொத்தமாய் மாற்றி
சொர்க்கத்தீவாய் ஆக்கி நீ தருவாய்
சொக்கன் மகனே செந்தில் முருகா!
தக்கது அறிவாய் அருளினைத் தாராய்!

*கவியாக்கம் :*

***வேதா இலங்கா திலகம்,***
***டென்மார்க்***

# கவியரசு கண்ணதாசன்

### *கவிச்சக்ரவர்த்தி*
### *வி.ஜி. சந்தோசம்*

கவியரசே கண்ணதாசா!
காமேகனை வணங்கும் கண்ணதாசா!
காலம் இருக்கும் வரை உன் கவிதை
இருக்கும் கண்ணதாசா!
காவிய நாயகனே!

ஆடல் என்றாலும் உன்கவியே
இசைப் பாடல் என்றாலும் உன் கவியே
காலத்தின் கோலத்தை
கவிதை மூலமாகப் பாடுவாயே!
கண்ணதாசன் என்றாலே
கவிஞர்களுக்குக் கற்கண்டு
கேட்பவருக்குத் தெவிட்டாத தேனமுதம்
திக்கெட்டும் இருக்கும் தமிழர்கள்
உன் இசையைக் கேட்காத நாள்
நிலவு இல்லாத வான்!
ஆடிப்பாடிக் களிப்பாய் - என்றும்
உன் ஆன்மீகத்துக்குத் குறைவு இல்லை!
சைவ சித்தாந்தமா?
வைணவ சமயப் பற்றா?
கிறித்துவ சமயமா?
அல்லாவின் மார்க்கமா?
எல்லாமே பாடி ஏற்றம் பெற்றாய்!
ஆனால் வானுலகில் உன்னை
வரவேற்க இயேசுபிரான் வரவேண்டும்
என்றா

இயேசுவின் காவியம் என்ற
ஈடு இணையற்ற காவியத்தைப் படைத்து
கிறிஸ்துவர்களின் மனதில் நீங்காத
இடத்தைப் பெற்றாய்?
வானுலகத்தில் வலம் வருகிறாய்
உன் நாமத்தைப் போற்றுகிறோம்!
கண்ணதாசா, கருணை தாசா, கவிதாசா
கவியோகியே கண்ணதாசா!
கவி ஞானியே! புவி உள்ளவரை
உன் புகழ் வாழ்க!

# சீனர்களுக்கு உள்ள மொழிப்பற்று தமிழர்களுக்கு ஏன் இல்லை?

**உலகத் தமிழர் பேரமைப்பின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா தமிழ்நாடு நாகர்கோயிலில் சென்றமாதம் நடைபெற்றபோது தலைவர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் ஆற்றிய தலைமை உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

10 நாட்களுக்கு முன்னால் சூலை 20ஆம் தேதி யன்று சீனாவின் தலைநகரமான பீஜிங் நகரில் உலகச்சீன மாநாடு நடைபெற்று முடிந்திருக் கிறது.

66 நாடுகளில் வாழும் சீன மக்களின் பிரதி நிதிகள் 600க்கு மேற்பட்டவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர். உலகச் சீன மாநாடு நடைபெறுவது இதுதான் முதன் முறையாகும்.

இம்மாநாட்டின் நோக்கம் என்ன என்பதை நான் சொன்னால் நீங்கள் வியப்படைவீர்கள். உலக நாடுகளில் வாழக்கூடிய மக்கள் தமது தாய்மொழி தவிர இரண்டாவது மொழியாகச் சீனமொழியைக் கற்கச் செய்வது எப்படி என்பதைப் பற்றி ஆராய்வதே இம்மாநாட்டின் நோக்கமாகும்.

## சீன நோக்கத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்

உலகிலுள்ள தொன்மையான மொழி சீன மொழி என்பதிலும், உலகின் மிகப்பெரிய மக்கள் தொகை கொண்ட நாடு சீனா என்பதிலும் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனாலும் சீனமொழியை உலகெங்கும் பரப்பும் முயற்சியில் இத்தனை ஆண்டுகள் கழித்துச் சீனா ஈடுபட்டி ருப்பதன் நோக்கத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

தென்கிழக்காசிய நாடுகளில் இலங்கை தொடங்கி பர்மா, மலேசியா, தாய்லாந்து, கம்போடியா, இந்தோனேசியா, வியட்னாம் மற்றும் பிலிப்பைன்சு வரையில் அனைத்து நாடுகளிலும் தமிழர்கள் பரவி உள்ளனர். நம்மைவிட அதிகமான எண்ணிக் கையில் சீனர்கள் பரவி உள்ளனர். 1949 ஆம் ஆண்டு செஞ்சீனா உதயமானபோது அதன் மாபெரும் தலைவரான மாசேதுங் அவர்கள் பின்வருமாறு அறிவித்தார்.

"பிற நாடுகளில் வாழும் சீனர்கள் அந்தந்த நாட்டுக் குடிமக்களே ஆவார்கள். அவர்களுக் குரிய அத்தனை உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படாமல் அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்துவதற்கு யாரும் முயற்சி செய்தால் அதைப் பார்த்துக் கொண்டு சீனா சும்மா இருக்காது" என அவர் எச்சரிக்கை செய்தார். இதன் விளைவாக அந்த நாடுகளில் வாழும் சீனர் களைத் தொடுவதற்கு அனைவரும் அஞ்சினார்கள்.

## தமிழர்களின் நிலை என்ன?

ஆனால் இதே தென்கிழக்காசிய நாடுகளிலே வாழக்கூடிய தமிழர்களின் நிலை என்ன? அந் நாடுகளைத் தமது கடுமையான உழைப்பி னால் வளம் கொழிக்கச் செய்த பரம்பரை தமிழர் பரம்பரையாகும். ஆனால், சீனர்கள் இந்நாடு களில் வாணிகம் செய்து பிழைக்கப் போனவர் கள். உடல் உழைப்பு செய்யப் போனவர்கள் அல்ல. ஆனாலும் யாருடைய உழைப்பின் பயனாக அந்நாடுகள் வளம் பெற்றனவோ அவர்கள் நன்றி மறந்து தமிழர்களை இந்த நாடுகளிலிருந்து விரட்டி அடித்தார்கள் - இன்னமும் விரட்டி அடிக்க முற்படுகிறார்கள். ஆனால் சீனர்களைத் தொடுவதற்கு அஞ்சுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன?

பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதி யாகவும் சீனா வலிமை மிக்க நாடாக உருவாகி உள்ளது. திட்டமிட்ட செயல்பாடு, இடைவிடாத முயற்சி இவற்றின் காரணமாக உலக வல்லரசு களில் ஒன்றாக உருவாகிவிட்ட சீனம், அடுத்த கட்ட மாகத் தனது மொழியை உலகம் முழுவதற் கும் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதை நமக்கொரு பாடமாக வைத்துக்கொள்ள வேண்டும். நாமும் அரசியல் ரீதியிலும், பொருளாதார ரீதி யிலும் வலிமை பெறும் முயற்சிகளில் ஈடுபட்டாக வேண்டும்.

## துயரக் கண்ணீரைத் துடைக்க முடியவில்லை

தமிழர்கள் அதிகாரத்தில் இல்லையா என்றால் இருக்கிறார்கள். இந்தியாவின் குடியரசுத் தலைவர் ஒரு தமிழர்.


இந்திய அரசின் கருவூலச் சாவியை வைத்துக் கொண்டிருக்கக் கூடிய நிதியமைச்சர் உட்பட 12 அமைச்சர்கள் தமிழர்கள். தமிழ்நாட்டிலும் புதுவையிலும் எக்கட்சியினர் ஆண்டாலும் அவைகள் தமிழர்களின் ஆட்சிகளாக அமைந்துள்ளன. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியசு, தென் ஆப்ரிக்கா போன்ற நாடுகளில் ஆட்சிப் பொறுப்பில் பல தமிழர்கள் அமர்ந்து உள்ளனர். இந்நாடுகளிலுள்ள நாடாளுமன்றங் களில் தமிழர்கள் அங்கம் வகிக்கிறார்கள். சிங்கப் பூரில் தமிழர் ஒருவரே குடியரசுத் தலைவராகப் பதவி வகிக்கிறார். பிரிட்டிஷ் கினியாவில் முதலாவது பிரதமராகத் தமிழ் பரம்பரையில் வந்த செட்டி ஜெகன் பதவி வகித்தார். ஆக பல்வேறு நாடுகளில் அரசியல் அதிகாரம் ஓரளவு தமிழர் கையில் உள்ளது. அப்படி இருந்தும் நமது இனத்தைச் சேர்ந்த சகோதர சகோதரிகளின் துயரக் கண்ணீரை நம்மாலே துடைக்க முடியவில்லை.

அரசியல் அதிகாரங்கள் தமிழர் கையில் இருந்தும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நம்மால் உதவ முடியவில்லை என்று சொன்னால் அதற் குக் காரணம் நம்மை நாமே உணரவில்லை என்பதாகும். பிற இனங்களைச் சேர்ந்தவர்கள் தமக்குக் கிடைத்த அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தித் தங்கள் இனத்தைப் பாதுகாக்கிறார்கள்.

வளைகுடாப் போர் மூண்டபோது அங்கே வாழ்ந்த ஏராளமான இந்தியர்கள் அங்கிருந்து வெளியேறத் துடித்தார்கள். போதுமான விமானங்கள் இல்லாத காரணத்தினால் அவர்களால் வெளியேற முடியவில்லை. அப்போது மத்திய அரசில் அமைச்சராக இருந்த உன்னி கிருஷ்ணன் உடனடியாக வளைகுடா நாடுகளுக்குப் பறந்து சென்றார். அங்கே பல நாட்கள் தங்கித் தனது மலையாள இனத்தைச் சேர்ந்த மக்களுக்கு விமானங்களில் முதலிடம் கொடுத்துப் பத்திர மாக அவர்களைத் தாயகம் திரும்ப வழி செய்தார். அவருக்கு இருந்த அந்தத் துடிப்பு நமது அமைச்சர்களுக்கு இல்லாமல் போயிற்று. கையில் கிடைத்திருக்கக் கூடிய அதிகாரத்தை இனநலத்திற்கும் இன மேம்பாட்டிற்கும் பயன்படுத்தாமல் தன்னலத்திற்கும் கட்சி நலத்திற்கும் பயன்படுத்துபவர்கள் மன்னிக்க முடியாத மாபெரும் தவறைச் செய்கிறார்கள். தமிழினம் தாழ்ந்ததற்கு அதுதான் காரணம்.

வெளிநாடுகளில் வாழும் சீனர்களுக்குச் செஞ்சீன அரசு காரணமாக இருந்து காத்ததைப்போல உலக நாடுகளில் வாழும் தமிழர்களைப் பாதுகாக்க அதிகாரங்களில் அமர்ந்துள்ள தமிழர்கள் முன்வராத காரணத்தினால் அப்பொறுப்பை ஏற்க உலகத் தமிழர் பேரமைப்பு முன்வந்துள்ளது.

*நன்றி - தென் செய்தி*



# மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் உலக அதிசயம்

பேராசிரியர் ஏ.எம். ஜேம்ஸ்



"சேவல் கூவும் ஓசையைக் கேட்டல்ல, ஆலயத்தில் ஓதும் வேதப் பாடல்களின் ஒலியைக் கேட்டுத்தான் மதுரை மக்கள் துயில் நீங்கி எழுவர்" எனக் கூறுகிறது பழம்பெரும் தமிழ் இலக்கியமான பரிபாடல்.

மதுரை மக்களின் உடல், உள்ள, ஆன்ம உணர்வுகளுடன் இவ்வாறு ஒன்றித்திருப்பது அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில்! உலகம் முழுவதிலும் "கோயில் மாநகரம்" (Temple City) என்ற விந்தைமிகு பெயர் பெற்றிருப்பது மதுரை தானே!

தமிழ் இன, மொழி, வரலாறு, பண்பாடு ஆகியவை ரீதியாக மதுரை, தமிழகத்தின் மையப் பூமி எனில், அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயம், மதுரை மக்களின் இதயம்; ஆம், இந்த ஆலயத்தைச் சுற்றித்தானே மதுரை அழகு நிமிர்ந்து நிற்கிறது!

உமாதேவி மலையத்துவஜ பாண்டியன் என்ற மதுரை மன்னனின் வேள்விக்கிணங்கத் தோன்றி அவனது வளர்ப்பு மகளானாள். ஆற்றல் மிகப் படைத்து சிவபெருமானை மணந்து அவருடன் மதுரை வர, சிவனார் சௌந்திரபாண்டியன் என்ற பெயருடன் மதுரையை ஆண்டார்; பின்னர் அவரும் உமா தேவியும் மீனாட்சி சுந்தரேசராக அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலில் இறைவடிவாகினர் என்பது புராணம்.

புராணங்களும் இதிகாசங்களும் இல்லாத நாடு உலகில் எங்கே இருக்கிறது? "புராணங்களும் இதிகாசங்களும் வெறும் நம்பிக்கைகள் அல்லது விசுவாசங்களல்ல. அவை ஒரு நாட்டின் வரலாற்று, கலாச்சாரக் கலைக்களஞ்சியங்கள்" என்று கூறினார் ஓர் அறிஞர்.

'கிழக்கின் ஏதென்ஸ் (Athens)' எனப்படும் மதுரை நகரமும் மீனாட்சி அம்மன் ஆலயமும் 3600 ஆண்டுகட்கு முற்பட்டது என்று கூறுகிறது ஒரு வரலாற்றுக் குறிப்பு.

அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயத்தின் பொலிவுமிகு பொற்றாமரைக்குளம் தான் தமிழ்ச் சங்கம் வளர்ந்த இடம் என்பதும், உலகப் பொது மறையாம் தமிழ் வேதம் திருக்குறள் அரங்கேறிய அல்லது தமிழ்ப்புலவர்களின் அங்கீகாரம் பெற்ற இடம் என்பதும் அரிய பெரிய செய்திகளல்லவா?

வால்மீகியின் இராமாயணம் என்ற மாபெரும் இந்திய இதிகாசத்திலும், கௌடில்லியர் என்ற சாணக்கியரின் "அர்த்த சாஸ்திரம்" என்ற அரசியல் நூலிலும், திருவிளையாடற் புராணம், பரி பாடல், கலித்தொகை, மதுரைக்காஞ்சி மற்றும் பல தமிழ் இலக்கிய நூல்களிலும் மதுரை இடம் பெற்றிருக்கிறது எனில் அதன் கரு அருள்மிகு மீனாட்சி ஆலயம் தானே?

கிறிஸ்துவுக்கு ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்பே மெகஸ்தனிசும் (Megasthenes) அதன்பின் பிளினியும் (Pliny) பின்னர் தாலமியும் (Ptolemy) மதுரையின் சிறப்பைப் பற்றிக் கூறியிருப்பது வரலாற்றுப் பெருமையல்லவா? இவ்வரலாற்றுப்

பெருமைகளில் மீனாட்சி ஆலயமும் முத்திரை பதிக்கும் அல்லவா?

இத்தாலியிலிருந்து இந்தியாவுக்கு வந்து தமிழ் கற்றுப் புலமை பெற்று தமிழ்ப் பண்பாட்டு நெறியில் கிறிஸ்தவத்தை வளர்த்த தேம்பாவணிப் புலவரான ஜோசப் பெஸ்கி என்ற வீரமாமுனிவர், அருள் மிகு மீனாட்சி அம்மன் கோவி

லைப் பார்த்து மகிழ்ந்தபோது, தனது விசுவாச நெறியில் நட்சத்திரங்களின் (விண்மீன் Stars) நாயகியான மரியன்னையை மனதில் துதித்து மீனாட்சி (மீன்+ஆட்சி) வாழ்க எனப் பரவசத்தால் பாடியது எத்துணை சுவையான நிகழ்ச்சி!

கோலமிகு கோபுரங்கள், மாண்புறு மண்டபங்கள், பொலிவுறு பொற்றாமரைக்குளம், சன்னதிகள், சிற்பங்கள், கலைவண்ணங்கள் எனப் பிரம்மாண்டத்தின் வடிவமாக நிற்கும் மீனாட்சி ஆலயம் மற்ற ஆலயங்களிலிருந்தும் மற்ற உலக விந்தைகளிலிருந்தும் மிக உயர்ந்து தனித்து நிற்பது எவ்வாறு?

புராணம், இதிகாசம், வேதம், வரலாறு, மொழி, கலை, இலக்கியம், பண்பாடு, பக்தி, ஆன்மநெறி, இன்னபிற அம்சங்களில் மட்டுமல்ல, மக்களின் அன்றாட சராசரி யதார்த்த வாழ்க்கையாகிய அலுவல், தொழில், வணிகம், நகரமைப்பு, போக்குவரத்து, ஒழுங்கு, கட்டுப்பாடு, மன மகிழ்ச்சி ஆகிய அனைத்து நிலைகளிலும் மக்களின் உடல், உள்ள, ஆன்ம அனுதின வாழ்வோடு இயைந்து விட்டதால், அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயம், உலக விந்தைகள் பட்டியலில் இடம்பெற வேண்டுமென ஆர்வத்தோடு வாக்களிப்போம்; மதுரையின் பெருமை மிகுந்த இந்த அதிசயத்தை உலகுக்குக் காட்டுவோம்!

## மனிதனாய் வாழ...

மனிதனை மனிதன் மதிக்காத தொற்றுகள்
மனிதநேய முரண்பாட்டுப் பறவைகள்
மனிதனாய் நிலைக்க நெருடும் முட்கற்றைகள்

பண்பற்றவர் படியேறி உயர்வதும்
பண்புள்ளவர் கீழ்நோக்கித் தாழ்வதும்
சுயநல வெள்ளச் சுழியின் சுழலில்
மயக்கங்கள், அவலங்கள் மனிதனாய் வாழ

புனிதமாய் வாழ எண்ணும் பெற்றியில்,
இனிய காலடியில் இடறும் கற்களுள்
மனிதனாய் வாழ வழியொன்று வேண்டும்
மனிதனாய் வாழ வழியொன்று பிறக்கட்டும்

*கவியாக்கம்:*

**வேதா இலங்காதிலகம்**
டென்மார்க்

## தமிழர் தம் உரிமை, செல்வாக்கைப் பெற வழிவகைகள் யாவை?

1. தமிழர் தமக்கெனத் தனிநாடு ஒன்றை முதலில் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இந்த நடவடிக்கைக்கு முன்னுரிமை கொடுத்தல் வேண்டும்.
2. கல்வி கற்பதில் வேறு மொழியாரை விட வேறு இனத்தாரைவிடத் தமிழரே தனிமையானவர் என்ற நிலையை அடைதல் வேண்டும். இது போன்றதொரு நிலையை யூதர்கள் கிபி. முதல் நூற்றாண்டில் மேற்கொண்டனர். வெற்றியும் பெற்றனர்.
3. தமிழர் தாய் மண்ணிலும், புலம் பெயர்ந்த இடங்களிலும் தாமாகவே சிறுதொழில், பெரும் தொழில், வணிகம் ஆகியவற்றைத் தொடங்கி அந்தந்தப் பகுதியில் செல்வந்தர் ஆதல் வேண்டும்.
4. இதற்கு உறுதுணையாகத் "தமிழர் மகிமை" போன்ற தமிழர்க்கு உதவுவதற்கு என்றே தனி வங்கிகள் தமிழர் குடியேறிய நாடுகள் அனைத்திலும் ஏற்படுத்தப் பெறுதல் வேண்டும்.
5. தாய் மண்ணிலும், குடியேறிய இடங்களிலும் மற்ற இனத்தார் வெறுத்து, பகைத்து ஒதுக்கும் படியாக நடந்து கொள்ளாமல், இவர்கள் உதவியால் தான் எல்லாம் முடியும் எனும் நம்பிக்கையைத் தம் நம்பிக்கைக்கு உரிய நடத்தைகளாலும், அறிதிறனாலும், உழைப்பாலும் தமிழர் உண்டாக்குதல் வேண்டும்.

யூதர், சீனர், இராஜஸ்தானியர், குஜராத்தியர் தாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இத்தகு நிலைமையைக் கட்டி அமைத்துள்ளனர்.

– முனைவர் **க.ப. அறவாணன்**
முன்னாள் துணை வேந்தர்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் தமிழகத்தில் நூல் வெளியீட்டு விழா

புலமையாழம் பொருந்திய ஈழத் தமிழ்ப் புலவர்கள் வரிசையில் முத்தமிழ்ப் புலமையோடு திகழ்ந்த பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் அவர்கள் எழுதியுள்ளதும் இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் பதிப்பித்துள்ளதுமான "செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்" என்னும் நூலின் வெளியீட்டு விழா 29.10.2005 அன்று தமிழகத் தலைநகர் சென்னை தேவநேயப் பாவாணர் அரங்கில் நடைபெற்றது.

இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகமும் உலகத் தமிழர் பதிப்பகமும் இணைந்து நடத்திய இவ்விழாவை முன்னாள் அமைச்சரும் கம்பன் கழகத் தலைவருமான இராம. வீரப்பன் மங்கல விளக்கேற்றித் தொடங்கி வைத்ததுடன் தலைமையேற்று நூலை வெளியிட்டு நிறைவுரையும் ஆற்றினார். அரிமா சங்கத் தலைவரும் கலைஞர் கருணாநிதி நகர் குடியிருப்போர் நல்வாழ்வுச் சங்கக் கூட்டமைப்பின் தலைவருமான சேவா ரத்னா வைரசேகர் முதல் நூலைப் பெற்றுக்கொண்டார்.


மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர். க.ப.அறவாணன் சிறப்புரையும் பேராசிரியர் பெரியார்தாசன் நூல் ஆய்வுரையும் நிகழ்த்தினர். எழுகதிர் ஆசிரியர் முனைவர் அரு. கோபாலன், இலங்கையின் மூத்த நாவலாசிரியர் செ. கணேசலிங்கம் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகச் செயலாளர் ஐ.தி. சம்பந்தன் இவ் விழாவைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். முன்னதாக உலகத் தமிழர் பதிப்பக உரிமையாளர் உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். கலைமாமணி டி.கே.எஸ். கலைவாணன் தமிழ்வாழ்த்துப் பாடினார். இறுதியில் உலகத் தமிழர் மையத்தின் துணைச்செயலாளர் கவிஞர் நெல்லை இராமச்சந்திரன் நன்றி தெரிவித்தார். செல்வி சோபனா மதிவாணன் விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

முன்னாள் அமைச்சர் கா. வேழவேந்தன், முன்னாள் துணைவேந்தர் முனைவர் முத்துக்குமரன், காவல்துறை உயர் அதிகாரி டி.எஸ். இராசதேவன், ஆன்மிகப் பேச்சாளர் முருகனடிமை சுப்பையா, தலைநகர்த் தமிழ்ச் சங்கச் செயலாளர் புலவர் த். சுந்தரராசன், பன்னாட்டுத் தமிழுறவு மன்ற இயக்குநர் வா.மு.சே. திருவள்ளுவர், பெருங்கவிஞர் நெ.அ. பூபதி, திருக்குறள் நற்பணி மன்றத் தலைவி இலலிதா சுந்தரம், பேராசிரியர் ஆண்டவர் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் திரளாகப் பங்கேற்றனர்.


(உரை விவரம் அடுத்த இதழில்)

வரவேற்புரை



இரா. மதிவாணன்

தமிழ் வாழ்த்து



டி.கே.எஸ். கலைவணன்

நன்றியுரை



நெல்லை இராமச்சந்திரன்

தொகுப்புரை



செல்வி சோபனா


# செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் நூல் வெளியீட்டு விழா காட்சிகள்



திரு. இராம. வீரப்பன் மங்கல விளக்கேற்றுகிறார்.
க.ப. அறவாணன், வைர சேகர்,
ஐ.தி. சம்பந்தன், அரு. கோபாலன்.
இரா. மதிவாணன் உடன் உள்ளனர்.



திரு. இராம. வீரப்பன் நூலை வெளியிடுகிறார்.
இரா. மதிவாணன், ஐ.தி. சம்பந்தன்,
நெல்லை இராமச் சந்திரன், க.ப.அறவாணன்,
வைர சேகர் உடன்உள்ளனர்.



நூல் விற்பனைத் தொகை ரூ. 2150ஐ,
ஐ.தி. சம்பந்தனிடம் வழங்குகிறார் இராம. வீரப்பன்.
இரா. மதிவாணன், க.ப. அறவாணன்
உடன் உள்ளனர்.



ஐ.தி. சம்பந்தனுக்கு சால்வை அணிவித்து
சிறப்பிக்கிறார் இராம. வீரப்பன்



1




2




3




4



5



6



7

1. இராம. வீரப்பன்,
2. க.ப. அறவாணன்,
3. பெரியார்தாசன்,
4. வைர சேகர்,
5. ஐ.தி. சம்பந்தன்,
6. அரு. கோபாலன்
7. செ. கணேசலிங்கம்

New Series Part 2

# Sreemath Illakanam Swamy

By Late: **V. Muttucumaraswamy** B.A. (Lit)

There were many men who may be classed as seers in Ceylon after Gnana - piragasa Tambiran - the first subject of our biographical sketches. Men such as Kadiyit Swamy lived and moved in Vannarpannai. Over his "Samadhi" near the Neeraviady Tank, had been built a Sivan Temple. We find a Kadaiyit Swamy Math in the Navalar Road - on the way to Nallur at Vannarpannai. He lived in the nineteenth century.

We hear of an "Anaikutti Swami" who lies in "Samadhi" at the Arunachaleswara Temple at Mutwal. Over his Samadhi has been built a Sivan Temple by Sir Ponnambalam Arunachalam and Lady Arunachalam. He seems to have frequented Captain's Garden at Maradana - where there is another Sivan Temple originally built by the Nakarattar, the business community (the Chettiars).

The subject of the present biography is one whom we may describe as a Saiva - Siddhantic Tamil seer, an adept in Tamil grammar, and who therefore earned the soubriquet of Illakana - Swamy and became a great authority on Saiva Siddhanta.

He lived for fifty years in South India, alternately in one Math or the other and finally settled at Chidambaram. Saiva Siddhanta scholars of the stamp of C.K. Subramania Mudaliyar flocked to him for final guidance in the publication of important Saiva Siddhanta works in Tamil or Sanskrit. Let us trace the early history of his life.

## His Early Life

He was known as Muttukumara swamy. He hailed from Vannarpannai, which is an important residential section of Jaffna. His father was Vettivetpillai; he himself was descended from an old family - Kumara Kulasingham. He had connections at Puloly. He had a sister, Thaiyalmuttu Sittampalam, also popularly known as Sinnathamby. Sinnathamby Pariyariar, was well known at Vannarpannai. (Mr. K.C. Thangarajah, the Proprietor of Eeela Nadu, is a son of Sinnathamby Pariyariar.)

As a boy, possibly from 8 to 14, Muttukumaraswamy used to frequent the Sivan Temple at Vannarpannai, and also the Ganesha Temple at Villoonri, which was not very far from his house. There this lad would perform his morning ablutions and daily worship.

Possibly in the last quarter of the 19th century, a retired Indian soldier who came to Ceylon bent on pilgrimage, had visited its ancient shrines - Kataragama, Trincomalee, Kanniya and Keerimalai, and finally settled at Vannarpannai, in the environs of the Sivan Temple. He lived in one of the Matts in one of the quadrangular roads of this temple. He worshipped Lord Vytheesivaran and Devi Valampihai daily by the recitation of the names of the Lord Siva - 'Nama Japa' is a very effective medicine for all troubles.

This "Samiyar" had a golden complexion and a robust build; his hair was gnarled and twisted and fell across his shoulders gracefully; holy ashes were found

on his forehead; and a large dot of sandal paste in its centre; round his neck, head, and chest were found garlands of "Urudraksha" beads (as worn by Sannayasins in India); in his hands were brass cymbals (Talam) and around him flocked children who also had little brass cymbals (Talam). The "Samiyar" led the chorus and the children echoed him; on his supple body would be found beads of perspiration; his face was lit with a glow of divine ecstatic joy; this "spectre" of the Samiyar altogether attracted and intrigued the passersby. He gave crystal sugar "Katkandu" to the children around him to endear them all the more to him. He was therefore rightly dubbed the "Katkandu Samiar". Amongst the circle of lads who foregathered around this marvellous figure was young Muttukumaraswamy who was then under 14.

Muttukumaraswamy's kith and kin at Vannarpannai did not fail to notice the changes in his habits. They suspected that he had drifted into an unworldly life; Muttukumaraswamy had tried to leave his home for South India to follow his own bent - but he was prevented from doing so. At last one day he was noted missing from home. This time his kinfolk could not trace him. He was 14. In those days there was no customs barrier between Ceylon and India and there was a two way traffic of the people. Muttukumaraswamy had crossed over (we presume) by a dhoni from Kayts (Ur-Kavalturai) to Nagapatnam, a distance of thirty miles with hardly any money with him.

Muttukumaraswamy had learnt "Sivapirakasam", an important Saiva Siddhanta text, from Ramalingaswamy of Eesaniya Math. Later we learnt that Muttukumaraswamy had settled at Suriyanar Kovil Math and learnt many a Saiva Siddhanta work, Tamil Literature and grammar, and Sanskrit from Muttukumara Thesikar Thambiran, the Head of this "Mutt". He had been a Brahmachari, and having successfully completed his period of training, had donned the "ochre robe" Of him it was said that he had all the perfect qualities of a "Sannyasin" or a "Seer". He had renunciation; regularity of habits, a deep love for Saivaism and advised those who deviated from the straight path and succeeded in putting them onto the correct path.

## Services

While serving at Suriyanar Kovil Math, he published for the first time Sivagnana Pathikam Padiyam and Sivakra Padiyam which were two rare Saiva Siddhanta texts in Sanskrit. The head of this Math held Muttukumara Thambiran in great regard. It was a great pity that when the Head of this Math was working on Gnana Varna Vilakkam, another rare Saiva Siddhanta text, he passed away.

Muttukumaraswamy Tambiran was also responsible for the publication of Mutthi Nichchaya Padiyam - another Saiva Siddhanta text in Tamil by the Dharmapura Math.

Muttukumaraswamy Tambiran published Kiriya Padikai - which is an exposition of the different rituals.

He also published Saiva Sanniyasa Pathathi and Thirunaraiyoor Puranam in Tamil and Sanskrit.

The reason why Sreemath Illakanam Swamy or Muttukumara Thambiran transferred his services from Suriyanar Kovil Math to Chidambaram is a mystery.

At Chidambaram Muttukumara Thambiran helped to finalise the commentaries on Periyapuranam by Siva Kavi Mani C.K. Subramaniam Mudaliyar.

The late Kalaipulavar Navaratnam and a few friends of his, the late Eelakesari Editor N. Ponniah, S. Ambikaipahan, then Principal, Vaidyeswara Vidyalayam,

Vannar pannai, and K. Vairamuttu had met Ila-kkanam Swamy at Chidambaram.

Navaratnam had requested the Swamy to translate the commentary written in Sanskrit by Umapathy Sivam on the Paushkara Agamam into Tamil. Illakana Swamy replied that this should be undertaken by the youth of Tamillakam. When Navaratnam persuaded the Swamy to visit his native land, Jaffna, to stay at Kala Nilayam, and spread the Saiva Siddhantic doctrines the Swamy had reluctantly acceeded to the request - but it was not to be - he had attained Samadhi soon after.

To the innumerable votaries of the Saiva faith in Ceylon who visited Chidambaram, Ilakkana Swamy never revealed himself as a son of the soil of Ceylon.

He was of the opinion that even a cyele of birth is not too much for the study of Sanskrit to understand the Saiva faith. He was of the opinion that the original Saiva Siddhanta texts were in Sanskrit. He was also of the opinion that the time schedule of the past history of the "Sangam" period, as classified by western research, was not correct.

One feels a great wave of emotional and just pride, that Ceylon has contributed not inconsiderably to the history of religious culture.

பெருந்தகையீர், வணக்கம்.

சுடரொளி 2005 சூலை இதழில் "உலகப் பல்கலைக்கழகங்களில் தமிழுக்கு ஆபத்து" என்ற செய்து கண்டு அதிர்ந்து போனேன்.

உலகப் பல்கலைக்கழங்களில் நீக்கப்பட இருக்கும் தமிழ்த்துறையினை மீண்டும் செயல் பட உரிய நடவடிக்கை எடுக்குமாறு நடுவணரசு மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியினை உலகமறிய வெளியிட்ட "சுடரொளி" இதழுக்கு தலைநகர்த் தமிழ்ச் சங்கம் மிகுந்த பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

- பா. இறையெழிலன்
தலைநகர்த் தமிழ்ச்சங்கம், சென்னை.


# மதுரா பிரயாண வழிகாட்டி

மதுரா ரவல்ஸ் நிறுவனர் கலைமாமணி திரு. **V.K.T.** பாலன் அவர்களின் சிந்தனையில் உருவான – **Madura – Welcome, Tamilnadu Tourist Guide** – 450 பக்கங்களைக் கொண்ட கையேடு. தமிழ்நாட்டிலுள்ள தலைநகரங்களின் வரலாறு, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆலயங்கள், சரித்திரப் பிரசித்தி பெற்ற இடங்கள், தமிழ்நாட்டில் நடைபெறும் திருவிழாக் காட்சிகள், கலாச்சார நிலையங்கள், ஆங்காங்கு உல்லாசப் பிரயாணிகளுக்கான ஹோட்டல், மற்றும் சகலவித தகவல்களுடன் வண்ணத்தில் கவர்ச்சியான முறையில் அச்சிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்கு முதற் தடவையாக வருபவர்கள், இந்தக் கையேட்டின் உதவியுடன் தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்க்க இலகுவான வழிகாட்டி இதுவாகும்.


## தமிழ் ஓங்க வைப்போம்!

### கவிஞர் நெல்லை இராமச்சந்திரன்

விண்ணியல் கோள்கள் ஆய்வோம்
விதிகளைத் தமிழால் செய்வோம்;
மண்ணியல் அறிவில் இங்கே
மகத்துவம் காட்டி வைப்போம்;
எண்ணிலாப் பிறநூல் வாரி
இன்றமிழ் மொழிபெ யர்ப்போம்;
நுண்ணிய படைப்பு நாமும்
நூறினைப் புவிக்க ளிப்போம்!

கல்வியை மாற்றிப் பண்டைக்
கதைகளைப் பரணில் வைப்போம்;
வெல்வது அறிவி யல்தான்
விசைதரும் பாடம் கேட்போம்;
பல்விண்க லம்ப டைப்போம்
பாகமும் தமிழால் சொல்வோம்!
நல்புது ஆய்வால் ஞாலம்
நம்தமிழ் ஓங்க வைப்போம்!

அன்பார்ந்த வாசகர்களுக்கு

உலகலாவியத் தமிழர்களின் மேம்பாட்டுக்கான பல தகவல்களையும் பரபரப்புச் செய்திகளையும் தாங்கி எமது இருமாத வெளியீடான சுடரொளி வெளி வந்துகொண்டிருக்கிறது. நவம்பர் - டிசம்பர் வெளியீடு இரண்டாவது உலகத்தமிழ்க் கவிதைப் போட்டி பரிசளிப்பு விழாச் சிறப்புமலராக வெளிவந்துள்ளது.

சுடரொளி இதழ் பேணிக் காத்து வைத்திருக்கக்கூடிய கலை, இலக்கிய, பொருளாதார, அரசியல் வெளியீடாகும். உங்கள் ஆதரவுடன் தொடர்ந்து ஒழுங்காக வெளியிடுவதெனத் தீர்மானித்துள்ளோம். இவ்வெளியீடு தமிழர் வாழும் நாடுகள் எல்லாம் சென்றடைய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாம் தொடர்ந்து ஓராண்டில் வெளியிடவுள்ள ஆறு வெளியீடுகளையும் தாங்கள் அஞ்சல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

சந்தாவை அனுப்பி உதவுவதன் மூலம் எமது வெளியீடு தொடர்ந்து வெளிவர உதவியவர்களாவீர்கள்.

தங்களது ஆதரவும் ஒத்துழைப்பும் என்றென்றும் தேவை. நன்றி.

அன்புடன்

**ஐ.தி. சம்பந்தன்**
**பொன் பாலசுந்தரம்**
(சுடரொளி ஆசிரியர்கள்)

**Annual Subscription :**

| | |
|---|---|
| United kingdom | £12.00 |
| Europe | £15.00 |
| India | Rs.150.00 |
| Sri Lanka | Rs. 300.00 |
| Other Countries | £20.00 |

# சுடரொளி சந்தாப் படிவம்

**(CHUDEROLI SUBSCRIPTION APPLICATION)**

Name : ..........................................................................................

Address : ..........................................................................................

Country : ..........................................................................................

Postcode : ..........................................................................................

Tel. No : ..........................................................................................

Signature : ..........................................................................................

Cheques should be drawn in favour of **"Chuderoli Publication Society"** and sent to 15 Rutland Road, London E7 8PQ United Kingdom.

பல்கலைப் புலவர் க.சி. குலரத்தினம் எழுதிய

# தமிழ் தந்த தாதாக்கள்

## சைவத்தலம் பாடும் தண்டமிழ்ப் புராணம்

நாமெல்லோரும் இன்று மாவலி யுகத்தில் வாழ்கின்றோம் என்று மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றோம். இலங்கையில் மிகப்பெரிய நதியான மாவலி, மத்திய பகுதியில் உற்பத்தியாகிக் கிழக்குப் பகுதியில் வீழ்ந்தபோதிலும், வடக்கில் வாழ்ந்த புலவர்கள் மாவலியை வாழ்த்தி, 'மாவலி கங்கை நாடெங்கள் நாடே' எனப் பொதுமக்கள் இலக்கியங்களில் தேசியம் பாடியுள்ளார்கள்.

மாவலி வடக்கே திரும்பி வளம் கொழித்து வாழ்வளித்தல் வேண்டும் என்று அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் கௌரவ பாலசிங்கம் அவர்கள், தேசாதிபதியின் மந்திரிசபையில் பிரேரித்துள்ளார். ஈழத்துப் பகீரதன் என்று அவரை நாம் போற்றுதல் ஆகும்.

இன்று மாவலி பெருமளவில் வடக்கு நோக்குகிறது. அது இன்னும் தொடர்ந்து ஆனையிறவுக் கடலேரியை நன்னீர் ஏரியாக்க உபகரித்தல் வேண்டும் என்பது எங்கள் அபிலாசையாகும்.

### சரசையில் அகத்தியர்

அன்று மாவலியின் கிழக்குப் பாய்ச்சல் வேகமாகவிருந்தது. அக்காலத்தில் அதன் கரையில் வளமான பிரதேசம் ஒன்று கரசை என வழங்கியது. அங்கே அகத்திய முனிவர் பெயரால் அகத்தியதாபனம் என்னும் திருக்கோயில் ஒன்றுண்டு. அது திருக்கரசை என்றே சிறப்பாக வழங்கி வரலாயிற்று. திவ்வியம் பழுத்த சிவாலயங்கள் மிகுதியாயிருந்த இலங்கை சிவபூமி எனவே முற்காலத்தில் வழங்கி வந்தது.

### திருக்கரசைப் புராணம்

சிவபூமி பொன்போல இலங்கி, இலங்கை என்றும் ஈழம் என்றும் பெயர்கள் பெற்றது. இலங்கையின் இயற்கை வளங்களை எடுத்துக்கூறும் பழைய நூல்களுள் திருக்கரசைப்புராணம் ஒன்று. அது செகராச சேகரமன்னன் காலத்தில் எழுந்ததாகும். அதைப் பாடியவர் யாவர் என்பது புலப்படவில்லையாயினும், அவர் புறச் சந்தானகுரவர் களுள் உமாபதி சிவத்தின் ஞான பரம்பரையில் வந்தவர் என்பது உறுதியாயுள்ளது. "கொற்றங் குடி வாழும் பிரான் சரணத்துறுதி கொண்டே" என வரும் பாடல் இவர் திருக்கைலாய பரம் பரைக்குத் தொடர்பானவர் என்பதை வலியுறுத் தும். இந்நூல் தக்கிணகைலாச புராணத்தின் வழி வந்த புராணமாகும். அன்றி உமாபதிசிவம் பாடியருளிய கோயிற் புராணத்தின் நினைவையும் உண்டாக்குகிறது.

திருக்கரசைத் திருக்கோயில், கோபுரங்களை மதில்கள், பெரிசுற்றுப் பிரகாரங்களில் பரிவார தெய்வங்கள் சூழ அமைந்த பெரிய சிவாலய மாகும். பிரகார முதல் தெய்வமாய் மூத்த கணப திக்குப் புலவர் தோத்திரம் பாடி யகக் கருத்துள் வைத்து வழிவகுத்த வண்ணம் சிறப்பாகவுள்ளது. குரு வணக்கம் கூறிய புலவர், தில்லையில் வாழ்ந்த ஈசான சிவன் என்பாரைத் தம் இதயத்தில் இடம் பெறச் செய்தமை நயமாகவுள்ளது. ஈசான சிவன், சர்வ சிவன் முதலான சைவக்குருமார் சோழப் பேரரசர்களின் தட்சாகுருமாராயிருந்தமை வர லாறு கண்ட பெருமை.

அன்றொருநாள் அகத்திய முனிவர் மாவலியில் நீராடிக் கொண்டபோது அசரீரி கேட்டு அதன் வண்ணம் தாபித்த திருக்கோயிலைப் புகழ்ந்து பாடும் புராணம் 170 பாடல்களைக் கொண்டிருக்கிறது. மறைந்த பாடல்கள் பல எனக் கொள்ள இடமுண்டு. எஞ்சிய பாடல்களிற் பல சிலேடை நயம் ததும்புவனவாயுள்ளன.

திருக்கோயில் ஏழு மதில்கள் சூழ்ந்ததாய், எட்டுப் பெருவாயில்கள் கொண்டதாய், கோபுர முயர்ந்ததாய், ஒன்பது வளைவுகள் அமைந்ததாய், சித்திர விமானம் உள்ளதாய், முத்தமிழ் வளர்த்த அரங்குகள் அமைந்ததாய் பெரு வீதிகள் பொலிய விளங்கியது.

இவற்றையெல்லாம் போர்த்துக்கேயர் தகர்த்தார்களோ, உட்பகைவர் உடைத்தார்களோ தெரியவில்லை.

திருக்கோயில் சேர்ந்த வெளிநிலங்களில் செந்நெல், மிகுதியாக விளைந்த குன்றெனக் குவிந்து கிடந்தது. மன்மதன் விரும்பும் சோலைகள் இருந்தன. புலவர்கள் தமிழாய்ந்த பட்டிமண்டபங்கள் இருந்தன. மகளிர் அன்னநடை நடக்க சிலம்புகள் ஆர்த்தன. அவர்கள் இடையிலணிந்த எழுகோவை, எண்கோவை, காஞ்சிமேகலைகள் ஆர்த்தன. அவர்களின் செந்துவர் வாயிதழ்கள் துடித்தன. வயல்களில் உழவர் ஆர்ப்பு ஒரு புறமாக நாட்டில் நடந்த விழாக்களில் ஆர்ப்பு ஒருபுறமாக ஒலித்த தோற்கருவி துளைக்கருவி ஒரு புறமாகவும், சோலைகளில் வண்டினங்கள் ஒரு புறமாக, ஆர்த்தன என்று இலங்கையின் அருமையை அறியலாம்.

வரையெலா மாரம் ஆரம்
　　வளமெலாம் நன்கார் நன்கார்
நிரையெலாஞ் சாலி சாலி
　　நிரையெலாங் கன்னல் கன்னல்
தலையெலா நீல நீலத்
　　தடமெலா நாறு நாறுன்
கரையெலாமன் மன்னங்
　　கடலெலாமீழ மீழம்.

# தமிழும் சைவமும் வளர்த்த பரராசசேகரன்

யாழ்ப்பாணத்து அரசர்கள் பதின்மூன்றாம் பதினான்காம் நூற்றாண்டுகளில் சீரும் சிறப்பும் செல்வமும் பீடும் பெருமையும் பெற்று வாழ்ந்து பின்னர், பதினைந்தாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் வளங்குன்றி, வருவாய் குன்றி, வலிமை குன்றி இருந்தனர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் இறங்கிப்போன மார்க்கோபோலே, என்னும் வெனிஸ் வர்த்தகர், யாழ்ப்பாணத்து அரசர் செல்வப்பெருக்கை, உதாரண குணத்தை வியந்து எழுதியுள்ளார். பதினான்காம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணத்தில் இறங்கிய மதகுரு ஒருவர், யாழ்ப்பாணத்து மன்னனின் செல்வப் பெருக்கை, பொன், வெள்ளி, முத்து முதலியவற்றில் மட் டிட்டு எழுதியுள்ளார். பதினான்காம் நூற்றாண் டின் மத்திய காலத்தில் இபின் பத்துதா என்னும் முஸ்லிம் பிரயாணி, யாழ்ப்பாணத்து மன்னனின் உபசரிப்பில் இங்கே தங்கிப் போயுள்ளார். அவரையடுத்து மரிக்னோலி என்னும் கத்தோ லிக்கப் பெரியார், யாழ்ப்பாணத்தில் தங்கிக் கீரி மலையிலும் நீராடி யாழ்ப்பாணத்து அரண்மனை யையும் கண்டு உபசரிக்கப் பெற்றுப் போயுள் ளார்.

பின்னர் குணபூஷணன், வரோதயன் முதலான மன்னர்கள் ஆட்சி செய்தார்கள். இவர்கள் காலத்திலும் இவர்களையடுத்துப் பட்டத்துக்கு வந்த செகராச செயவீரசிங்கன் முதலானோர் காலத்திலும் நாடு பெருமை பெற்றிருந்தது. சைவத் தையும் தமிழையும் விட வேறு சிந்தனைகள் இடம்பெறவில்லை.

## இராமேசுவரம் திருக்கோயிற் பணி

பதினைந்தாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத் தில், குணவீரன் காலத்தில், சைவ சமயப் பணிகள் நன்றாக நடைபெற்றன. இவன் கடல் கடந்து இராமேஸ்வரத் திருக்கோயிலைப் பெருமளவில் புனருத்தாரணஞ் செய்தான்; மூலஸ்தானம் என்னும் கருப்பக்கிரகத்துக் கருங்கற் பணிகளை இவன் செய்தமை கல்வெட் டுக்களில் புகழ் பெற்றுள்ளன. திருக்கோணமலையில் கருங்கற் களைச் செப்பஞ் செய்து, தோணிகளில் ஏற்றிச் சென்றான் என்பது வரலாறு. குணவீரனுக்குப் பின் கனக சூரியன் காலத்தில் ஓரளவு மங்குதிசை ஆரம்பித்தது, இவன் காலத்தில் தென் இலங் கையில் கோட்டே என்னும் ஜெயவர்த்தன புரத்தைக் கட்டியெழுப்பிய ஆறாம் பராக்கிரம பாகு என்பவன், தமிழ் நாகரீக மறிந்தவனாய்த் தன் ஒரேயொரு குழந்தையான பெண்ணுக்கு உலகுடைய தேவி என்று பெயர் வைத்ததோடு, அவளைத் தமிழ்நாட்டு நல்லூர்ப் பெருமாள் என்பவனுக்குத் திருமணமும் செய்து வைத்தான்.

பராக்கிரமபாகு தான் வளர்த்த மலையாளப் பணிகர் குல இளைஞன் செண்பகப் பெருமாள் என்னும் வீரனைப் படை வலியோடு யாழ்ப்பா ணத்துக்கு அனுப்பினான். அவனை எதிர்க்க முடியாத கனகசூரியன் மனைவி மக்களோடு தமிழ்நாட்டுக்கேகித் திருக்கோவலூரில் புகல டைந்து மக்களை வீரராகப் பயிற்றுவித்து வந்தான்.

செண்பகப்பெருமாள், 1450 முதல் 1467 வரை, யாழ்ப்பாணத்தைப் புவனேகபாகு என்னும் பெயர் புனைந்து ஆண்ட பின், விஜயபாகு என்பவனை அரசாள வைத்து ஜெயவர்த்தனபுரஞ் சென்று, ஆறாம் புவனேகபாகுவென முடி புனைந்து அரச னானான். இவ்வாறாகத் திருக்கோவலூரிலிருந்த கனகசூரியன் வீரரான மக்களுடன் தமிழ்நாட்டுப் படைத்துணையோடு மீண்டு, விஜயபாகுவைத் துரத்திவிட்டுத் தன்னாடும் தன்னரசும் பெற்று முன்போல ஆட்சி செய்து வந்தான். அவன் 1467 முதல் 1478 வரை ஆண்டான் என்பர்.

## பொங்கிய காலத்துப் பரராசசேகரன்

கனகசூரியனுக்குப்பின் அவனுடைய மூத்த மைந்தன், பரராசசேகரன் முறைப்படி அரசனாகி, நல்லூரை அழகுபடுத்தி, நகரின் நாற்புறங்களிலும் கிழக்கில் வெயிலுகந்த பிள்ளையார் கோயிலை யும், தெற்கில் கைலாசநாதர் சிவாலயத்தையும், மேற்கில் வீரமாகாளி அம்மன் கோயிலையும், வடக்கில் சட்டநாதர் சிவாலையத்தையும் கட்டு வித்தான்.

இவன் திருக்கோவலூரில் முறையாகத் தமிழ் படித்தவனாதலால், தமிழ்நாட்டிலிருந்து பெருந் தொகையான புலவர்களை வரவழைத்து நல்லூ ரைச் சூழக் குடியிருத்தி தமிழ் வளர்த்தபோது, இவன் தம்பி செகராசசேகரனும் மருகன் அரசகேசரியும் பெரும் புலவர்களாகி, நாயன்மார் கட்டு என்னும் இடத்தில் தாமரைக் குளத்தருகே மாட மாளிகை அமைத்துத் தமிழ்ச்சங்கம் நிறுவி, சரஸ்வதி மகால் என்னும் நூலகம் அமைத்து ஆயிரக்கணக்கான ஏடுகளைத் தொகுத்து வைத்துப் படித்துப்பயன் செய்து பைந்தமிழ்ப் பரிபாலனம் செய்வாராயினன்.

பரராசசேகரன் பெயரால் இணுவில் பிள்ளையார் கோயில் நின்று நிலவுகிறது. எனவே இவன் நல்லூருக்கும் அப்பால் திருக்கோயில்கள் அமைத்துச் சைவபரிபாலனஞ் செய்தான் என்பது வெளிப்படை. பதினைந்தாம் நூற்றாண் டுப் பரராசசேகரன் பைந்தமிழ் வளர்த்த பக்தி மான். அவன் புலவர்களுக்கு அள்ளிக் கொடுத்த தருகையான். அவன் காலத்து எழுந்த நூல்கள் பல நாயன்மார்கட்டு நூல் நிலையத்தில் இருந்தன என்றும் பிற்காலத்தில் பறங்கியர் காலத்தில் அழிந்தன என்றும் அறியக்கிடக்கிறது. ●



# ஏசுவின் உபதேசங்கள்

“நீங்கள் பூமிக்கு உப்பாக இருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால் எதனால் சார மாக்கப்படும்? வெளியே கொட்டப்பட்டு வதற்கும் மனிதரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறு எதற்கும் உதவாது.

விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடி வைக் காமல், விளக்குத் தண்டின் மேல் வைப் பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவ ருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.

வானமும், பூமியும் ஒழிந்து போனாலும், நியாயம் உறுதியாக உள்ளது. எல்லாம் நிறை வேறும் அளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று உண்மை யாக உங்களுக்குச் சொல்லு கிறேன்.

தீமையை எதிர்த்து நிற்க வேண்டாம்; உன்னை ஒருவன் வலது கன்னத்தில் அறைந்தால், அவ னுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் காட்டு. உன் னோடு வழக்காடி உன் துணியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு.

ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரவேண்டி பல வந்தம் செய்தால் அவனோடு இரண்டு மைல் தூரம் போ.

உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு. உன்னி டத்தில் கடன் வாங்க விரும்புகிறவனிடம் முகம் கோணாதே.

உங்கள் சத்ருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங் களை நிந்திக்கிறவர்களுக்காகவும் ஜபம் செய்யுங்கள்.

மற்றவர்கள் காண வேண்டுமென்று உங்கள் தர்மத்தைச் செய்யாதீர்கள். தர்மம் செய்யும் போது உன் தர்மம் அந்தரங்கமாய் இருப்பதற்கு உனது வலது கை செய்கிறதை இடது கை அறியாதிருக்க வேண்டும்.

நீயோ ஜபம் செய்யும்போது ஏமாற்றுக்கார ரைப் போலிருக்க வேண்டாம். மனிதன் காணும் படியாக அவர்கள் ஜப ஆலயங்களிலும் வீதிகளின் சந்துகளிலும் நின்று ஜபம் செய்ய விரும்புகிறார் கள். நீயோ ஜபம் செய்யும்போது, உன் அறைக் குள் நுழைந்து கதவைப் பூட்டி அந்தரங்கத்தி லிருந்து உன் பிதாவை நோக்கி ஜபம் செய்.

பூமியிலே நீங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் புழுவும் அவற்றைக் கெடுக்கும். இங்கே திருடரும் குறி வைத்துத் திருடுவார்கள். பரலோகத்தில் உங்களது பொக்கி ஷங்களைச் சேர்த்து வையுங்கள்.

இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய எவ னாலும் முடியாது; ஒருவனைப் பகைத்து மற்ற வனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டை செய்வான். தேவ னுக்கும் உங்கள் உலக ஆசைப்பொருளுக் கும் ஒரே சமயத்தில் ஊழியம் செய்ய உங்களால் முடியாது.

கண்ணானது சரீரத்தின் விளக்காக இருக் கிறது; உன் கண் தெளிவாக இருந்தால் உன் சரீரம் முழு வதும் வெளிச்சமாக இருக்கும். உன் கண் கெட்ட தாய் இருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளா யிருக்கும். இப்படி உன்னிலுள்ள வெளிச் சம் இருளாயிருந்தால் அந்த இருள் எவ்வளவு அதிகமா யிருக்கும்!

ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள். அவை விதைக்கிறதுமில்லை; அறுக் கிறதுமில்லை; களஞ்சியங்களைச் சேர்த்து வைக் கிறதுமில்லை. அவற்றையும் உங்கள் பரமபிதா காப்பாற்றுகிறார். அவற்றைப் பார்க்கிலும் நீங்கள் மேல் அல்லவா?

கவலைப்படுகிறதனாலே, உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?

நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாத படிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று முடிவு கட்டாதீர்கள்.

ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின் படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; மற்றவர்களுக் கான அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணரா மல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப் படும். தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்க முடி யாது. கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்க முடியாது. நல்ல கனிகளைக் கொடுக்காத மர மெல்லாம் வெட்டுண்டு, தீயிலே போடப் படும்.

பரிசுத்தமானதை நாய்களுக்குப் போடா தீர்கள். உங்கள் முத்துக்களைப் பன்றிகள் மேல் போடா தீர்கள். போட்டால் தங்கள் கால்களால் அவற்றை மிதித்து, திரும்பி வந்து உங்களைப் பீறிவிடும்.

இரக்கம் உள்ளவர்கள் பாக்யவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். இதயத்தில் சுத்தம் உள்ள வர்கள் பாக்யவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப் பார்கள். சமாதானம் செய்கிறவர்கள் பாக்யவான்கள்; அவர்கள் தேவனு டைய புத்திரர் எனப்படுவார்கள். நீதியால் துன்பப்படுகிறவர்கள் பாக்யவான்கள்; பரலோக ராஜ்ஜியம் அவர்களுடையது.

ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இதயத்தில் அவளோடு விபசாரம் செய்தது போலாகும். உன் வலதுகண் உனக்குத் துன்பம் உண்டாக்கினால் அதைப் பிடுங்கி எறிந்து போடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும் உன் அங்கங் களில் ஒன்று கெட்டுப் போவது உனக்கு நலமாக இருக்கும்.”

## புலம்பெயர் எழுத்தாளர்களுக்கு ஒரு நற்செய்தி

பல நாடுகளிலும் வாழ்ந்து வருகின்ற புலம் பெயர் எழுத்தாளர்களின் கதை, கவிதை, கட்டுரை, நாடகங்கள் முதலான படைப்புகளைச் சிறப்பாகவும் சிக்கன மாகவும் தரமானதாகவும் அச்சிடுவதற்குச் சென்னையில் உள்ள **உலகத் தமிழர் பதிப்பகம்** முன்வந்துள்ளது.

சுடரொளி வெளியீட்டுக் கழகம் அண்மையில் பதிப்பித்துள்ள செந்தமிழ் வளர்த்த செம்மல்கள், புதுயுகத் தமிழர், சுடரொளி பரிசளிப்பு விழா சிறப்பு மலர் முதலானவற்றை அழகாக அக்கிட்டு உருவாக்கித் தந்தவர்களும் அவர்களே.

நூல்களை அச்சிட விழையும் படைப்பாளர்கள் சுடரொளி வெளியீட்டுக் கழகத் துடனோ, உலகத் தமிழர் பதிப்பகத்துடனோ கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

**சுடரொளி வெளியீட்டுக் கழகம்**
**CHUDEROLI PUBLICATION SOCIETY**
**15, Rutland Road, London E7 8PQ, U.K.,**
**Tel. 0044 208 552 6992**
**Email : itsampanthan@hotmail.com**

**உலகத் தமிழர் பதிப்பகம்**
**ULAGATHAMIZHAR PATHIPPAKAM**
**4, Sourashtra Nagar 7th Street**
**Choolaimedu, Chennai - 600 094.**
**Tel. 0091 44 55180155/ 9444111951**
**Email: eramathi@rediff.com**



# A.M.PATEL & CO
# SOLICITORS

## IMMIGRATION, CRIME, CONVEYANCING
## ADVICE AND ASSISTANCE AT POLICE STATIONS

## வீடு வாங்க, விற்க, ஒழுங்குகள் செய்து தரப்படும்.
## பொலிஸ் நிலைய விடயங்களுக்கும்
## குற்றவியல் வழக்குகளுக்கும் உதவுதல்
## ஆலோசனை வழங்குதல்

**Mr. Thangarajasingam (Thaa) - Partner**
**Solicitor**
**46, Hoe Street**
**Walthamstow**
**London E17 4PH**

**Tel : 020 8521 4686**
**020 8520 7100**
**020 8520 7105**
**Mob : 07976 660 635**

சாரல் நாடன்:

# மலையக விழிப்புணர்வின் ஓர் அறுவடை

என்.செல்வராஜா, நூலகவியலாளர், இலண்டன்.

சென்ற இதழின் தொடர்ச்சி...

மத்திய மாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் எழுதப்பட்டு 2003இல் வெளியாகிய மலையகத் தமிழர் வரலாறு என்ற சாரல் நாடனின் மற்றொரு ஆய்வு நூல் சாகித்திய மண்டலப் பரிசை மீண்டும் அவருக்குப் பெற்றுக் கொடுத்தது.

தொழிற்றுறையில் ஒய்வுபெற்றதன் பின்னர் 2000இல் இவரது இலக்கியப் பணிகள் வீறுடன் செயற்படுவதை இப்பொழுது காணமுடிகின்றது. சாரல் வெளியீட்டகம் என்ற நூல் வெளியீட் டகம் ஒன்றை உருவாக்கி, அதன்வழியாகத் தரமான ஆய்வுகளை நூலுருவில் கொண்டு வரும் பணியில் சாரல்நாடன் அவர்கள் ஈடுபட்டு வருகின்றார். அதன் ஒரு கட்டமாக 'மலையக இலக்கியம்: தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலை கொட்டகலை: சாரல் வெளியீட்டகம் ஜூலை 2000இல் வெளியிட்டுள்ளது. மலையக இலக்கியம் உருவான வரலாறு, அதன் ஆரம்ப நிலைப்பாடுகள் ஆகியவற்றை விளக்கும் நூலாக இந்நூல் அமைந்துள்ளது.

'பிணந்தின்னும் சாத்திரங்கள்' என்ற மற்றொரு நூலையும் கொட்டகலை: சாரல் வெளியீட்டகம், நவம்பர் 2001இல் வெளியிட்டுள்ளது. இது சாரல் குறுநாவல் தொகுப்பொன்றாகும். ஜே.வி.பி. ஆயுதம் ஏந்திய காலகட்டத்தில் இலங்கையில் நிலவிய பயங்கரவாதப் பின்னணியில் மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நேர்ந்த இன்னல்கள் பற்றிய சித்தரிப்பாகவும், கறுப்பு ஜூலைக்கு இலங்கை உட்படுத்தப்பட்ட வேளையில் மலையகத்தில் ஓர் இந்தியப் பத்திரிகையாளனுக்கு நடந்ததைச் சித்தரிப்பதாகவும் அமையும். 'பிணந்தின்னும் சாத்திரங்கள்', 'நம்பிய வருக்காக, 'சமரசம்', 'பலி' ஆகிய நான்கு குறு நாவல்கள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

சாரல்நாடன் தான் எழுதிய சிறுகதைகளை மாத்திரம் கொண்ட சிறுகதைத் தொகுப்புகளை இதுவரை வெளியிட்டதாகத் தெரியவில்லையாயினும், இவரது கதைகள் பல்வேறு சிறுகதைத் தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளன. கதைக்கனிகள் (1991), இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள் (1994), மலையகச் சிறுகதைகள் (1997), சுதந்திர இலங்கையின் தமிழ்ச் சிறுகதைகள் (1998) ஆகியன அவற்றுள் சிலவாகும்.

இவரது கட்டுரைகளும் சில தொகுப்பு நூல்களில் இடம்பெற்றுள்ளன. இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் 1995இல் வெளியிட்ட 'தமிழ் நாட்டார் வழக்காற்றியல்' என்ற ஆய்வுத் தொகுப்பில் சாரல்நாடனின் "மலையக நாட்டார் பாடல்கள்" என்ற கட்டுரை இடம்பெற்றுள்ளது. மத்திய மாகாண அரசின் சாகித்திய மலர்கள் பலவற்றில் இவரது ஆக்கங்கள் இடம்பெறத் தவறுவதில்லை.

கடந்த 2003 மார்ச் 22-23 திகதிகளில் கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் 61ஆவது ஸ்தாபகவிழாவின் போது, இறுதிநாளான 23ஆம் திகதி சாரல் நாடன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவொன்றை மேற்கொண்டார். அவரது நீண்ட சொற் பொழிவின் எழுத்துரு கொழும்புத் தமிழ்ச்சங் கத்தின் அதிகார பூர்வ ஏடான 'ஓலை 27'இல் வெளியாகியுள்ளது. அதில் அவர் கூறியுள்ள கருத் துக்களை மீள இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

"மலையக இலக்கிய கர்த்தாக்கள் என்றறியப்பட்ட பலரின் எழுத்துக்கள் மலையக இலக்கியச் சோலையை வளம்படுத்துவதாக அந்தந்தக் காலங்களில் தோன்றி மறைந்த பத்திரிகைகளிலும் சிற்றேடுகளிலும் எழுதப்பட்டன. இன்றும் இச்சிற்றேடுகளில் தான் இவை உயிர்வாழ்கின் றன. படைத்த அவர்கள் தம் படைப்பின் துடிப்பை மாத்திரமே பிரதானமாக எண்ணினர். அவற்றை மீட்டிப் பார்க்கவோ, மீளப்படைக்கவோ அவர்களுக்கு நேரம் இருக்கவில்லை. நினைப்பும் இருக்கவில்லை. அதற்கான அவசியம் இல்லாதது போலத்தான் நமது பெரும்பாலான எழுத்துக்கள் அமைந்திருக்கின்றன. உடல் உழைப் பாளர்களாக அறியப்பட்ட கல்வி அறிவு பெறா திருந்த அவர்களது காலத்தில் அது சரியாக இருந்திருக்கலாம். இன்று நிலைமை வேறு. தமது காலத்தைய ஆதாரங்களாக எதையுமே விட்டு வைக்காத அவர்களின் வாழ்க்கை முறைமை நமக்குக் கற்றுத் தந்ததெல்லாம் நம்மை ஆவணப் படுத்தலுக்காக உந்தச் செய்கின்றன."

சாரல்நாடன் அவர்களின் மேற்கூறப்பட்ட சிறப்புரைப் பகுதியின் தாக்கத்தின் வெளிப்பா டாக நாமும் அவரிடம் ஒரு வேண்டுகோளை

விடுக்கவேண்டியவர்களாகின்றோம். கொட்ட கலை இலக்கிய வட்டம், மலையகக் கலை இலக்கியப் பேரவை ஆகியவற்றின் தலைவராகவும், சாரல் வெளியீட்டகத்தின் இயக்குநராகவும் இருந்து முழுமையாக இலக்கியப்பணியில் தன்னை இன்று ஈடுபடுத்தி உழைத்துவரும் சாரல்நாடன் அவர்கள், சிதறிக்கிடக்கும் தனது படைப்புக்கள் அனைத்தையும் தேடித் தொகுத்து ஒழுங்குபடுத்தித் தொகுப்பு நூல்களாக்கி வழங்கவேண்டும். இன்று அவர் முன்னுள்ள பாரிய இலக்கியப் பணி அதுவாகவே இருக்கும். இதற்கான ஒழுக்கச் செயற்பாட்டுத் திறன் இவரி டமுண்டு. வசதியும் வாய்ப்பும் உண்டு. தனக்கென ஒரு பதிப்பகமும் உண்டு. இதை இவரது எதிர்கால இலக்கியப் பணிகளில் முக்கியமானதாகக் கொள் வார் என்றே நம்புகின்றேன். இவரது பணிக்கு புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் நிச்சயம் கைகொடுப்பார்கள்.

'மல்லிகை' இதழின் ஆகஸ்ட் 1991 இதழின் அட்டைப்படத்தில் இடம்பெற்று சிறப்புச் செய்யப்பட்ட இவர் மீண்டும் 'ஞானம்' சஞ்சிகையின் ஜனவரி 2005க்குரிய இதழின் அட்டையிலும் இடம்பெற்றுள்ளார். அண்மையில் இலங்கை அரசின் இலக்கிய வித்தகர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவ்வாண்டு மணிவிழாக் காணும் சாரல்நாடன் அவர்களின் மலையகத் தமிழரின் வரலாற்றுத் தடத்திற்கானதும் தமிழ் இலக்கியத் திற்கானதுமான தேடல் மற்றும் இலக்கிய ஆய்வியல் பணிகள் மேலும் சிறக்க வாழ்த்துவோம்.

# 'தமிழ் மொழியைக் காப்பதற்கான போராட்டத்துக்கு வடிவம் தரவேண்டும்'

## கவிஞர் காசிஆனந்தன்

தமிழ்மொழியைக் காப்பதற்கான போராட்டத்துக்கு உடனடியாக வடிவம் கொடுத்தாக வேண்டும் என்று கவிஞர் காசி ஆனந்தன் வலியுறுத்தினார். சென்னையில் நடைபெற்ற செஞ்சிக்கோட்டை முதல் செங்கோட்டை வரை "செஞ்சியார் முழக்கம்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் அவர் பேசியது:

"உலகிலேயே தமிழ்நாட்டிலும், தமிழீழத்திலும்தான் தமிழ்த் தேசிய இனம் இருக்கிறது. மற்ற இடங்களில் வெறும் இனமாகவே தமிழ் உள்ளது. இந்த இரண்டு இனத்துக்கும் இடையேதான் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

மொழி அழிந்தால் ஒரு இனம் அழியும். இந்தி மொழி வரும் என அறிவித்தபோது தமிழர்கள் உணர்வுப் பூர்வமாக அதை எதிர்த்ததால் வரவில்லை. ஆனால், ஆங்கிலம் தமிழிலே கலந்து அழித்துக் கொண்டிருக்கிறது.

ஆங்கிலேயர் ஆளாத காலத்தில் நம்மை ஆங்கிலம் அழிப்பதுதான் வேதனை. தமிழை வெள்ளைக்காரர்கள் வளர்த்தனர், பரதநாட்டியக் கலையைப் போற்றினர். தற்போது வயலின், கிளாரினட் போன்ற மேனாட்டு இசைக் கருவிகளில் தமிழ் இசை இசைக்கப்படுகிறது. தமிழ் இசைக் கருவியான புல்லாங்குழலில் 'பாப்' இசைக்கின்றனர். தமிழ்நாட்டின் முதல் திரைப்பட இயக்குநரான டங்கன் தூய தமிழில் வசனம் எழுதி, பாட்டு அமைத்து படத்தை இயக்கினார். சிறந்த சாதனமான இந்தத் துறையில் ஆங்கிலம் 80 சதவீதம் கலந்துவிட்டது. மீளமுடியாத அளவுக்குத் தமிழ் மக்களை ஆங்கிலம் விழுங்கி வருகிறது. இந்நிலை நீடித்தால் மொழி, பண்பாடு, கலாசாரம் ஒவ்வொன்றாக அழியும். 50 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ் இனமே இல்லாமல் போய்விடும்.

இந்திய அரசியல் அமைப்பைப் போல தமிழர்களுக்கு உரிமை தர விரும்புவதாக இலங்கைப் பிரதமர் ரனில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய அரசியல் அமைப்பின்படி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு இருந்தால் மட்டுமே எந்த முடிவையும் எடுக்க முடியும். இதைப்போல இலங்கை அரசியல் அமைப்பு இல்லை.

அங்கு மூன்றில் இரண்டு பங்கு சிங்களவர்கள் இருப்பதால் தமிழர்களுக்கு உரிமை தரும் சட்டத்தை அவர்கள் எந்த நேரத்திலும் தூக்கி எறியலாம். இந்த விஷயத்தில் இலங்கைத் தமிழர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கிறார்கள். இதை ம.தி.மு.க தலைமையும் கருத்தில் கொள்ள வேண்டும்".

# ஈழத்து நாடகமேதை வைரமுத்து

**– கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை**

**கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை அவர்கள் அமரராகிய செய்தி எம்மையெல் லாம் ஆழ்ந்த துயருறச் செய்துவிட்டது. அன்னாரின் மறைவு தமிழ் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். சுடரொளியின் சார்பிலும் நேயர்கள் சார்பிலும் ஆழ்ந்த கவலையையும் அனுதாபங்களையும் அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவிக்கிறோம். ஆசிரியர்**

## வாழ்க்கை வரலாறு – 8

### வஸந்தகான சபா

**வை**ரமுத்துவை அரிச்சந்திரனாக நடிக்க வைத்து 'மயான காண்டம்' நாடகத்தை மேடையேற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டதும் 'வைரமுத்து குழுவினர்' அளிக்கும் மயான காண்டம் என்பதா அல்லது ஏதாவது ஒரு சபாவின் பெயரைக் குறிப்பிட்டு அது அளிக்கும் மயான காண்டம் என்பதா எனும் வினா எழுந்தது.

இலங்கையர்கோன் இது பற்றி வைரமுத்துவுடனும் ஏனைய நடிகர்களுடனும் கலந்தாலோசித்தார். இறுதியில் இக்குழுவினரைக் கொண்ட நாடகசபா ஒன்றை ஆரம்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

வைரமுத்துவின் மூத்த மகளின் பெயர் வஸந்தா. இது ஒரு இராகத்தின் பெயருமாகும். ஏனைய பிள்ளைகளுக்கும் இராகங்களின் பெயர்களையே வைரமுத்து சூட்டியுள்ளார் என்பது இவர் இசை மீது கொண்ட ஆழமான பற்றுதலைக் குறிப்பதாகும். வஸந்தா சிறுவயதில் லோகிதாசனாகவும், வளர்ந்த பின்னர் சந்திரமதியாகவும் நடித்துப்புகழ் பெற்றவர். எனவே நாடக சபாவுக்கு மகளின் பெயரையும் இணைத்து "வஸந்தகான சபா" என இவர் பெயரிட்டார்.

வஸந்தகான சபாவின் கால்கோள் விழா 1953ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இடம்பெற்றது. இலங்கையர்கோன் தலைமையில் நிகழ்ந்த இவ்விழா வைரமுத்துவின் எதிர்காலப் புகழுக்கு ஓர் அத்திவாரமாக அமைந்தது.

### நாடகங்களில் வைரமுத்துவின் புதல்விகள்

வஸந்தகான சபா மேடையேற்றிய முதலாவது நாடகம் தீபாவளிக் கலைவிழாவில் அரங்கேறிய மயான காண்டமேயாகும். முதலாவது நாடகமே சபாவுக்கும் வைரமுத்துவுக்கும் மாபெரும் வெற்றியீட்டிக் கொடுத்தது. இவ்வெற்றி கொடுத்த உத்வேகமே சபாவின் அளப்பரிய கலைச் சேவைகளுக்கும், வைரமுத்துவின் நாடகப்பணி தொடர்பான தேடல்களுக்கும் தூண்டுகோலாக அமைந்தது.

இச்சபா ஆரம்பிக்கப்பட்ட பொழுது நடிகர்களே உறுப்பினர்களாக இருந்தனர். வி.வி. வைரமுத்து, வசாவிளான் ப.மார்க்கண்டு, கரவெட்டி வி. நற்குணம், மயிலங்காடு பத்மாவதி சிவசம்பு, பருத்தித்துறை பழனி சின்னத்துரை, சி. செல்வராஜா ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்களை நடிகர்களாகக் கொண்டே முதலாவது மயானகாண்டம் மேடையேற்றப்பட்டது.

வஸந்தகான சபா பேரும் புகழும் பெற, மேலும் பல கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேரத் தொடங்கினர். அவர்களுள் வி.கே. இரத்தினம், வி.என். செல்வராசா, அரியாலை செல்வரத்தினம், இணுவில் கனகரத்தினம், சிதம் பரம் செல்வராசா, மாவை கலட்டி செல்வராசா, நவாலி தைரியநாதன், எம்.எஸ். இராசையா, சி. புஸ்பராசா, பி. வரதராசா, விமலநாதன், பூதப் பிள்ளை, நாகரத்தினம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

வி.ரி. செல்வராசா, சி. பாபநாசம் சிவம் ஆகியோர் சிறுவயதிலிருந்தே இச்சபாவுடன் இணைந்து செயற்பட்டனர். வஸந்தகானசபா நாடகங்களில் வைரமுத்துவின் புதல்விகளாகிய லலிதா, ஜெயந்தா ஆகியோரும், புதல்வன் சாரங்கனும் பங்கேற்று நடித்துள்ளனர்.

வேறு நாடகக் குழுக்களைச் சேர்ந்த பிரபலமான கலைஞர்கள் பலர், வஸந்தகான சபா நாடகங்களில் நடித்துச் சபா வளர்ச்சிக்கு உதவி புரிந்துள்ளனர்.

## கன்னிகா பரமேஸ்வரியும் சந்திரா, மல்லிகாவும்

இலங்கையில் இசை நாடகத்துறையில் புகழ் பெற்ற பெண் கலைஞர்களாகிய கன்னிகா பரமேஸ்வரி, சந்திரா, மல்லிகா ஆகியோரும், வானொலி நாடகக் கலைஞர்களாகிய சுப்புலட்சுமி காசிநாதன், மணிமேகலை போன்றோரும், மாலா, சகுந்தலா ஆகிய நடிகைகளும் வைரமுத்துவுடன் இணைந்து சபா வளர்ச்சிக்கு உதவினர்.

வைரமுத்து அமரராவதற்கு இரண்டொரு தினங்கள் முன், இலங்கை வானொலியினரால் ஒலிப் பதிவு செய்யப்பட்ட சபாவின் 'சங்கீத கோவலன்' நாடகத்தில் திருமதி கமலினி செல்வராசன் கண்ணகி பாத்திரத்தை ஏற்றுச் சிறப்புறச் செய்திருந்தார்.

வஸந்தகான சபாவின் பக்க வாத்தியக் கலைஞர்களாகப் பலர் பணிபுரிந்திருக்கிறார்கள். மூத்த கலைஞர்களாகிய அமரர்கள் பிள்ளைநாயகம், நாகமுத்து, பிலிப்பு, அவருடைய மகன் ஜோன் கவாஸ் ஆகியோர் ஆர்மோனிய வித்துவான்களாகப் பணிபுரிந்தனர். இப்போதைய ஆர்மோனிய வித்துவான் செ. சின்னத்துரையும் சிறந்த ஞானஸ்தன். அமரர் வி.வி. காசிநாதனே ஆரம்ப காலத்தில் மிருதங்க வித்துவானாகப் பணிபுரிந்தார். பின்னர் அருமைத்துரை, பொன்னுச்சாமி, பி. வரதராசன், பி. திருநாவுக்கரசு ஆகியோரும் மிருதங்கம் வாசித்துதவினர்.

வஸந்தகான சபா, மயானகாண்டம் மட்டுமன்றி, வேறு பல இசை நாடகங்களையும் மேடையேற்றி வெற்றி கண்டது. வள்ளிதிருமணம், சத்தியவான் சாவித்திரி, சாரங்கதாரா, அல்லி அர்ச்சுனா, பவளக்கொடி, நல்லதங்காள், பக்த நந்தனார், கோவலன் கண்ணகி, ஞானசவுந்தரி, பிரகலாதன் என்பன முக்கியமானவை.

1966ஆம் ஆண்டு, இதுவரை காலமும் நாட்டுக் கூத்தாக ஆடப்பட்டு வந்த 'பூதத்தம்பி' எனும் கூத்தை, இசை நாடகமாக அமைத்து, முதன் முதலில் மேடையேற்றிய பெருமை வஸந்தகான சபாவுக்கே உண்டு.

இச்சபா, இசை நாடகங்களை மட்டும் அரங்கேற்றவில்லை. எத்தனையோ சமூக நாடகங்களையும் இசைக் கச்சேரிகளையும் அரங்கேற்றிக் கலைப்பணி புரிந்து வந்துள்ளது. எப்பணியாக இருப்பினும் அதில் வைரமுத்துவின் முழுப்பங்களிப்பு மிருந்தே தீரும்.

வஸந்தகான சபாவில் ஒப்பனைக் கலைஞர்களும் மேடை நிருமாணக் கலைஞர்களும், ஓவியர்களும் இருக்கிறார்கள். அந்தந்தப் பாத்திரத்திற்கேற்ற ஆடை அணிகலன்களையும் ஒப்பனைப் பொருள்களையும், சீன் முதலியனவற்றையும் காட்சி அமைப்புகளுக்கேற்ற அரங்கப் பொருள்களையும் வஸந்தகான சபா சொந்தமாக வைத்திருக்கிறது. ஒரு நாடகத்திற்குரிய அத்தனை பொருள்களையும் சொந்தமாக வைத்திருக்கும் வேறு எந்த தொழில்முறை நாடகசபாவும் ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் இல்லை என்று அறுதியிட்டுக் கூறலாம்.

## குக்கிராமங்களில் நாடகங்கள் மேடையேறின

'வஸந்தகான சபா' நாடகங்கள் ஈழத்தில் நடைபெறாத இடங்களே இல்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொரு குக்கிராமத்திலும் பன்முறை வைரமுத்துவின் நாடகங்கள் மேடையேறின. யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய இடங்களாகிய முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், புத்தளம், உடப்பு, நீர்கொழும்பு, கொழும்பு, கண்டி, பண்டாரவளை, பதுளை, ஹற்றன், இரத்தினபுரி, மட்டக்களப்பு, கல்முனை, மூதூர், திருகோணமலை என்று சொல்லிக்கொண்டே போகலாம். ஒவ்வோர் இடத்திலும் எத்தனையோ தடவை இவரது நாடகங்கள் மேடையேறின. ஈழத்தில் இன்று வைரமுத்துவை அறியாதார் அறியாதாரே.

வஸந்தகான சபாவின் நாடகங்கள் தொடர்ச்சியாகப் பத்துப் பதினைந்து நாள்கள் நடைபெறுவதுமுண்டு. பண்டாரவளை எனும் இடத்தில் 'பழைய நாகவத்தை' எனும் தோட்டத்தில் மட்டும் 1964ஆம் ஆண்டு இருபத்தைந்து நாள்கள் சபாவின் நாடகங்கள் தொடர்ந்து இடம் பெற்றன. வைரமுத்துவினதும் சக நடிகர்களினதும் நடிப்பாலும் இசையாலும் கவரப்பட்ட இத் தோட்ட மக்கள் தொடர்ந்து ஐந்து வருடங்கள் (1964-1968 வரை) தங்களது கோயில் திருவிழாவின் போது வைரமுத்துவை அழைத்து நாடகங்கள் ஆடவைத்தனர். இத்தகைய பெருமை வேறெந்த நடிகர்களுக்கோ சபாவுக்கோ கிடையாது.

இவ்வாறு இரத்தினபுரி, ஹற்றன், மூதூர், திருமலை, மட்டகளப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் தொடர்ந்து ஐந்து பத்து நாள்களாகக் கோயில் திருவிழாக்களின் போதோ அல்லது காணிவல் போன்ற களியாட்டுக்களின் போதோ வஸந்தகான சபாவின் நாடகங்கள் இடம் பெற்றன. ஏனைய சபாக்கள் காலப்போக்கில் இசை நாடகங்களை மேடையேற்றுவதை நிறுத்திக் கொண்டன. இச்சபாக்களைச் சேர்ந்த நடிகர்கள் பலர் வஸந்தகானசபாவுடன் இணைந்து நடிக்க முன்வந்தனர். அவர்களையெல்லாம் வைரமுத்து திறந்த மனதுடன் வரவேற்று வஸந்த கான சபாவுக்கு வலுவூட்டினார். இத்தகைய உயர்ந்த வளர்ச்சியை வஸந்தகான சபா அடை வதற்குக் காரணமாக அமைந்தவர் நடிகமணி வைரமுத்துவே. அவருக்கு இத்தகைய ஆளுமை எப்படிக் கிடைத்தது? அது பற்றிப் பின்னர் ஆராயப்படும்.

# அரசியல் தீர்க்கதரிசனமற்ற சிங்களத் தலைவர்களால் நாடு சீரழிந்தது

ஐ.தி.சம்பந்தன்

ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் நாட்டின் மூலவளங்களைப் பயன்படுத்தப் பொருளாதார ரீதியில் முன்னேற்றங்கள் கண்டு வந்தனர். ஆங்கிலேயர் ஆட்சி அதிகாரத்திலிருந்தாலும், நாட்டைத் திறமையாக நிருவகிப்பதற்குத் தகுதியும் திறமையும் வாய்ந்தவர்களைப் பாகு பாடற்ற முறையில், திறமையின் அடிப்படையில் மூவின மக்களையும் பயன்படுத்தி வந்தார்கள்.

கடமையுணர்வுடன் கடுமையாக உழைக்கும் திறமைசாலிகள் தமிழர்கள் என்பதனால் அரச பதவிகளில் அவர்கள் முக்கிய இடங்களை வகித்தனர். சிறந்த மூளைசாலிகள் என ஆங்கிலேயர்கள் தமிழர் களைக் கணித்தனர். ஆங்கிலேயர் ஆட்சி செய்த மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கும் தமிழர் களை அழைத்துச் சென்று அரச அலுவலகப் பணிகளில் ஈடுபடுத்தினர். இதனால் இலங்கை உட்பட அவ்வவ் நாடுகள் பொருளாதார ரீதியில் முன்னேற்றம் கண்டன.

ஆங்கிலேயர், நிருவாக வசதிக்காக இலங்கை யிலிருந்த தமிழ் இராச்சியம் உட்பட மூன்று இராச்சியங் களையும் ஒன்றிணைத்து நிருவாகத்தைச் சீராக நடத்தி வந்தனர். ஆங்கிலேய ஆட்சி யாளர் தீர்க்க தரிசனத்துடன் இந்நடைமுறைகளை மேற்கொண்டனர்.

ஆனால், இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் ஆட்சி அதிகாரம் சிங்களப் பெரும்பான்மை யினர் கைக்கு மாறியது. அதன்பின் சிங்களத் தலைவர் களிடையே ஆட்சி அதிகாரப் போட்டி எழுந்தது. யார் இந்த நாட்டைத் தலைமை தாங்கி ஆட்சி செய்வது என்பதே அவர்களிடையே ஏற்பட்ட போட்டியாகும்.

இந்தப் போட்டியில் இலங்கையை "இந்து சமுத்திரத்தின் முத்து" என வர்ணிக்கப்பட்ட நாட்டை - சிங்களத்தலைவர்கள் 50 வருட ஆட்சியில் சீரழித்து விட்டார்கள். இலங்கை பல்லின மக்கள் வாழும் ஒரு நாடு என்பதைச் சிங்களத் தலைவர்கள் அறிந்தி ருந்தும் நடைமுறையில் சிங்களப் பெரும்பான்மைக்குச் சாதகமான முறையில் நாட்டை ஆள எத்தனித்தனர்.

பல்கலைக்கழகம் சென்று அரசியலை முறை யாகக் கற்றுக் கொள்ளாத திரு. டீஎஸ் சேன நாயக்காவுக்கு குடும்ப ஆதிக்கத்தினாலும், பண அதிகாரத்தினாலும் ஆட்சியின் தலைமைப் பதவியை ஏற்கும் வாய்ப்பு கிடைத்தது. தேசியக் கண்ணோட்டமான அரசியல் தீர்க்கதரினம் இருக்க வில்லை. சிங்கள மக்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தேசிய ரீதியில் நாட்டை நோக்கவில்லை. இதன் விளைவை சிங்கள மக்களும் .இந்நாளும் அனுபவிக்கின்றனர்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் பிரதமர் பதவியை ஏற்ற பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள், பிரித்தானிய நாட்டுப் பல்கலைக்கழகத்தில் அரசியலை நன்கு கற்றவர். சுதந்திர இந்தியாவை எவ்வாறு வழி நடத்த வேண்டுமென்று தீர்க்கதரி சனத்துடன் அரசியல் திட்டத்தை வகுத்தார்.

பதினான்குக்கு மேறபட்ட மொழி பேசும் பல கோடி மக்கள் வாழும் நாட்டிற்கு சமஷ்டி முறைதான் பொருத்த மானது என்று தேசிய தீர்க்கதரிசனத்துடன் செயறபட்டார்.

பெரும்பான்மையாக வாழும் இந்தி பேசும் மக்களை மட்டும் கருத்தில் கொள்ளவில்லை. ஏனைய மக்க ளையும் தேசியக்கண்ணோட்டத்தோடு நோக்கிய தேசியத் தலைவர்களே அவர் போன்றவர்கள்.

இலங்கையில் 50 வருட கால ஆட்சியில் இருந்த சிங்களத் தலைவர்கள் எவரும் தேசியத் தலைவர் களாக விளங்கவில்லை. அதன் பலா பலனை இந் நாட்டு சிங்களப் பெருமக்கள் இன்று அனுபவிக்கின்றனர்.

ஒரு தேசியத் தலைவராக விருந்த பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் தீர்க்கதரிசனத்துடன் திட்டமிட்டபடியால் அந்தப் பெரிய நாடு இன்று தென் கிழக்காசியாவில் ஒரு வல்லரசு நாடாக வளர்ந்துள்ளது.

இலங்கையைப் பணம் படைத்த நாடுகளிலிருந்து பிச்சை எடுக்கும் நாடாக ஆக்கியுள்ளனர் தீர்க்க தரிசனமற்ற சிங்களத் தலைவர்கள்.

இந்தியாவில் வாழும் சகல இன மக்களும் 'எங்கள் தாய்நாடு பாரதநாடு' என்ற நாட்டுப்பற்றுடன் உழைத்து வருகின்றனர்.

இலங்கை எங்கள் நாடு, இந்து சமுத்திரத்தின் முத்து' என்று எல்லா மக்களும் கூறிக்கொண்டு நாட்டுப் பற்றோடு வாழ முடியாத நிலையை தீர்க்க தரிசன மற்ற சிங்களத்தலைவர்கள் உருவாக்கி விட்டார்கள்.

பிரித்தானிய நாட்டில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் படித்த அரசியல் மேதை திரு. எஸ். பண்டார நாயக்கா இலங்கைக்குப் பொருத்தமான சமஷ்டி

அரசியல் முறையே என 1921இல் கூறியிருந்தார். தேசியக் கண்ணோட்டத்தோடு அன்று இலங்கையை நோக்கினார்.

இவராவது அந்தத் தீர்க்கதரிசனத்துடன் செயற் பட்டிருந்தால், பல்லினமக்களின் ஒத்துழைப்புடன் இலங்கை பொன் கொழிக்கும் பூமியாக விளங்கியிருக்கும். இந்திய அரசியற் தலைவர்கள் போல் தேசியத் தலைவ ராகத் தன்னை ஆக்கிக்கொள்ள அவரது அரசியல் அபிலாசை விட்டுக் கொடுக்க வில்லை.

திரு. பண்டாரநாயக்கா போன்று படித்த அரசி யல் மேதையாக விளங்கிய திரு. எஸ்.ஜே. வி. செல்வ நாயகம் கியூ. சி. அவர்கள் 1949இல் இலங்கைக்கு சமஷ்டி அரசியல்தான் பொருத்தமென தீர்க்க தரிசனத்துடன் கூறினார்.

ஒரு தமிழராகப் பிறந்து சிறுபான்மை இனத்தின் தலைவராக விளங்கிய இவர், இலங்கை அனைத்து மக்களின் சபீட்சத்திற்காக சமஸ்டி அரசியல் முறையை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென நீண்ட காலமாகப் போராடினார். சிங்களத் தலைவர்களுக்கு இடித்துரைத்தும், அதை அவர்கள் புரிந்து கொள்ள வில்லை.

இனவாதத்திலும் அரசியல் அதிகாரத்திலும் அக்கறை கொண்டிருந்த சிங்களத் தலைவர்கள், இந்த நல்ல அரசியற் திட்டத்தை ஏற்க மறுத்தனர். அதன் விளைவு தமிழர் தனிநாடு கோர வைத்தது.

1921இல் இலங்கைக்கு சமஷ்டி அரசியல் முறை தான் பொருத்தமானது என்று கூறிய எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா எவ்வாறேனும் இந்நாட்டின் பிரதமராக வந்துவிட வேண்டும் என்று 1956இல் 'சிங்களம் மட்டும்' சட்டத்தைக் கொண்டு வந்து நாட்டில் இனவாத அரசியலுக்கு வித்திட்டார். 'ஒருமொழி' 'இருநாடு' என்ற நிலையை உருவாக் கினார். இவர் போன்றவர்கள் தேசியத் தலைவர் களாக அரசியல் தீர்க்கதரிசனத்துடன் யதார்த்தமாக செயற்பட்டிருந்தால் இந்நாடு அழிவுப் பாதையில் சென்றிராது.

ஈழத்தமிழர்களின் போராட்டத்திற்கு வித்திட்ட சிங்களத் தலைவர்களில் இவரும் ஒருவர். 1956இல், 1958இல் இனக்கலவரம் ஏற்படுவதற்குத திரு. பண்டார நாயக்கா அவர்களே காரணம். சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தி ஆட்சி அதிகாரத்தில் இருக்கலா மென்று நினைத்த தீர்க்கதரிசனமற்ற இவர்களது அரசியலே சிங்கள மக்களுக்குப் பேரழிவைக் கொண்டு வந்தது.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா பழுத்த அரசி யல் அனுபவம் கொண்டவர். ஒரு நீதிபதியின் மகன். இலங்கை அரசியலை நன்கு படித்த சட்ட அறிஞர்.

1944ஆம் ஆண்டு அரசப்பேரவையில் 'சிங்களம் மட்டும்' பிரச்சினையைக் கொண்டு வந்தவர். அப்பொழுதே குறுகிய அரசியல் இவரிடத்தில் புகுந்து விட்டது. ஆனால், அவரே அதை மாற்றி சிங்களமும் தமிழும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்தவர்.

மீண்டும் 1956இல் ஐ.தே. கட்சியின் கன்னி மாநாட்டில் 'சிங்களம் மட்டும்' தீர்மானம் கொண்டு வந்த போது ஆதரித்தவர்.

இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாகி 9 ஆண்டுகள் ஆட்சி செய்த இவர் கூட ஒரு தேசியத்தலைவர் என்ற தீர்க்கதரிசனத் துடன் நடக்கத் தவறி விட்டார். இவர் சுயநலத்துடன் 1978இல் கொண்டு வந்த அரசியல் சட்டத்தினால் இரு சிங்களக் கட்சிகளினாலும் ஆட்சியை முறையாக நடத்த முடியாத சிக்கலால் சிங்கள மக்கள் அல்லல் படுகின்றனர். சிங்களத் தலைவர்களின் தீர்க்க தரிசனமற்ற செயலைச் சிங்கள மக்கள் இனியாவது உணர்வார்களா?

காலஞ்சென்ற எஸ். டபிள்யூ ஆர் டி. பண்டார நாயக்கா, பண்டார - செல்வா ஒப்பந்தம் மூலம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்த போது, ஜே. ஆர். கண்டி யாத்திரை மேற் கொண்டு அதைக் குழப்பினார். இது தமிழர்கள் பிரச்சினையைத் தீர்க்க ஒரு சிறந்த இடைக்காலத் தீர்வு என்று ஜே. ஆர். அவர்களுக்குத் தெரிந்திருந்தும் சிங்களத் தலைவர்களிடையே உள்ள அரசியல் போட்டி காரண மாக தேசியக்கண் ணோட்டத்தில் சிந்திக்கத் தவறி விட்டார். இது தமிழர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி னாலும், நீண்டகால அரசியல் வரலாற்றில் சிங்கள மக்களும் அமைதியாக வாழ முடியாத நிலையை ஏற்படுத்தியது.

1977இல் ஜே. ஆர் ஆட்சிக்கு வந்தபோது, மாவட்ட சபை என்று தமிழர்களுக்கு கொடுக்க முற் பட்டது பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் உள்ளடக்கப் பட்ட விடயங்களில் ஒன்றாகும். அன்று ஒப்பந்தத்தை எதிர்த்து 1958இல் ஓர் இனக்கலவரம் ஏற்பட வழி வகுத்த தலைவருள் இவரும் ஒருவர்.

திரு. எஸ்.ஜே. வி. செல்வநாயகம் ஒரு தமிழ ராக விருந்தாலும் ஒரு தேசியத் தலைவர் என்ற ரீதியில் சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்கள் இந் நாட்டில் ஐக்கியமாக வாழவும், நாட்டை முன்னேற்றப பாதையில் எடுத்துச் செல்லக்கூடிய தாகவும் அரசியல் கருத்தை முன் வைத்தார். அவர் ஒரு தமிழ னாக இருந்தபடியால் அவருடைய தீர்க்கதரிசனக் கருத்துக்கள் எடுபடவில்லை.

ஐம்பது வருடத்திற்குப் பின்னர் தந்தை செல்வா கூறிய சமஷ்டி அரசியல்தான் ஒரு நிரந்தரச்

சமாதானத்தை ஏற்படுத்தும் என்று ஐ. தே. கட்சி அதை இன்று ஏற்றுள்ளது. எவ்வளவு பேரழி வுக்குப் பின்னர் இந்த ஞானம் பிறந்திருக்கிறது. அந்த ஞானத்தைப் பிறக்க வைத்தது விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம்.

இலங்கையை ஆண்ட சிங்களத் தலைவர் களுள் திரு. டட்லி சேனநாயக்கா அவர்களும் ஒருவர். இவர் ஒரு நேர்மையான அரசியல்வாதி. இன மத வேறுபாடற்ற முறையில் இலங்கை அரசியலில் ஒரு தேசியத் தலைவராக விளங்குவார் எனப் பலரும் எதிர்பார்த்தனர். தமிழர்கள் அவர் மீதும் நம்பிக்கை வைத்தனர்.

1965இல் திரு. டட்லி சேனநாயக்கா தலைமை யில் அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கத்திற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஆதரவு வழங் கியது. அக்காலத்தில் டட்லி-செல்வா ஒப்பந்தம் உரு வாகியது. தமிழர் ஆதரவுடன் 3 - ஆண்டுகள் தேசிய அரசாங்கத்தை நடத்தி வந்த பிரதமர் டட்லி சேன நாயக்கா கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாது தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள். இனவாத சக்தி களின் எதிர்ப்புக்கு அடிபணிந்து டட்லி-ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார். ஒரு தேசியத் தலைவராக விளங்குவார் என்றிருந்த திரு. டட்லி சேனநாயக்கா குறுகிய அரசியல்வாதியாகி விட்டார்.

எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவின் பின் பிரதமராக வந்த திருமதி. சிறிமாவோ பண்டார நாயக்கா ரத்வத்தைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெருமையைத் தவிர, அரசியலில் ஆழமான அறிவு பெற்றவராக விருக்கவில்லை. ஒரு நாட்டின் தலைவ ராக வருபவர் தூரநோக்கும் அரசியல் வல்லமை யுடையவராக இருக்க வேண்டும். இலங்கை அரசி யலில் இது பேணப்படுவதில்லை. அதனால் தேசியத் தலைவராக எவரும் உருவெடுக்கவில்லை.

காலஞ்சென்ற பண்டாரநாயக்கா அவர்களின் வழியிலேயே சிறிமாவோ அம்மையாரின் ஆட்சியும் தொடர்ந்தது. 1972இல் அரசியல் தீர்க்கதரிசனமற்ற முறையில் கொண்டு வரப்பட்ட புதிய குடியரசியாற் சட்டம், பெரும்பான்மை இனமக்களுக்குச் சாதக மாகவே கொண்டு வரப்பட்டது. சிறுபான்மை இனத் தவருக்குப் பாதுகாப்பளித்து வந்த 29 பிரிவை நீக்கித் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது.

இவருடைய காலத்தில் கொண்டு வரப்பட்ட புதிய அரசியற் சட்டம் தமிழர்களை ஒன்றிணைத்துப் போராட வழி வகுத்தது. தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியது.

அன்று தீர்க்கதரிசனத்துடன் இத்தலைவர்கள் நடந்திருந்தால் தமிழருக்கென ஒரு தனியான இராணுவப்படை உருவாகியிராது. சிங்களத்தலை மையின் சுயநல அரசியல், இந்நாட்டில் ஐக்கிய மாக வாழ வேண்டிய இரு இனமக்களும் போராடி அழிய வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. வரலாற்று ரீதியாக இந்த உண்மையை அறிந்து இலங்கை அரசியலில் ஒரு தேசியத்தலைவராக உருவாக இருந்த திரு. விஜயகுமாரதுங்காவைப் படுகொலை செய்தார்கள். அவர் மறைவின் பின் அரசியல் அஞ்ஞானவாசம் செய்து விட்டு கண வனின் வழியில் அரசியலை முன்னெடுத்து ஒரு தேசியத் தலைவியாக வருவார் என்று எதிர்பார்த்த திருமதி. சந்திரிகா குமாரதுங்கா ஒரு குறுகிய அரசியல் தலைவியாகி விட்டார்.

தமிழர் பிரச்சினைகளுக்கு யுத்தத்தினால் தான் தீர்வு காணலாம் என்று அவருடைய காலத்தில் நடைபெற்ற போரினால் பல்லாயிரக்கணக்கான சிங்களப் படைகள் உயிர் இழந்தனர். நாட்டின் பொருளா தாரமும் பாரிய அழிவில் சென்றது.

இவருடைய காலத்தில் 21,000 இராணுவத்தினர் உயிரிழந்தனர். 10,000க்கும் மேற்பட்ட இராணுவத் தினர் அங்கககினமடைந்தனர், காணாமல் போனோர் கள் கணக்கில்லை.

சிங்களத் தலைவர்களில் தேசியத்தலைவர்கள் தோன்றாததினால் சிங்கள மக்கள் பெரும் அழிவுக்கு உட்பட்டதை இனியாவது அவர்களது புத்திஜீவிகள் சிங்களப்பொதுமக்களுக்கு உணர்த் துவார்களா?

இந்தத் தலைவர்களால் தமிழர்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்பையும், பொருளாதார அழிவுகளையும் விடுதலைப்புலிகள் சர்வதேச உலகிற்கு எடுத்துக் கூறுவர். அதன் பின்னர்தான் நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வு ஏற்படும்.


**கொழும்பில்**

**செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் நூல் வெளியீடும் 2ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிப்பு விழாவும்.**

மேற்படி நிகழ்வு நவம்பர் 26ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்குத் தொடங்கி கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற உள்ளது.

இவ்விழாவை இரத்மலான இந்துக் கல்லூரி அதிபா திரு. மன்மதராசா, திரு. தனபாலா ஜே. பி. உள்ளிட்ட விழாக் குழுவி னர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

**இவ்விழாவுக்கு அனுசரணை வழங்குபவர்:**

**இலண்டன் வைர மாளிகை**

# பாட்டுக்கொரு புலவன் பாரதி பலமுகங்கொண்ட பெருங்கவிஞன்

- மனோ மயில்

தமிழ்மொழியிலே சிறந்து விளங்கும் பாவலர்களில், தரணி போற்றும் வெற்றி வாய்ந்தவர்களில் தலையாயவர் என்று வள்ளுவனுக்கு அடுத்தபடியாகக் கருத்திற்கொள்ள வேண்டியவர் சுப்பிரமணிய பாரதியாராவர். உலக வாழ்க்கைக்கு வழி காட்டும் வகையில், தனது இருவரிக்குறளிலே அகிலத்தின் அகலத்தையும் பரப்பையும் உள்ள டக்கி, வியத்தகு வள்ளுவத்தை உலகுக்கீந்தான் வான்புகழ் வள்ளுவன். வாழ்வின் பல்வேறு துறைகளையும், அம்சங்களையும், இயல்புகளையும் அழகு தமிழில் வார்த்தெடுத்து அளித்திருக்கிறான் 'பாட்டுக்கொரு புலவன் பாரதி'.

பாரதியின் இந்தப் பலதரப்பட்ட பாட்டுப்புலமை, 'பாரதியார் கவிதைகள்' என்ற நூலின் பதிப்பாசிரியரான இராமலட்சுமணன், தனது பதிப்புரையில் அழகாகவும் மிகச்சிறப்பாகவும் வெளிக்கொணர்ந்திருப்பதை இங்கு சுட்டிக்காட்டுவது சாலவும் பொருத்தமாக அமையும் என்று நினைக்கிறேன். அவர், பாரதியின் படைப்புக்களை அப்படியே படம் பிடித்துக்காட்டுகிறார், பின்வரும் அற்புதமான வார்த்தைகளில்: "ஏழையின் நெஞ்சக்குமுறலில், கரும்புத்தோட்டத்துப் பெண்கள் சிந்தும் கண்ணீரில், காக்கையின் கருமையில், காயின் புளிப்பில், கனியில் இனிப்பில், காற்றின் அசைவில், கனலின் வெம்மையில், நீரின் தண்மையில், மரத்தின் பசுமையில், மின்னலின் எழிலில், மலரின் ஒளியில், குயிலின் குரலில், நிலவின் சிரிப்பில், ஞாயிற்றின் விளக்கத்தில், மழையின் அருளில், காதலின் கனிவில், பிள்ளைக்கனியமுதின் சின்ன மலர்ச் சிரிப்பில், ஏர்பிடிப்போன்பாடும் ஏற்றமிகு பாட்டொலியில், இன்னும் உலகத்துப் பொருள்கள் அனைத்தினூடும் கவிதா சக்தியின் பேராற்றலைக் கண்ட மகாகவிக்கு அளிக்கும் எளியதொரு காணிக்கையாக இந்நூலை வெளியிடுகிறேன்".

ஆம் பாரதியின் பாடல்களில் பரந்த உலகின் பல்வேறு முகங்களையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. அவரது பாடல்கள், தேசிய கீதங்கள், தேசிய இலக்கியப்பாடல்கள், தேசியத்தலைவர்கள், பிறநாடுகள், பல்வகைப் பாடல்கள், வாழ்த்துப்பாக்கள், கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு, வசன கவிதைகள் புதிய பாடல்கள் என்று விரிவாக வகுக்கப்பட்டுள்ளன. தனது மொழிக்கும், இனத்துக்கும், தேசத்துக்கும் பாடிய பாரதி அதே நேரம் உலகத்துக்கும், சர்வதேசியத்துக்கும், மனிதாபிமானம், மனிதநேயத் துக்காகவும் பாடினார். அதுதான், அவர் 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர் போல், இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை, உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை' என்று கூறியிருந்த போதும், அவர்களுள் வள்ளுவனுக்கு ஈடாக உயர்ந்து இன்று நிற்கக்கூடிய பெருமையைப் பெற்றிருப்பவர் அவரே தான் என்று நாம் துணிந்து கூறலாம்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்' எனச் சொல்லும் புலவன், பிறகு, 'தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்' என்கிறான். அதற்கும் ஒருபடி மேற்சென்று, 'திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ்செய்தல் வேண்டும்' எனக் கூறும் அவன், 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்' என்றும் எடுத்துரைப்பதன் மூலம், தனது விரிவான உலகப்பார்வையை வெளிப்படுத்து கிறான்.

அவரது பக்திப்பாடல்களில், 'விநாயகர் நான் மணிமாலை'யில் எவ்வளவு கச்சிதமாகவும் அதே நேரம் கடலளவு விரிவாகவும் மனிதனின் கடமைகளை நான்காக வகுத்துக்கொடுத்திருக்கிறார். 'கடமையாவன தன்னைக்கட்டுதல், பிறர் துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல், விநாயக தேவனாய், வேலுடைக்குமரனாய், நாராயணனாய், நதிச்சடை முடியனாய், பிறநாட்டிருப்போர் பெயர் பல கூறி, அல்லா! யெஹோவா! எனத் தொழுதின்புறும் தேவருந் தானாய், திருமகள், பாரதி உமையெனுந்தேவியருகத்த வான்பொருளாய், உலகெலாங்காக்கு மொருவனைப் போற்றுதல், இந்நான்கேயிப் பூமியிலெவர்க்கும் கடமையெனப்படும்'.

பாருங்கள்! முதலாவதாக, ஒரு மனிதன் தனது ஆசைகள், விருப்பு வெறுப்புக்களைக் கட்டுப்படுத்தி இவ்வுலகில் சிறப்புடன் வாழவேண்டும் என்கிறார். அடுத்ததாக அவர் கூறும் இரண்டு கடமைகளும் அடுத்தடுத்து பிறர் வாழ்வு பற்றியதாகும். பிறருடைய துயரத்தைப் தீர்ப்பதையும் பிறர் நலம் பெற வேண்டுமென விரும்புவதையுமே அவர் மனிதனின் முக்கியமான மற்ற இரண்டு கடமைகள் எனக் கூறுகிறார். எவ்வளவு பரந்த மனப்பான்மை! அது மட்டுமா? நான்காவதும் கடைசிக் கடமையுமான

இறை போற்றுதல் பற்றிக் கூறும் போது, பால் பாகு பாடின்றி, ஆணும் பெண்ணும் ஒருங்கிணைந்த, சிவ சக்தியாக விளங்கும் ஒரு தெய்வத்தைக் குறிப்பிடும் அதே வேளை, மதவேறுபாடுகளையும் தாண்டி, அல்லா! யெஹோவா! எனத்தொழுதின்புறும் மக்களையும் கருத்திற்கொண்டு, இறைவன் யாவர்க்கும் பொதுவான வன், என்ற உண்மையையும் எடுத்துரைத்திருப்பது, அவரது விசாலமான உள்ளத்தை வெகு துல்லிய மாகக் காட்டுகிறது.

தெய்வபக்தி மனிதனுக்கு அவசியமான தொன் றாகும். இவ்வுலக வாழ்க்கையில் அவன் எதிர்கொள்ளும் பிரச்னைகள், துயரங்கள், துன்பங்கள், அல்லல்கள் அனைத்துக்கும் அவனுக்கு ஆறுதலையும், ஆதரவை யும், உறுதுணையையும் அளிக்கக் கூடியதாக இறை பக்தியே விளங்குகிறது என்றால் அது மிகையாகாது. அந்த பக்தி பற்றி பாரதி விரிவாகக் கூறியிருந்த போதும், அவற்றில் முக்கியமான இரண்டொரு கூற்றுக்களை மட்டும் நான் இங்கு குறிப்பிட விரும்பு கிறேன். பக்தியினால், 'மனத்திடைத் தத்துவமுண்டாம், - நெஞ்சிற் சஞ்சல நீங்கி உறுதி விளங்கிடும்' என்பது ஒன்று. 'மெய் வல்லமை தோன்றும், - தெய்வ வாழ்க்கை யுற்றே யிங்கு வாழ்ந்திடலாம், உண்மை என்பது மற்றொன்று. அத்துடன், சந்ததி வாழும் - வெறுஞ்சஞ்சலங் கெட்டு வலிமைகள் சேர்ந்திடும்' என்பதும் மனதிற் கொள்ளக்கூடிய இன்னுமொரு கருத்தாகும்.

பிறகு, அவர் ஒவ்வொரு தெய்வம் பற்றியும் கவிதை தீட்டுகிறார். அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். அப்படிப் பார்க்க விழையும்போது, அவற்றில் உள்ளத்தை ஈர்க்கும் வகையில் இடம் பெறும் கருத்து களை மட்டும் இங்கு எடுத்தியம்புவது பொருத்தமாக அமையும். அவ்வகையில், முன்னர் குறிப்பிட்டவை எல்லாம் விநாயகப் பெருமான பற்றிய பாடல்களில் வந்தவையாகும். அடுத்ததாக, கல்வித் தெய்வமாகிய கலைமகளைப் போற்றிப்பாடும் 'சரஸ்வதி தேவியின் புகழ்' என்ற கவிதையில் வரும் வரிகள், தமிழ் மொழியில் காலந்தோறும் மேற்கோள் காட்டப்படும் புகழ்பெற்ற வரிகளாகும். அதுமட்டுமல்ல, இன்று உலகமெல்லாம் அனைத்து நாடுகளும் தமது பாரிய நோக்கங்களில் ஒன்றாக ஏற்று, அதை நிறைவேற்றப் பல திட்டங்களைத் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் வகுத்து, நடைமுறைப்படுத்த முனையும் 'சகலர்க்கும் கல்வி' என்ற ஏற்றமிகு கொள்கை, பாரதியின் இந்தக் கவின்மிகு வரிகளில் துலங்கி நிற்பதைக் காணலாம். கண்டு, பெருமையும் கொள்ளலாம். அந்த வரிகள் தாம், 'அன்னசத்திர மாயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கியொளிர நிறுத்தல், அன்ன யாவினும் புண்ணியங்கோடி, ஆங்கோரேழைக் கெழுத் தறிவித்தல்' என்பவையாகும். ஆங்கோரேழைக் கெழுத் தறிவித்தல் என்ற சொற்கள், இதயத்தில் ஆணி அடித்தறைவது போல், அவ்வளவு ஓங்காரமாக ஒலித்து நிற்பதை நாம் அவதானிக்கக் கூடியதாக வுள்ளது. பொதுவுடைமைத் தத்துவத்தின் பிரதி பலிப்பாகவும், புரட்சிகரமான வெளிப்பாடாகவும் அமையும் இந்தக் கருத்து, மனிதகுலத்தின் முக்கிய மான கடமையொன்றாகவும் அதனைச் சுட்டிக்காட்டி நிற்பதையும் உணர முடிகிறது.

இவன் எத்தகைய புரட்சிகரமான பிராமணன் என்பதை, 'ஆலயம் பதினாயிரம் நாட்டல்' என்பதை விட, 'ஆங்கோரேழைக் கெழுத்தறிவித்தல்' என்பதே ஆயிரமடங்கு அவசியமானது என்று துணிந்து பறைசாற்றியிருப்பதன் மூலம் தெட்டத் தெளிவாக உணர்த்தியுள்ளான். இன்று, தமிழ்நாட்டில் பல துறை களிலும் முன்னணியில் திகழும் பிராமணர்கள், 'நான் முதலில் பிராமணன், பிறகு தான் தமிழன்' என்ற கோதாவில் இறங்கி, தமிழர்க்கும் தமிழுக்கும் இடர் விளைவித்து வருபவர்கள், 'நான் முதலில் தமிழன், பின்னர் உலகப்பிரஜை, ஈற்றில் தான் பிராமணன்' என்று வாழ்ந்து காட்டிய பாரதியிடம் வெட்கித் தலைகுனிய வேண்டும்.

கலைமகளிடமிருந்து திருமகளிடம் சரண்புகும் கவிஞன், 'செய்யும் முயற்சியெல்லாங்கெட்டு முடி வதும், ஏழ்கடலோடியு மோர் - பயன் எய்திட வழி யின்றியிருப்பதுவும், 'வீட்கவிக் கொடு' நோய் தான் - வைய மீதினில் வறுமையால் கொடுமையன்றோ?' என்று உளம் வெதும்பிக் கேள்விக் கணை தொடுக் கிறான். பின்னர், 'மலரின் மேவு திருவே உன்மேல் மையல்பொங்கி நின்றேன்' என்றும், 'கமல மேவும் திருவே! நின்மேல் காதலாகி நின்றேன்' என்றும் லட்சுமி தேவியைப் போற்றிப் புகழ்ந்து நிற்கும் கவிஞன், 'செல்வ மெட்டு மெய்தி – நின்னாற் செம்மை யேறி வாழ்வேன்' என்று கூறிவிட்டு 'இல்லை என்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பேன்' என்று சூளுரைக்கின்றான். எத்தகைய புலவன் இவன்! அதனினும் மேலாக, எத்தகைய மனிதன் இவன்! ஒருவேளை இவன் வேறு மொழியில் எழுதியிருந் தால், இன்று உலகக்கவிஞனாகப் போற்றப்பெற்றிருப் பானோ என்று மனம் வேதனைப்படுமளவுக்கு இவனது கவித்துவம், அதனூடான தத்துவமும் மேலோங்கி நிற்கின்றன.

முருகன் என்ற தமிழ்க்கடவுளிடம் வரும் கவிஞன், எடுத்த வீச்சே 'தருவாய் நலமுந்தகவும் புகழுந் தவமுந் திறமுந் தனமுங் கனமும்' என்று அவனை இறைஞ்சிவிட்டு அடுத்த கணமே, 'சுருதிப் பொருளே, வருக, துணிவே, கனலே வருக! கருதிக் கருதிக் கவலைப்படுவார் கவலைக் கடலைக் கடியும் வடிவேல் முருகா! என்று அவனைப் போற்றிப் புகழ்ந்து வரவேற்கிறான். மேலும், முருகன் 'தமிழ்ப்பாவலர்க் கின்னருள் செய்குவான் - இந்தப் பாரிலற மழை பெய்குவான் - நெஞ்சின் ஆவலறிந்தருள் கூட்டுவான் - நித்தம் ஆண்மையும் வீரமு மூட்டுவான்' என்று அவனது பெருமைகளைப் பறைசாற்றும் புலவன்,

ஈற்றில், 'ஆறு சுடர்முகங் கண்டு விழிக்கின்ப மாகுதே கையில் அஞ்சலெனுங் குறி கண்டு மகிழ்ச்சி யுண்டாகுதே' என்று பாடிப் பரவசமாகிறான்.

கண்ணன் மீது காதல் கொண்ட கவிஞன் அவன் பிறப்பு பற்றி எழுதிய வரிகள் மக்கள் மனங்களில் அழியாத இடத்தைப் பெற்றுள்ளவை யாகும். தமிழ்நாட்டின் பட்டி தொட்டிகளிலெல்லாம் ஒலிக்கும் வரிகள் அவை. கேட்கக் கேட்க இனிப்பவை. 'கண்ணன் பிறந்தான் - எங்கள் கண்ணன் பிறந்தான் - இந்தக் காற்றதை யெட்டுத் திசைகளிலுங் கூறிடும்' என்பான். பிறகு, அவன் கண்ணனை, 'உருவாய் அறிவில் ஒளிர் வாய் - வளர்வாய் - கண்ணா! கமலத் திருவோடிணை வாய் - கண்ணா?' என்று உளம் மகிழ வாயார வரவேற்கிறான். அத்துடன், கண்ணன் துதி என்ற தலைப்பின் கீழ் 'காயிலே புளிப்பதென்ன, கண்ணபெருமானே' நீ கனியிலே இனிப்பதென்ன கண்ணபெருமானே!' என்று கேள்விக்கு மேல் கேள்வி கேட்டுச் செல்லும் கவிஞன், கடைசியில் 'போற்றினோரைக் காப்பதென்னே, கண்ண பெருமானே' நீ பொய்யர் தம்மை மாய்ப்பதென்னே, கண்ணபெருமானே! போற்றி! போற்றி! போற்றி! கண்ணபெருமானே! நின் பொன்னடிகள் போற்றி நின்றேன், கண்ணபெருமானே!' என்று கண்ணன் காலடி பணிந்து நிற்கின்றான்.

பாரதி, கண்ணனைப் பற்றி விரிவாகப் பல தலைப்புகளுக்குக்கீழ் பிறிதோரிடத்தில் பாடல்களை இயற்றியிருப்பதால், அவற்றை இன்னுமோர் சந்தர்ப்பத்தில் எடுத்து விளக்கலாம். அப்பாடல்கள் யாவும் 'கண்ணன் பாட்டு' என்ற தொகுப்புக்குள் அடங்குவதாகும்.

கண்ணனிடமிருந்து தனது கண்ணம்மாவிடம் தாவும் கவிஞன், எப்போதுமே இவ்விருவரையும் அருகருகே தன் உள்ளத்தில் இருத்திப் பார்த்து மகிழ்வதுடன் அவர்கள் இருவர் மீதான காதலையும் ஏறத்தாழ ஓமர ஆழத்துடனும் நெருக்கத்துடனும் அதே கனிவான, இனிமையான, உள்ளத்துக்கு இதமான வரிகளில் வடித்தெடுத்து வார்த்திருக்கிறான். இதன் மூலம் இதிலும் அவன் தனது பரந்த உளப் பாங்கை, ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிசமமாகத் தனது காதலை வெளிப்படுத்தி, ஆண் - பெண் சமத்துவத்தை நிலைநாட்டியுள்ளதாய் வெளிப்படுத்தியிருப்பதை நாம் காணலாம்.

கண்ணனைப் பற்றியும், கண்ணம்மா பற்றியும் மேலும் விரிவாக எழுத முற்படும் பாரதி, அவர்கள் மீது தான் புனைந்த கவிதைகளை, 'கண்ணன் என் காதலன்' என்ற தலைப்பிலும், 'கண்ணம்மா என் காதலி' என்ற தலைப்பின் கீழும் பாடியிருப்பது இதனைப் புலப்படுத்துகிறது. அப்பாடல்கள் பற்றி விரிவாகப் பின்னர் ஆராய்வோம்.

(தொடரும்)

# சுடரொளித் தொண்டு தொடர்கவே!

**- பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்**

உலகமெங்கும் தமிழர் உள்ளார்
உயிர்த்தமிழ் ஓம்புகின்றார்!
நலமெல்லாம் கூட்டுதற்கே
நடைமிகு பணிகள் செய்வார்

தலமெல்லாம் தமிழீழத்தின்
தவமக்கள் புவிமக்கள் தாம்
வலம்வந்தே தமிழ் வளர்ப்பர்
வாகைகள் சூடு வாரே!

வாகைகள் சூடு மிந்த
வல்லவர் தமக்குள் ஓங்கும்
ஓகைகள் வளர்த்தே விஞ்சும்
உயிர்த்தமிழ் வளப்ப தற்கே
பாகவிக் கோலங்கள் சூழ
பயன்தரும் போட்டி வைத்தே
மாகவி வாணர் போற்றும்
சுடரொளி இயக்கம் அம்மா!

சுடரொளி இதழ் நடத்தும்
சுடர் ஒளி இயக்கம் கண்டே
சுடர்மிகும் சம்பந் தம்நம்
பொன்பால சுந்த ரத்தார்
சுடர் அட லேறு போன்ற
தொகுவகு பணிகள் ஆற்றும்
சுடர் அறி வாளர் எல்லாம்
தொகைபணி சூழ்வர் அம்மா!

வென்றவர் தமக்கெல் லாமே
வெகுமதி மிகுமா றேதான்
நன்றுபெரும் நிதிகள் தந்தே
நலத்து ஊக்கம் ஊட்டுகின்றார்
மன்ற சுடரொளித் தோர்நம்மின்
மாமன்றத் தார்கள் ஓ!ஓ!
குன்றிட்ட விளக்குப் போல்
குவலயம் ஒளிதந்தாரே!

வாழிய சுடர்த்தமிழ்நல்
வளரொளிக் கழகம் என்றும்
வாழிய பரிசு பெற்றார்
வாழிய பங்கேற்றார்கள்
வாழிய இலண்டன் வாழும்
சுடரொளி இதழே, என்றும்
வாழிய கவிகள் மாட்சி
வாழ்கவே உலகம் உய்ய

# சி.டி. வடிவத்தில் நாயன்மார்கள் வரலாறு!

- திருமகள்

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில், நிறைவாக அமைந்திருப்பது பெரிய புராணம். இது திருத் தொண்டர் புராணம் என்றும், திருத்தொண்டர் மாக்கதை என்றும் அழைக்கப்படுகிறது. இதனை இயற்றியவர் சேக்கிழார்.

அக்காலத்தில் திருத்தக்க தேவர் இயற்றிய 'சீவகசிந்தாமணி' என்ற சமண காவியத்தில் சோழ மன்னன் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தான். மன்னனைச் சைவ நாட்டம் உடையவனாக மாற்ற, சிவனடியார் வரலாறுகளைச் சேக்கிழார் அவ்வப் போது எடுத்துரைத்து வந்தார்.

சோழன் அவற்றை விரும்பிக்கேட்டு மகிழ்ந்து சைவ அடியார்கள் வரலாற்றைத் தொகுத்து ஒரு காப்பியம் இயற்றித்தருமாறு சேக்கிழாரைக் கேட்டுக்கொண்டான்.

சோழமன்னனின் வேண்டுகோளை ஏற்று சேக்கிழார் தில்லைக்குச் சென்று நடராசப்பெருமானை வணங்கி நின்றார். தில்லை அம்பலவன் 'உலகெலாம்' என்று சேக்கிழாருக்கு அடியெடுத்துக் கொடுக்க அதனையே முதல் அடியாகக் கொண்டு சேக்கிழார் இயற்றியது தான் 'திருத்தொண்டர் புராணம்' என்கிற 'பெரிய புராணம்'.

சோழமன்னனின் முன்னிலையில் இந்நூல் தில்லையில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், செவிவழிச்செய்திகள் யாவும் அறிந்து தெளிந்த உண்மைகளை மட்டுமே தனது நூலில் பதிவு செய்துள்ளார். பூகோள அறிவும், காலக்கணக்குகளும், நில இயல்புகளும், இயற்கை அமைப்புகளும் இநநூலுள் மிகத் துல்லியமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆகவே, சைவ சமயத்திற்குப் பெருமை சேர்க்கும் கலைக்களஞ்சியமாக விளங்கும் நாயன்மார்களின் அருள்வரலாறுகளைக் கொண்டதே 'பெரிய புராணம்'.

வேடர் முதல் வேந்தர் வரை, வலைவாணர் முதல் கலைவாணர்கள் வரை 63 நாயன்மார்களின் பெருமித வரலாற்றைச் சேக்கிழார் இந்நூலில் பக்திச்சுவையோடு பாடிக்காட்டியுள்ளார். எந்த சாதி வேறுபாடும், எள்ளளவும் கொள்ளாமல் இந்த நாட்டவரே அன்றி எந்த நாட்டவரும், அருளாளர் களாக இருந்தால் அவர்களும் நாயன்மார்களே என்கிறது சேக்கிழாரின் இத்திருத்தொண்டர் புராணம். ஆகவே இதனை ஒரு புரட்சிப்புராணம் என்றே சொல்லலாம்.

சிவனடியார்கள் திருக்கோவில்களுக்குச் செல்லும்போது, சைவசமயப் பிரசங்க மேடைகளில் பெரிய புராணத்தை கேட்கும் வாய்ப்பை பெற்று இருக்கலாம். ஆனால் அந்த வாய்ப்பும் பாக்கிய மும் அனைவருக்கும் கிடைத்திராது என்றே சொல்லலாம்.

அந்தக் குறையைத் தீர்க்கும் விதமாக 63 நாயன்மார் அருள் வரலாறுகளையும் சமய மரபுகள் குறைவுபடாது, சமூகத்திற்குப் பயன்படும் வகையில் மூன்று வகை ஒலிக்களஞ்சியங்களாக சிவம் பெருக்கும் மூலர் பேராசிரியர் இரா. செல்வகணபதி வெளிக்கொணர்ந்துள்ளார். இவர் தருமபுரம் ஆதின கலைக்கல்லூரி தமிழ்த்துறைத் தலைவராகவும், முதல்வராகவும் இருந்து பணி ஓய்வு பெற்றவர். சைவ சமயம், வைணவம் தமிழ் இலக்கியப் பேச்சாளர். சிங்கப்பூர், மலேசியா உட்பட 3,000 க்கும் மேற்பட்ட மேடைகளில் சமயச் சொற்பொழிவுகளை ஆற்றியவர்.

மதுரை தமிழ் இசைச்சங்கத்திலும், மதுரை தியாகராயர் கல்லூரித் தொல்காப்பியர் அரங்கத்தி லும், சென்னையிலும் இவர் உயிர்ப்புடன் நிகழ்த்திய பெரிய புராண உரைகள் மற்றும் சமய-இலக்கி[யப் பேருரைகளின் தொகுப்பு இதில் இடம் பெற்றுள்ளன.

முதலாவதாக 63 நாயன்மார் அருள்வரலாறு களும் தலா 80 நிமிடங்கள் ஒலிக்கும் வகையில் 40 ஒலிக்குறுந்தகடுகளாக (Audio Compact Disk CD) வெளிக்கொணர்ந்திருக்கிறார். டாக்டர் எஸ். ஜெகத்ரட்ச கனின் கம்பீரமான தொடக்க உரையுடன், இராமநாதன், பழநியப்பன் ஆங்கிலத்தில் வழங்கிய நாயன்மார் அருள் வரலாற்றுச் சுருக்கத்துடன் பேராசியர் இரா. செல்வகணபதி பக்திச்சுவை ததும்ப பெரிய புராண நாயன்மார் வரலாற்றை இந்த ஒலித்தகடுகளில் திருமுறைப் பாடல்களையும் இணைத்து இனிய எளிய தமிழில் இடம் பெறச் செய்துள்ளார்.

நீண்ட வரலாற்றுப் பெருமிதமுடைய நாயன்மார் வரலாறுகள் தனித்தனி ஒலிக்குறுந் தகடுகளில் இடம் பெற்றுள்ளன. வரலாற்றுச் செய்திகள் குறைவாக உள்ள நாயன்மார் பற்றிய வரலாறுகள் ஒரே ஒலிக்குறுந் தகட்டில் இரண்டு அல்லது மூன்று இணைக்கப் பட்டுள்ளன.

தெய்வச்சேக்கிழாருக்கும் மனுநீதிச்சோழனுக்கும், அன்னை திலகவதியாருக்கும் தனித்தனியே குறுந்தகடுகள் அமைந்துள்ளன. 40 ஒலிக்குறுந்தகடு களிலும் 24 வகையான ஆடல் வல்லான் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

18 வகையான பின்னணி இசை கூட்டப் பட்டுள்ளன. ஆனாயர் வரலாற்றில் புல்லாங்குழலும், திருநீலகண்ட யாழ்ப்பாணர் வரலாற்றில் யாழிசை யும் இசைக்கப்பட்டுள்ளன. ஓதுவார் மூர்த்திகள் அறுவர் பாடியுள்ளனர்.

இரண்டாவதாக 63 நாயன்மார் அருள் வரலாறு களும் தனித்தனியே 40 ஒலிப்பேழைகளாகவும் வெளி யிடப்பட்டுள்ளன. ஆங்கில முகவுரை நீக்கி 65 நிமிடங் கள் கொண்ட விரிவுரையாக இவை இடம் பெற்றுள்ளன.

மூன்றாவதாக 63 நாயன்மார் அருள் வரலாறு களும் 52 மணிநேரம் ஒலிக்கும் வகையில் 4 எம்பி 3 சிடிக்களாகவும் வெளியிடப்பட்டிருக்கின்றன. நாயன்மார் வரலாற்று ஆங்கிலச்சுருக்கமும், பெரிய புராண விரிவுரையும் இதில் இடம் பெற்றுள்ளன.

தெய்வச்சேக்கிழார் மனிதவள மேம்பாட்டு அறக்கட்டளையின் உதவியோடு அருண் ஆடியோஸ் இவற்றை வெளியிடுகிறது.

அடுத்த மாதத் தொடக்கத்தில் இதன் வெளி யீட்டு விழா சென்னையில் நடத்தப்பட உள்ளது என்றும் அருண் ஆடியோஸ், சென்னை - 90 என்று பெயரிட்ட சென்னையில் மாற்றத்தக்க வங்கிக் கேட்புக்காசோலை, பணவிடை அல்லது காசோ லையை அருண் ஆடியோஸ், எச். 15/2 கரிகாலன் தெரு, கலாச்சேத்திரா காலனி, பெசன்ட் நகர், சென்னை – 90 என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற லாம் என்கிறார் பேராசிரியர் இரா. செல்வகணபதி.

## வாசகர் மடல்கள்

*அன்புள்ள சுடரொளி ஆசிரியர்*
*திரு. சம்பந்தன் அவர்களுக்கு,*

சுடரொளி இல: 6 கண்கவர் முகப்பு அட்டை யுடனும், காத்திரமான கட்டுரைகளுடனும் ஒளி வீசியதைத் தமிழ் மனங்கள் ஒப்புக்கொள்ளும். இத்தகையதொரு அரிய படைப்பை மிக இலகுவில் வெளிக்கொணர முடியாது என்பதை என்னைப் போன்றே பலரும் அறிவர். தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் நீங்கள் தொடர்ந்து செய்துவரும் சேவைகளுக்கு நன்றி.

***- பி. உமா மகாலிங்கம், இலண்டன்***

* * * *

*பேரன்புசான்ற பெருமகனார்*
*அய்.தி. சம்பந்தனார் அவர்க்கு,*

சுடரொளி இதழ் கைவரப்பெற்றேன். சிறந்த தமிழறிஞர் தனிநாயக அடிகளார் பற்றி தகவல் தகைமையாய் இருந்தது.

பல கட்டுரைகள் எதிர்காலச் சமுதாயத்திற் கான விடிவெள்ளியாய் அமைந்துள்ளன. தங்களின் இனமான உணர்வும் நாட்டுப்பற்றும் பாராட்டு தலுக்கும் போற்றுதலுக்கும் உரியது. தங்களின் தமிழ் இலக்கியப் பணி தொடரட்டும். மலேசியத் தமிழர்களும் துணை நிற்போம். - பாவலர் பே.ஆ. தமிழ்மறவன்

ஜோகூர், மலேசியா.


# MARKANDAN & SHARMA SOLICITORS

## Solicitors and Administrators for Oaths

Mr. M. Markandan Previous owner of Markandan & Co Solicitors situated at 720 Romford Road, Manor Park, London E12 6BT and Lata Sharma & Co Solicitors situated at 21 Boundary Road, Plaistow E12 9PS have opened a New Practice to deal with the following areas of Law on private basis:

- Civil Litigations
- Immigration - All countries
- Conveyancing - Residential and Commercial
- Liquor Licenses
- Traffic offences
- Magistrate Court matters
- Police station advice
- Will and Probate
- Work permits
- Matrimonial matters
- Land Lords and Tenents matters
- Sponsorship documents
- Power of attorney - Documents

PLEASE CONTACT

Mr. Markandan- 07956 386 573
Mrs. Sharma - 07939 829 644
Mr. Jasokumar - 07961 996 482

BOW BUSINESS CENTRE
153 - 159 Bow Road, London E3 2SE
Tel: 020 8981 5330 Fax : 020 8981 5350


# பண்பாட்டுக்கும் பழமைக்கும் இமய மலை

கைலை மலை ஏறக்குறைய 29 மைல் சுற்றளவுடையது.

கங்கை, பிரமபுத்திரா, சிந்து முதலிய நதிகள் இங்கிருந்து தோன்றுகின்றன.

இமயத்தின் ஆறு சிகரங்களில் கைலை மலைக்கே தனிச்சிறப்பு.

## ஓம் நமச்சிவாய



## திருக்கைலாயம்

பாரதநாட்டின் பண்பாட்டுக்கும் பழமைக்கும் அடிப்படையாக அமைந்தது இமயமலையாகும். இமயம் - பனி. இமயமலை - பனிமலை என்று பொருள். வடா அது பனிநெடுவரை எனச் சங்ககாலப் புறநானூறு கூறுகிறது. இது உலகத் தில் உள்ள எல்லா மலைகளிலும் உயர்ந்தது. இது நீளத்தில் 1500 மைல். இதன் அகலம் 200 மைல். இம்மலையில் பல சிகரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக உயர்ந்துள்ளன. அவற்றுள் 1. நங்கை பர்வதம் 2. நந்தி தேவிபர்வதம் 3. தவளகிரி 4. எவரெஸ்ட் 5. கின் சின்சிங்கா 6. கயிலை முதலிய சிகரங்கள். இவற்றுள் கயிலை தனிச்சிறப்புடைய்து. கங்கை, பிரம்ம புத்திரா, சிந்து முதலிய நதிகள் இங்கிருந்து தோன்றுகின்றன. இங்குள்ள மானசரோவர் தீர்த்தம் மிகச்சிறப்புடையது. கயிலைமலை ஏறக்குறைய 29 மைல் சுற்றளவு டையது. சுற்றில் சதுரம், முக் கோணம், வட்டம், அரைவட்டம் முதலிய அமைப்புகளில் வேலைப்பாடுடைய பகுதிகள் காட்சி அளிக்கின்றன. இமயம் முதல் கன்னியாகுமரி வரை உள்ள பகுதியில் அமைந்துள்ள கோபுர அமைப்புகள், விமான அமைப்புகள் இங்கே இயற்கையாக அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும்.

சங்க இலக்கியங்கள் காப்பியங்கள் முதலிய வற்றில் இமயமலையும் அதன் பகுதிகளும் குறிப்பிடப் பெற்றுள்ளன. திருமுறையில் கயிலை மிகச்சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. 1. கயிலை 2. கேதாரம் 3. அனேகதங்கா பருவதம் 4. இந்திர நீல பருவதம் ஆகியன இப்பகுதியில் பாடல்பெற்ற தலங்களாகும். திருக்கோயிலைப் பற்றித் தேவார மூவரும் பாடி உள்ளனர். பதினொன்றாம் திரு முறையில் கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி திருக்கயிலாய ஞான உலா என்பன கயிலை பற்றியதாகும்.

### தீங்கு நீங்கும், நினைத்தது நடக்கும்

கயிலைத் திருநாவுக்கரசர் பாடிய கயிலைத் திருத்தாண்டகம், தமிழ் வழிபாட்டுக்கு - தமிழ் அருச்சனைக்கு மிகச் சிறந்ததாகும். திருமுறை

முழுவதும் பயில வாய்ப்பில்லாதோர், கயிலைத் திருத்தாண்டகத்தை நாள்தோறும் ஓதிவந்தால் தீங்கெல்லாம் நீங்கி, நினைத்ததெல்லாம் எய்துவர். திருநாவுக்கரசர் பாடிய திருவதிகைத் திருத்தாண் டகம், திருவாரூர் மூலட்டானத் திருத்தாண்டகம் ஆகியனவும் வழிபாட்டுக்குரியன. திருநாவுக்கரசு பெருமான்தான் முதன் முதலில் திருத்தாண்டகம் பாடியவர். அதனால் அவருக்குத் தாண்டகச் சதுரர், தாண்டகவேந்து என்கிற பெயர்கள் வழங்கப் படுகின்றன. நாற்சீர் கொண்ட அடி, அளவடி என வழங்கப்பெறுவது தமிழ் யாப்பு முறையாகும். அளவடியைத் தாண்டி எண்சீர் கொண்ட அடியா லான யாப்பு, தாண்டகம் எனப் படும். இன்றைய முறையில் எண்சீர்க்கழிநெடிலடி என வழங்கப் படுகிறது. இறைவனைப் போற்றி வழிபடுவதற்குரிய தனிச்சிறப்பு வாய்ந்தவை போற்றித் திருத் தாண்டகங்கள்.



## கயிலைத் திருத்தாண்டகங்கள் பாடிய சூழல் வரலாறு

திருநாவுக்கரசர் கயிலையைக் காணவேண்டும் என்று விரும்பியதால், திருக்காளத்தியிலிருந்து புறப்பட்டார். திருப்பருப்பத்தை வணங்கி பல மொழி பேசும் நாடுகளைக் கடந்து வாரணாசி சென்றடைந்தார். உடன் வந்தவர்களை அங்கு இருக்கச் செய்து விட்டுக் கயிலை நோக்கிப் புறப்பட்டார். நெடிய பயணத்தில் கால்களும் கைகளும் தேய்ந்தன. மார்பால் உந்திப் புரண்டு சென்றார். இறைவன் முனிவர் கோலத்தோடு தோன்றி, உறுப்புகள் அழிய என்ன கருதிச் செல்கின்றீர் என வினவினார். கயிலையைக் காணச் செல்வதாகக் கூறினார். மனிதர்களால் கயிலை யை அடைவது கடினம் என்றார் முனிவர்.

ஆளும் நாயகன் கயிலை இருக்கக் கண்டலலால்
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்

என நாவுக்கரசர் மறுத்தார். முனிவராய் வந்த இறைவன் "நாவினுக்கரசே எழுந்திரும்" என்றதும், தேய்ந்த உடலுறுப்புகள் முன்போல் ஆயின. என்னை ஆட்கொண்டு அருளிய அண்ணல் கயிலையில் வீற்றிருந்த கோலத்தைக் கண்டு தொழுவதற்கு அருள்புரிவாயாக என்றார். இறை வன் ஆகாயத்தில் தோன்றி "இப்பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் காண்பாயாக" எனப் பணித்தார். உடனே திருநாவுக்கரசு "வேற்றாகி விண்ணாகி" எனத் தொடங்கும் போற்றித் திருந்தாண்டகத்தைப் பாடினார்.

**சான்று:** திருநாவுக்கரசர் புராணம் பாடல் 370.

பதிகம் பாடிய நிலையிலேயே ஐந்தெழுத்து ஓதிப் பொய்கையில் மூழ்கினார். யாதும் சுவடுபடாமல் ஐயாற்றுப் பொய்கையில் எழுந்தார். அங்குள்ள அனைத்தும் அம்மையப்பராகக் காட்சி அளித்தன.

கயிலைக் காட்சியிலேயே திளைத்த நிலையில் திருவையாற்றில் "பொறையுடைய பூமி நீரா னாய்" என்ற தாண்டகத்தையும், பாட்டான நல்ல தொடையாய் என்ற தாண்டகத்தையும் அருளி னார்.

சான்று: திருநாவுக்கரசர் புராணம் பாடல் 381.

★★★

**யாழ்ப்பாணம் சிறிசோமாஸ்கந்த கல்லூரி யில் திருக்குறள் மையம் அமைப்பதற்கு ஆவாரங் கால் க. சின்னத்துறை அவர்கள் அனுசரணை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.**




ஓம் சிவாய நமஹ

சிவாய நம என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒரு நாளும் இல்லை வேண்டுவாருக்கு வேண்டுவதை வாரிவழங்கு

# ஈழபதீஸ்வரர் ஆலயம்

பெரிய பிரித்தானியா



**Union Road, Wembley, Middlesex HA0 4AU**

ராஜுபட்டினி நகை மாளிகைக்கு முன்பாக

**020 8902 3238**

நன்மைபெறு கருணெறியே வந்தனைந்து நல்லூரின் மன்னுதிருத் தொண்டனா
வணங்கி மகிழ்ந்தெழும் பொழுதில் உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோ
மென்றவர்தஞ் சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

எமது ஈழத்திலுள்ள ஐந்து ஈஸ்வரர் ஆலயங்களுடன் ஆறாவது ஆலயமாக இலண்ட மாநகரில் எமது ஈழபதீஸ்வரர் ஆலயம் அமைந்துள்ளது. உலகெங்கும் பரந்து வாழு ஈழமக்களின் துயர் துடைக்க, இவ்வாலயத்தில் காலை 9:00 மணிக்கும் பகல் 12:00 மணிக்கும் மாலை 8:00 மணிக்கும் நித்திய பூசையும், பிரார்த்தனையும் நடைபெறுகின் அத்துடன் போரினால் மடிந்த எமது உடன் பிறப்புகளின் ஆத்மா சாந்திக்காக தினமே பூஜையின் பின்பு அடியார்களினால் மௌன அஞ்சலி செலுத்தப்படுகின்றது.

திருக்கோயில் திறந்திருக்கும் நேரங்கள்

காலை 8:00 மணி முதல் இரவு 9:30 மணி வரை

**பூசை நேரங்கள்**

கோடை காலங்களில் (summer)

காலை 9:00 மணி
மதியம் 12:00 மணி
இரவு 8:00 மணி

குளிர் காலங்களில் (Wi

காலை 9:00 மணி
மதியம் 12:00 ம
இரவு 7:30 மணி
வெள்ளி இரவு 8:00 ம

அனைவரும் வருக! ஈழபதீஸ்வரர் அருளைப் பெறு

# MITHUS JEWELLERY

322 London Road, Croydon CRO 2TJ
Tel: 020 8683 1756 Fax: 020 8683 1792

## DIAMONDS PALACE

மங்கையார்க்கு
எழில் சேர்க்க
வைர மாளிகை.
புதுப்பொலிவு நிதம்
பரவ வைரமாளிகை.
பொன்னகைக்கு
மறு பெயர்தான்
வைரமாளிகை.
மண்ணுலகில் மயன்
படைத்தான்
வைரமாளிகை.
ஆமாம்
செல்லுமிடமெல்லாம்
அதே பேச்சு




76 Tooting High Street
London SW17 0RN
Tel: 020 8767 5333
Fax: 020 8767 5814

open 7 days a week

கொழும்பில் நடைபெறவுள்ள 'செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்' நூல் வெளியீட்டு விழா மற்றும்
2-ஆவது உலகத் தமிழ்க் கவிதைப் போட்டி பரிசளிப்பு விழா அன்பளிப்பாளர்கள் (Sponsor)

இலண்டன் வைர மாளிகை..



TILKO Holidays

## HOME SWEET HOME

பல காலமாக நீங்கள் பிறந்த மண்ணில்

கால்பதிக்க முடியவில்லை என்ற ஆதங்கமா?

Tilko has been serving to the Tamil community for more than 16 years in London

**Now Offering Excellent Comfortable Accommodation in the Heart of our Homeland**

Tilko Holiday's **Hotel and Guest Houses** throughout Sri Lanka offer:

* A/C Non A/C Suites/Rooms
* Attached bathroom with hot water facilities
* Transport arranged
* Clean and delicious food
* Fully trained and caring staff

**Call Tilko Holidays**

**London: +44 7957 400 777**
**+44 20 8472 0029**
**kohila021@yahoo.co.uk**



TILKO PROPERTY SERVICES

| Jaffna: | Colombo: | Trincomalee: |
| --- | --- | --- |
| + 94 21 222 5969 | +94 112 713803 | +94 262 223900 |

H.O. : 213, High Street North
East Ham London E6 1JG
Tel : 020 8472 0029
Fax : 020 8503 5993

B.O. : 252, Hoe Street,
Walthamstow, London E17 3AX
Tel : 020 8520 9968 /
Fax : 020 8503 7661

B.O. : 1 Leytonstone Road,
Statrford, London E15 1JA
Tel : 020 8503 1999
Fax : 020 8503 0999